மாதம் இருமுறை

# எங்கள் தேசம்

එංගල් දේසම්

QD/28/NEWS/2013

Engal Thesam

மலர்: 12 இதழ்: 11 246 ஜுன் 01-14 2013 விலை: ரூபா. 30.00



# கல்வியல் கல்லூரி என்ன நடக்கிறது?

பல்கலைக்கழக அனுமதியைப் போன்று மிகவும் போட்டி நிறைந்த ஒன்றாக இன்று கல்வியல் கல்லூரி அனுமதியும் மாறியிருக்கின்றது. இத்தகைய உயர் எதிர்பார்ப்பில் கல்வியல் கல்லூரி அனுமதியை நாடும் மாணவர்கள் மிக மோசமான அலைக்கழிவிற்கும் பாரபட்சத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். கல்வியல் கல்லூரி அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் பல குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் காணப்படுவதாக மாணவர்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர்.

## முஸ்லிம் அரசியலை ஓட்டும்
# காசு-மரம்

அமீர் அலி மு.கா.வுக்குள் வந்தால் பஷீர் சேகுதாவூத் தவிர, சம்பந்தப்பட்ட முத்தரப்புக்கும் அது இனிப்பான செய்திதான். ஏனென்றால், மு.கா.விலிருந்து பிரிந்து சென்று தனிக் கட்சி அமைத்து தனக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனிடமிருந்து அமீர் அலியைப் பிரித்தெடுத்து ரிஷாதுக்கு சவால் விடுவதென்பது ஹக்கீமுக்கு எவ்வளவு இனிப்பான விடயமாக இருக்கும்? அதே வேளை, உள்வீட்டுக்குள்ளேயே சவால் விட்டுக் கொண்டிருக்கும், பஷீருக்குப் போட்டியாக அமீர் அலியை உருவாக்கி விட்டால் பஷீரிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் வேலையும் மிச்சமாகிவிடும்.

# மின் கட்டண அதிகரிப்பு ஆர்ப்பாட்டம்
## 'சொக்' அடித்தது யாருக்கு?

மின்சாரக் கட்டண உயர்வை துருப்புச் சீட்டாக எடுத்து, தமது அரசியல் அஜண்டாவை நகர்த்த எதிர்க்கட்சிகள் முழுப் பிரயத்தனம் செய்தன. இதனால் உசுப்பேறிய அரசாங்கம் நீங்கள் செய்வதை செய்யுங்கள் நாம் ஒன்றுக்கும் அசைய மாட்டோம் என வீம்பு காட்டியது. இவற்றுக்கிடையில் நசுபட்டுப்போன சனங்கள், வேறு வழியின்றி நகைகளை அடகு வைத்தாவது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வங்கிகளின் நீண்ட வரிசையில் நிற்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

# சிரியா:
## மேற்கின் ஆடுகளம்

அண்மிய சிரியாவை மையப்படுத்திய சர்வதேச நகர்வுகளை நோக்கும்போது, சர்வதேச சக்திகள் தமது சுயநல அரசியலை அதனூடாக போஷித்துக் கொள்கின்றமை தெளிவாகிறது. அமெரிக்க ரஷ்ய கூட்டு அதனை நிறுவுகிறது. இஸ்ரேலின் மௌனம் அதற்கு இன்னும் பலம் சேர்க்கிறது. துருக்கியும் கட்டாரும் மட்டுமே சிரிய புரட்சிப் படையினருக்கு பலமாக இருக்கிறது. ஏனைய நாடுகள் வெறும் வாய்ப்பேச்சில் ஆதரவு அளிக்கின்றன. எனவே, சர்வாதிகாரி அஸத் புதிய அமெரிக்க ரஷ்யக் கூட்டினால் பலமடையப் போகிறார்.

Design: Kahatowita Sinan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

# மீள்குடியேற்றப்படாத அகதிமுகாம்; சவால்களுக்கு மத்தியில் சம்பூர் மக்கள்

-றபாஸ்தீன் ஏ லத்தீப்-

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனாலும், ஆங்காங்கே மீள்குடியேற்றப்படாத அகதி முகாங்களுக்கும் அதன் துயரங்களுக்கும்தான் குறைவில்லை.

சம்பூர் கிழக்கு-மேற்கு, சூராக் குடா, மூதூர் தெற்கு, கங்குவேலி, கிளிவெட்டி, பட்டித்திடல் போன்ற பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாத பல நூறு குடும்பங்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

யுத்தத்திற்குப் பிந்திய காலப் பகுதியில் இப்பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் எண்ணிலடங்காதவை. இடம்பெயர்ந்த அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினை, கல்வி, கலாசாரப் பாதிப்புகள், காணிகள் அபகரிப்பு போன்றவை சம்பந்தமாக சிவில் சமூக தொண்டர்கள், விவசாய மீன்பிடிச் சங்கத் தலைவர்கள் கிளிவெட்டி நலன்புரி நிலையங்களில் வாழும் அகதிகள் என பலரை சந்தித்தபோது, சமாதான சூழ்நிலையிலும்கூட இப்படி அல்லல்படும் நிலையில் மக்கள் இன்றும் இருக்கின்றனரா என்ற வியப்பே எழுகிறது.

பொருளாதார அபிவிருத்திக்கென்றும் உயர் பாதுகாப்பு வலயத்துக்கென்றும் 1418 ஏக்கர் காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளதால் சம்பூரில் பாரம்பரியமாக வாழ்ந்த நிலங்கள் மற்றும் குடியிருப்புக் காணிகளை இழந்து இம்மக்கள் தவிக்கின்றனர்.

கிளிவெட்டி நலன்புரி நிலையத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தகரக் கொட்டில்களிலும் உறவினர்களின் வீடுகளில் வாழுகின்ற பரிதாபக் காட்சியைக் காணும்போது மக்களை விரட்டியடித்து ஓர் அபிவிருத்தித்திட்டம் தேவைதான என்ற கேள்வி மேல் நிற்கிறது.

எட்டு ஆண்டுகளாக அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் வேதனைகளையும் கண்ணீருடன் விபரித்தனர்.

“அரசாங்கம் வழங்கிய நிவாரணத்தை 2011 டிசம்பருக்குப் பின்னர் நிறுத்தி விட்டது. மின்சாரம், குடிநீரைத் தவிர வேறு எந்த உதவியும் அரசாங்க தரப்பிலிருந்து கிடைப்பதில்லை”

என ரவீந்திரநாதன் என்ற வயோதிபர் தெரிவித்தார்.

“அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் 42 குளங்கள், 273 ஏக்கர் வயற் காணிகள், 146 ஏக்கர் குடியிருப்புக் காணிகள், 120 ஏக்கர் தோட்டக் காணிகள், 21 கட்டு வலை மீன்பிடித் தளங்கள், 8 செங்கல் சூழைகள், 1 வைத்தியசாலை, 1 பாலர் பாடசாலை, 2 கோயில்கள் அடங்குகின்றன”

என இடம்பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் கே. நாகேஸ்வரன் தெரிவித்தார்.

தமது பூர்வீகம் பாதிக்கப்பட்டு முகாம்களில் உள்ள மக்கள் மன உளைச்சலுடன் வாழ்கிறார்கள். அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒவ்வொரு முறையும் வாக்குறுதிகளை அளிக்கின்றனர் ஆனால் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் விஷேட பொருளாதார வலயத்திற்கு வெளியில் இருப்பவர்களை மீளக் குடியேற்றுவதில் தாமதம் இருப்பதாக பாதிக்கப்பட்டோர் குற்றம் சுமத்துகின்றனர்.

கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயத்தில் வேளாண்மை செய்வதற்கும் ஆலயங்களில் வழிபாடு செய்வதற்கும் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். நீதி வேண்டி ஏழுபேர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, அந்த சலுகையும் மறுக்கப்பட்டு விட்டதாக சம்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மயில்வாகனம் கிருஷ் ணபிள்ளை தெரிவித்தார்.

அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட அசரசாங்கம் தனது அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பொருத்தமான இடமெனக் கருதி சம்பூரை சுவீகரித்துள்ளது.

அரசாங்கம் வேறு இடத்தில் மீள் குடியமத்தினால் ஏற்றுக் கொள்வீர்களா? என்று வினவிய போது, அரசாங்கம் பொருத்தமற்ற இடத்தையே தெரிவு செய்து குடியேறச் சொல்வதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

சம்பூரில் வீடு வாசல், வயல், மீன்பிடித் தொழில் என வசதி வாய்ப்புகளுடன் செல்வமாக வாழ்ந்தவர்களுக்கு வெறும் 40 பேர்ச் காணியில் வாழ்வதென்பது கடினமான காரியம்தான். பொருளாதார வலயத்திற்குரிய காணியைவிட, வெளியிலிருக்கும் காணிகளை விடுவித்து மீளக் குடி யேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறார்கள் இங்குள்ள மக்கள்.

தாம் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி வழமையான வாழ்வைத் தொடங்கும் நாள் எப்போது பிறக்கும் எனும் பாரிய கேள்விக் குறியுடன் இம் மக்கள் வாழ்வதை அவதானிக்க முடிந்தது.

பாடசாலை செல்லும் சிறுவர்களின் கல்வியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இது இம்மக்களின் எதிர்கால சமூக உயர்வுக்குப் பெரும் தடையாக உள்ளது.

மூதூர் தெற்கு பட்டித்திடல், சிறிசித்தி விநாயகர் விவசாய சம்மேளனத்தின் தலைவர் வேல்மாறன் படுகாடு காணிப் பிரச்சினை சம்பந்தமாக தெரிவிக்கையில்; 1956 மே காலப்பகுதியில் காடுவெட்டி அனுமதிப் பத்திரம் பெற்ற சுமார் 1500இற்கு மேற்பட்ட விவசாயக் காணிகள் தமிழ்-முஸ்லிம்களுக்கு சொந்தமானவை. 1985ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான யுத்த சூழ்நிலை காரணமாக பயிர் செய்கையில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது. பின்னர் 2006இல் மாவிலாறு யுத்தம் ஏற்பட்ட பின்னரும் அப்பிரதேசங்களுக்கு செல்ல முடியாமல் போனது.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் சொந்தக் காணிகளைப் பராமரித்து பயிர்ச் செய்ய முற்படுகையில் தெஹிவத்தையிலுள்ள பௌத்த மத குருவும் அவரது குடும்பத்தினரும் அத்துமீறி அடாவடித்தனமாக விவசாயம் செய்து வருகின்றனர். இது குறித்து அரசியல்வாதிகள் தொடக்கம் அதிகாரிகள் வரை முறையிட்டும் பயன் ஏதும் கிடைக்கவில்லை என தெரிவிக்கும் இங்குள்ள மக்கள் 1972ஆம் ஆண்டு முடிக்குரிய காணி அனுமதிப்பத்திரத்துடன் நீதி மன்றம் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

**நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தகரக் கொட்டில்களிலும் உறவினர்களின் வீடுகளில் வாழுகின்ற பரிதாபக் காட்சியைக் காணும்போது மக்களை விரட்டியடித்து ஓர் அபிவிருத்தித் திட்டம் தேவைதான என்ற கேள்வி மேல் நிற்கிறது.**

# புத்தளத்தின் வர்த்தக வரலாற்றில் ஒரு பொன் நாள்

ஹிஷாம் ஹுஸைன்

புத்தளம் வரலாற்றில் முதல் முறையாக, வர்த்தக நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர் சிப்பந்திகளுக்கான விஷேட பயில்நெறி அண்மையில் நடத்தப்பட்டது. Friends Of Insight புத்தளம் வட்டம் ஏற்பாடு செய்த இப்பயிற்சிநெறி ‘Customer mean Business’ (வாடிக்கையாளர்தான் வர்த்தகம்) எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது. இஸ்மாயில் ஏ. அஸீஸ் MBA (Reading), ACS, DICS (UK) வளவாளராகக் கலந்து கொண்டு நடத்திய முழு நாள் விஷேட பயிற்சிநெறி, கற்றல் விளையாட்டுக்களுடன் களிப்பூட்டும் விதமாக அமைந்திருந்தது. புத்தளம், அனுராதபுர வீதியில் அமைந்துள்ள DC Poolஇல் நடத்தப்பட்ட இப்பயில்நெறியில் 40 பயிலுனர்கள் பயன் பெற்றனர். பயில்நெறியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வர்த்தக நிறுவனமொன்றின் உரிமையாளர் முதலாளிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான பாலமாக செயற்படுபவர் அந்நிறுவனத்தின் ஊழியர் சிப்பந்தி (salesman) ஆவார். அவர் வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்புக்களை சரியாக கணித்து வைத்திருப்பார். தான் வேலை செய்யும் நிறுவனத்தை நாடிவரும் வாடிக்கையாளரை அரவணைக்கும் அல்லது விரட்டி விடும் மந்திர சக்தி சிப்பந்தியிடம் உள்ளது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

இந்தளவு முக்கியத்துவம் வய்ந்த சிப்பந்தி எனும் பதவிக்கான அடிப்படைத் தகைமைகளாக பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவர் அல்லது கா.பொ.த. இல் தோல்வியடைந்தவர் போன்ற எழுதப்படாத விதிகள் கருதப்படுகின்றமை. இந்நிலையில் இவர்களுக்கென்று சிறப்பான பயில்நெறிகள் தமிழ் மொழி மூலம் போதுமான அளவு இல்லை என்ற யதார்த்தமும் ஒருபுறமிருக்க, இருக்கின்ற ஓரிரு பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதில் முதலாளிமார்களுக்கு போதுமான அக்கறை இல்லை என்ற உண்மையும் மறுப்பதற்கில்லை.

இந்நிலை தொடர்ந்தால் வர்த்தகத்துறை சரிந்து விழும் என்ற எதிர்விளைவைக் கணித்த வியாபார கற்கைக்கான நிறுவனம், Insight Business School நாடளாவிய ரீதியில், வாடிக்கையாளர் கவனிப்பு தொடர்பான பயில்நெறிகளை நடத்தி வருகின்றது. இவர்களின் முயற்சியின் பயனாக, தற்போது வர்த்தக சமூகத்திடம் நல்ல மாற்றங்கள் தளிர்விடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

புத்தளம் நகரின் வர்த்தகத் துறையின் நிலைமையைக் கருத்திற் கொண்டு Friends Of Insight புத்தளம் வட்டம் ஏற்பாடு செய்த மேற்படி முழு நாள் பயில்நெறியில் புத்தளம் நகரின் வர்த்தக நிறுவனங்களில் தொழில் புரியும் சிப்பந்திகள் கடை உரிமையாளர்களும் உட்பட கலந்து கொண்டனர்.



அநுராதபுரம், அஸரிக்கமவிற்கு சர்வவோதய அமைப்பால் மருந்து தெளிக்கப்பட்ட நுளம்பு வலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சர்வோதய அதிகாரியொருவரால் வித்தியாலய அதிபர் ஜே. அமானிடம் நுளம்பு வலை கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: அபூபக்கர் முஹமத் ராபி



கல்பிட்டியில் புதிய சுற்றுலா நீதவான் நீதிமன்றக் கட்டிட நிர்மாண வேலைகளை நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரஊப் ஹக்கீம் நேரில் சென்று பார்வையிடுவதையும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் மற்றும் நீதியமைச்சின் பொறியியலாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண அதிகரிப்பு ஆர்ப்பாட்டம்




# 'சொக்' அடித்தது யாருக்கு?

மின்சாரக் கட்டண உயர்வை துருப்புச் சீட்டாக எடுத்து. தமது அரசியல் அஜண்டாவை நகர்த்த எதிர்க்கட்சிகள் முழுப் பிரயத்தனம் செய்தன, இதனால் உசுப்பேறிய அரசாங்கம் நீங்கள் செய்வதை செய்யுங்கள் நாம் ஒன்றுக்கும் அசையமாட்டோம் என வீம்பு காட்டியது, இவற்றுக்கிடையில் நசுபட்டுப்போன சனங்கள் வேறு வழியின்றி நகைகளை அடகு வைத்தாவது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வங்கிகளின் நீண்ட வரிசையில் நிற்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

நீங்கள் என்னதான் தலைகீழாக நின்றாலும் நாம் செய்வதை செய்தே திருவோம் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம்.

மின்சாரக் கட்டணம் நாட்டில் என்றும் இல்லாதவாறு மிகக் கூடுதலான தொகையால் அதிகரிக்கப்பட்டது. விலைவாசி காரணமாக சாதாரண மக்களின் வாழ்க்கைச் சுமை மிக மோசமான நிலையை அடைந்திருக்கும் இத் தருணத்தில், மின்சாரக் கட்டண அதிகரிப்பானது பொதுமக்களுக்கு குருவித் தலையில் பணங்காய்க் கதையாகத்தான் இருக்கும் என்பது அரசாங்கத்துக்கு தெரிந்தும் சீரற்ற நிருவாகம், ஊழல் என்பவற்றால் நஷ்டமடைந்துள்ள இலங்கை மின்சார சபையைக் கட்டியெழுப்ப பொதுமக்களின் வயிற்றிலடிக்கவே முடிவு செய்தது.

ஏற்கனவே மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க சில போது மின்சாரக் கட்டண உயர்வு யோசனைக்குத் தலையசைக்காமல் இருந்ததினாலேயே அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு எதற்கும் தலையாட்டக் கூடிய பவித்ரா வன்னியாரச்சியை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சராக நியமித்ததாக அப்போதே கிசுகிசுக்கப்பட்டது. அதனை நிரூபிப்பது போன்றே மின்கட்டண உயர்வையடுத்து இரண்டு அமைச்சர்களும் சண்டை பிடித்துக் கொண்டமையும் ஜனாதிபதி தலையிட்டு இருவரும் வாயைப் பொத்துங்கள் எனக் கூறியமையும் அமைந்திருந்தது.

மறுபக்கம், மின்சாரக் கட்டண உயர்வை துருப்புச் சீட்டாக எடுத்து, தமது அரசியல் அஜண்டாவை நகர்த்த எதிர்க்கட்சிகள் முழுப் பிரயத்தனம் செய்தன. இதனால் உசுப்பேறிய அரசாங்கம் நீங்கள் செய்வதை செய்யுங்கள் நாம் ஒன்றுக்கும் அசைய மாட்டோம் என வீம்பு காட்டியது. இவற்றுக்கிடையில் நசுபட்டுப்போன சனங்கள் வேறு வழியின்றி நகைகளை அடகு வைத்தாவது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வங்கிகளின் நீண்ட வரிசையில் நிற்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக கடந்த மே 21ஆம் திகதி பாரிய பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளுக்கு எதிர்க்கட்சிகளும் சில தொழிற் சங்கங்களும் இணைந்து அழைப்பு விடுத்திருந்தன. இதனை சவாலாக எடுத்துக் கொண்ட அரசாங்கம் இந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை எப்படியாவது முடக்கி விடவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வலுவிளக்கச் செய்யும் பிரயத்தனங்களை மேற்கொண்டதே தவிர, மக்களின் எதிர்ப்புக்கு பதில் சொல்லத் தயாராகவில்லை.

வழமையாக 20ஆம் திகதி வழங்கப்படுகின்ற அரச ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளத்தை அன்றைய தினத்தில் வழங்காது, பணிப் பகிஷ்கரிப்புக்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த 21ஆம் திகதியே வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்தது. இது தமது எதிர்ப்புப் போராட்டத்தை முடக்க கையாண்ட குள்ளத்தனமான ஒரு முடிவு என எதிர்க்கட்சிகள் முழங்கிய போதும் அதையெல்லாம் அரசாங்கம் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

திட்டமிட்டபடி மே 21ஆம் திகதி பணி முடக்குப் போராட்டம் நடந்தது. தேசிய வேலை நிறுத்தப் போராட்டத்தை முடக்க அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து குள்ளநரித் தந்திரங்களையும் முறியடித்து பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வெற்றியடைந்ததாகவும் அரசாங்கத்துக்கு இது பெரும் அழுத்தத்தை வழங்கி இருப்பதாகவும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.


ஆனால், பணி முடக்குப் போராட்டம் என்ற பெயரில் எதிர்க்கட்சியினரும் அரசசார்பற்ற சர்வதேச அமைப்புகளும் அரசாங்கத்தைக் கவிழ்க்க எடுத்த முயற்சிக்கு தொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. 93 வீதமான அரச, தனியார்த்துறை ஊழியர்கள் அன்றைய தினம் வேலைக்கு சமூகமளித்திருந்தனர் எனத் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே பதிலடி கொடுத்திருந்தார்.

இதை உறுதிப்படுத்துவது போல், விசித்திரமான சம்பவம் ஒன்று குறித்தும் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. தேசிய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த பிரதான எதிர்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் மனைவிகூட அன்றைய தினம் களனி பல்கலைக்கழகத்துக்குச் சென்று விரிவுரை நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாந்து பாராளுமன்றத்தில் தெவித்தார்.

இந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வெற்றியடையாமைக்கு காரணம் தெரிவித்த தொழிலாளர்கள் இதுவொரு காலம் கடந்த ஞானம் என்றும் அரசியல் சாயம் பூசப்பட்ட நகர்வு என்றும் கருத்துத் தெரிவித்தனர்.


எனவே, கூட்டிக் கழித்துப் பார்த்தால் இது விடயத்தில் அரசாங்கத்துக்கோ எதிர்க்கட்சிகளுக்கோ மக்கள் மீது எந்த அக்கறையும் இல்லை என்றே தெரிகிறது.

தாம் நினைத்த பாட்டிற்கு விலைவாசியை அதிகரித்துச் செல்வதையே நோக்காகக் கொண்டிருக்கிறது அரசாங்கம். அதனைத் தூக்கிப் பிடித்தே தமது அரசியல் வண்டியை நகர்த்துகின்றன எதிர்க்கட்சிகள். இடையில் 'சொக்' அடித்து மரணத் தருவாயில் கிடப்பது மகா ஜனங்கள்தான்! ■



## மின் பாவனையாளர்களே!

## இது எங்கள் ஆலோசனை



**என்றுமில்லாதவாறு மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலதிக செலவை ஈடு செய்ய வழிதேடி மின் பாவனையாளர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்**

**ஏன் மேலதிக செலவு வேண்டும்? கொஞ்சம் சிக்கனம் இருந்தால் போதும்.**

**இதோ உங்களுக்கு சில ஆலோசனைகள்**

- ■ மின் குமிழ்கள், மின் விசிறிகளைத் தேவையான நேரத்துக்கு மட்டும் பாவித்து விட்டு பின் அணைத்து விடுங்கள்.
- ■ மதில் சுவர்களிலும் தேவையற்ற இடங்களிலும் அழகுக்காகப் பொருத்தி வைத்திருக்கும் எந்த மின் குமிழ்களையும் எரிய விடாதீர்கள்.
- ■ அதிக வோல்டேஜ் உள்ள குமிழ் வடிவான மின் குமிழ்களுக்குப் பதிலாக மின்சாரத்தை சிக்கனமாக்கக் கூடிய குறைந்த வோல்ட்டேஜ் உள்ள மின் குமிழ்களைப் பாவியுங்கள்.
- ■ குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து மூடுவதைத் தவிருங்கள்.
- ■ ஒரு நேரத்துக்கு அல்லது ஒரு நாளைக்குரிய சமையற் பொருட்களை குளிர் சாதனப் பெட்டியில் இருந்து ஒரே தடவையில் வெளியில் எடுத்து வைத்துப் பயன்படுத்தலாம்.
- ■ அடிக்கடி மின்னமுத்தியைப் பாவிக்காமல் சில நாட்கள் அணியக்கூடிய ஆடைகளை ஒரே தடவையில் அயன் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.
- ■ கணினி பாவிப்பவர்கள் இடையில் நீண்ட நேரம் ஓய்வெடுக்க நேர்ந்தால் காண்திரையை (Monitor) ஆப் செய்து விட்டு செல்லுங்கள்.

-எங்கள் தேசம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 12 இதழ் : 11 ஜூன் 01 - 14. 2013

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# இறைச்சிக்கடை விவகாரம்: நிதானமாக செயற்படுவோம்!

மாட்டிறைச்சிக்கடை விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது. இறைச்சிக்காக மாடுகள் அறுக்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்ற கோஷம் சில பேரினவாத சக்திகளால் முழங்கப்படுகிறது.

நீண்ட காலத்துக்கு முன்பே முளைவிட்ட இந்த எதிர்ப்பு அலை, திட்டமிட்ட அடிப்படையில் நகர்த்தப்பட்டு வந்தது. இருந்தும் வெசாக் தினத்தன்று கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் தீக்குளித்து கடுமையான எரிகாயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த போவத்த இந்ர ரத்ன தேரரின் மறைவையடுத்து இன்று இறைச்சிக்கடை விவகாரம் மேலும் பூதாகரமாகியிருக்கிறது.

குறித்த தேரரின் தீக்குளிப்பு அவரின் தனிப்பட்ட பிரச்சினைக்கான தற்கொலை முயற்சி என்று விமர்சிக்கப்பட்டாலும் மாட்டிறைச்சிக் கடைகளை நாட்டில் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலான தீக்குளிப்பு என்றே காரணம் சொல்லப்படுகிறது.

இத்தீக்குளிப்பும் அதன் பின்னணியும் தனியாக ஆராயப்பட வேண்டியவை. ஆனால், அவரின் மரணத்தின் பின்னர் தற்போது எழுந்திருக்கும் மாட்டிறைச்சிக்கடை எதிர்ப்பு அலை குறித்து முஸ்லிம் சமூகம் சற்று நிதானமாக சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது.

அதேவேளை, அகிம்சையைப் போதிக்கும் பௌத்த மதம் உயிர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கிறது என்பது பொதுவான விடயமாகும். அதன்படி ஒழுகுபவர்கள் மாடறுப்பை மட்டுமல்ல ஆடு, கோழி, பன்றி, முயல் என எந்தவொரு மிருகத்தையும் கொல்லவோ, புசிக்கவோ கூடாது. இருந்தும், மாடுகள் அறுக்கப்படுவதற்கு எதிராக மாத்திரம் போர்க்கொடி தூக்குவதன் பின்னணி எல்லோருக்கும் தெரிந்ததே.

எனவே, எவர் தீக்குளித்தாலும் குளிக்காவிட்டாலும் பெரும்பாலும் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம் என்பதால் இறைச்சிக்கடை என்பது சில பேரினவாதிகளுக்கு ஒரு துடுப்புச் சீட்டுத்தான். அதனால், இவ்விவகாரம் அவ்வப்போது எழுவதும் அடங்குவதுமாக இருந்து கொண்டே இருக்கும்.

எனவே, இறைச்சிக்கடை விவகாரத்தில் முஸ்லிம் வியாபாரிகளும் பொதுவாக மாடறுப்பு விடயத்தில் முஸ்லிம் சமூகமும் சாணக்கியமான சில அணுகுமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது.

எந்தவொரு குக்கிராமமாக இருந்தாலும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவொரு மாட்டிறைச்சிக் கடையோ, விற்பனை நிலையமோ இயங்கக் கூடாது. அப்படி அனுமதி பெற்ற இறைச்சிக் கடைகளும் பாரம்பரிய முறையிலன்றி நவீன விற்பனை முறைகளைக் கையாள வேண்டும்.

அறுபடக்கூடிய மாடுகளுக்குண்டான சுகாதாரத் திணைக்களத்தின் வரையறைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இறைச்சிக்காக அறுபடக்கூடிய மாடுகளுக்கென சில விதிமுறைகளை சுகாதார திணைக்களம் குறித்திருக்கிறது. இவ்விதிமுறைகளை புறக்கணிப்புச் செய்வது எமக்குண்டான சலுகைகளை நாங்களே இழப்பது போலாகும்.

குறிப்பாக, இள வயதுள்ள மாடுகளை அறுப்பது, வயிற்றில் கன்று வளர்ந்த மாடுகளை அறுப்பது, நோயுள்ள மாடுகளை அறுப்பது போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன.

மாட்டு இறைச்சியை இரத்தம் சொட்டச் சொட்ட காட்சிப்படுத்திக் கொண்டு, அருவருக்கத்தக்க நிலையில் உடம்பெல்லாம் இரத்தக் கறை படிந்த நிலையில் நடத்தும் பாரம்பரிய விற்பனை முறை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். இந் நடைமுறையில் மாற்றம் கொண்டு வந்து நவீன விற்பனை முறைகளைக் கையாள வேண்டும்.

கால்நடைகளை அறுப்பதற்காகக் கொண்டு செல்லும்போதும் இறைச்சிகளை ஏற்றிச் செல்லும்போதும் பிற மதத்தவரின் விமரிசனத்துக்குள்ளாகா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் இஸ்லாம் போதிக்கும் ஜீவ காருண்யம், சுத்தம் என்பவற்றைக் கடைபிடிக்க வேண்டும்.

உழ்ஹிய்யா, குர்பான் போன்ற விடயங்களிலும் முஸ்லிம் சமூகம் நிதானமான நடைமுறைகளைக் கையாள வேண்டும். இவ்விவகாரத்தில் முஸ்லிம்கள் பிற மதத்தவர்களுக்கு தமது நடவடிக்கைகளின் மூலம் முன்னுதாரணமாகத் திகழவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

# குற்றவாளிகளை சிறைக்கனுப்புவதன் நோக்கம் நிறைவேறுகிறதா?

சட்டத்தரணி பாறூக் சாஹிப்

தவறு செய்தவனை குற்றவாளி எனத் தீர்மானிக்கின்ற அதிகாரம் நீதிமன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்புகளின் மூலம் குறித்த காலத்திற்கு சிறை வைக்கப் பட்டு, பின்னர் விடுவிக்கப்படுகிறான் அல்லது நீண்டகால தண்டனையை அனுபவிக்கிறான். இவ்வாறு குற்றவாளிகளை சிறைக்கனுப்பு வதன் நோக்கம் குற்றவாளிகள் மீண்டும் தவறு செய்யாமல் திருத்துதல் அவ்வாறே மற்ற வர்களை குற்றம் செய்வதிலிருந்து தடுத்தல், பொதுமக்களைப் பாதுகாத்தல் போன்றவை யாகும். எனவே, சட்டவிரோத செயலில் ஈடுபட்ட ஒருவரின் மாற்றப்பட்ட வாழ்க் கையின் ஆரம்பமாகவே சிறைச்சாலைகள் இருக்கின்றன.

அதேவேளை இந்த சிறைச்சாலைகள் சில தீங்குகளுக்கும் வழியமைக்கிறது. அதாவது, ஒரு சாதாரண குற்றத்தைச் செய்துவிட்டு சிறைக்குச் செல்கின்றவர்கள் மிகவும் கொடு மையான, மனிதாபிமானமற்ற, மூர்க்கத்த னமான குற்றவாளிகளுடன் கலப்பதற்கும் அதிக சந்தர்ப்பங்கள் இருப்பதால் இவர்களும் அவர்களைப்போன்று, பாரதூரமான குற் றங்களைப் புரிவதற்கான இலகு வழிகளை யும், நுட்பமுறைகளையும், நவீன பொறிமு றைகளையும், சிறையிலிருந்தவாறே கற்றுக் கொள்ளக்கூடும். எனவே, அவ்வாறானவர் கள் மீண்டும், மீண்டும் குற்றம் புரிபவர்களாக வும்சிலபோதுகளில் அவ்வாறான குற்றவாளிக ளைக் கண்டுபிடிப்பது காவல்துறைக்கு சவா லாகவும் மாறி விடுகிறது. பொதுவாக சிறைச் சாலைகளில் உண்டாகும் நட்பு சிறைகளை விட்டு வெளியேறும்போது தொடர்கதை யாக மாறி விடுகிறது என்றே கூறலாம்.

தனக்கு சிறைத் தண்டனை கிடைக்கும் என்ற வெளிப்படையான சட்ட ஏற்பாடு தெரிந்த ஒருவர் குற்றம் செய்வதிலிருந்து தன்னை விடுவிக்க முனைகின்றாரா என்றால் நிச்சயமாக இல்லை. சட்டத்தின் பிடியிலி ருந்து என்றோ ஒரு நாள் எம்மால் தப்பித்துக்

**நாட்டிலுள்ள சிறைக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அரசாங்கத்தின் செலவினங்களும் அதிகரிக்கும். அதேபோன்று உடைந்து போகும் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.**

கொள்ள முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைதான் இதற்குக் காரணம். இந்நம் பிக்கை மேலெழும்போது குற்றம் செய்வது சர்வ சாதாரணமாக மாறி விடுகின்றது. எம் மால் சிறையிலிருந்து தப்பவே முடியாது என்ற நிலைப்பாடு காணப்படும் என்றால் குற்றங்களை கணிசமான அளவு குறைக்க லாம். எனவேதான், குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யாமல் தடுக்க சிறைச்சாலைகள் மூல காரணமாக அமைய வேண்டும். நிலமை இன்று அவ்வாறில்லை; சிறைவாசம் அனுப விப்பவர்களைப் பார்த்து, சமூகத்திலுள்ள மற்றவர்களும் பயந்து, உணர்ந்து நடக்க மறைமுக காரணியான சிறைத் தண்டனை இருந்தும் 'சிறைத் தண்டனைக்குட்பட்டுள் ளனர்' என்ற பல செய்திகளே ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன; குற்றங்கள் குறைந்த பாடில்லை.

பொதுமக்களைப் பாதுகாத்தலே குற்ற வாளிகளை சிறைக்கனுப்புவதன் மற்றுமொரு பிரதான நோக்கமாகும். இந்நோக்கத்தைப் பொறுத்தவரை குறித்த குற்றவாளி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியில் மட்டுமே பொதுமக்கள் பாதுகாப்பு பெறு கின்றனர். அதேபோன்று மிகப் பாரதூரமான குற்றத்துக்காக சிறையிலிருப்பவர்கள் நீண்ட காலத்திற்கு அல்லது ஒருபோதும் வெளியே வரமாட்டார்கள். எனவே, அவர்களால் பொதுமக்களுக்கு எக்காலத்திலும் தீங்கு ஏற்பட வாய்ப்பில்லை. அதேநேரம், நீண்ட கால சிறைக் குற்றவாளிகள் விடுதலையாகி மீண்டும் சமூகத்தில் வந்து விட்டால் அவ மானம், விரக்தி, பழிவாங்கும் எண்ணம் போன்றவை மேலோங்கி முன்னரைக் காட் டிலும் பொதுமக்களை இலக்கு வைத்து பயங்கரமானவர்களாக நடந்து கொள்வதை யும் காணமுடிகிறது. இதனால் பொதுமக் களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது.

சிறையிலடைப்பது குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வை அளிக்கும் என்பது பொது வாக ஏற்றுக் கொள்ளப்படும் வாதமாகும். எனினும், சிறைச்சாலைச் சுற்று புனர்வாழ் வுக்கு ஏற்ற விதமாக விளங்குகிறதா என்ற கேள்விக்கு சிறைகளில் கைதிகள் வைத்திருக்கும் சகவாசம் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. எனினும், கைதிகளின் புனர்வாழ்வு பின்வரும் முறைகளினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன: உளவளத்துணை, ஆலோசனை வழிகாட்டல், கல்வி வழங்கல், தொழிற் பயிற்சி வழங்கல், மார்க்கக் கல்வி புகட்டல், சமய வழிபாடுகள், தியானங்கள், பொழுதுபோக் குகள் போன்றனவாகும். இவை மூலம் சிறந்த முறையில் தமது வாழ்க்கையை தேர்ந்தெ டுத்து வாழும் கைதிகளும் உள்ளனர். இதற்கப்பால், சிறையில் உள்ளவர்களிடமி ருந்து குற்றம் புரிவதற்கான புதிய நுணுக் கங்களைத் தெரிந்து கொள்வதனால் சிலர் மேலும் குற்றவாளிகளாகியுள்ளனர். இத னால்தான் முதற்தடவை குற்றம் புரிகின்ற வர்களுக்கு புனர்வாழ்வுப் பயிற்சி மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது. எனினும், அடிக்கடி குற்றம் புரிபவர்கள் இதன் மூலப் பயனடைவது குறைவாகவேயுள்ளது.

நாட்டிலுள்ள சிறைக் கைதிகளின் எண் ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அரசாங்கத் தின் செலவினங்களும் அதிகரிக்கும். அதே போன்று உடைந்து போகும் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். இதனால் சமூகத்தில் பல சீர்கேடுகள் உருவாகக் கார ணமாக அமைகிறது. எனவே, எதிர்காலத்தில் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அப்படியானால் குற்றங்கள் புரி பவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டப் பணமும், சிறைத் தண்டனையும் மிக மிக அதிகமாகவும், கடுமையானதாகவும் அமையுமானால் அச்சத்தினாலும், பொரு ளாதார இழப்பிற்கும் பயந்து குற்றங்கள் புரி வது குறைக்கப்படலாம்.

மேலும், தரம் 01 முதல் பல்கலைக்கழகம் வரை மார்க்கக் கல்வியை தொடர்ச்சியாக அதுவும் அத்தியவசியப் பாடமாகப் பிரகட னப்படுத்தி ஆன்மிக ரீதியாக பயிற்றுவிக்க வேண்டும். மேலும், காவல் துறையினர் சட்ட அறிவை முற்றாகப் பெறுவதோடு, சட்டம் அறிந்த அனைத்துத் தரப்பினரும் பொது மக்களுக்கு சட்டம் தொடர்பான அறிவினை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பாடசாலைகளில் 'சட்டம்' ஒரு பிரதான பாடமாக கற்பிக்கப்படவும் வேண்டும்.

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு: தனிப்பிரதி: 30.00 வருட சந்தா: 1200.00 ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00 மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA



# அரசியல் பார்வை



# முஸ்லிம் அரசியலை ஓட்டும் காசு-மரம்

ஸிமால் ஸைய்யாப்

"அதுவெல்லாம் சும்மா கதை; அப்படி ஒன்றும் இல்லை. நானாவது முஸ்லிம் காங்கிரஸில் இணைவதாவது" என்றெல்லாம் முன்னாள் அமைச்சர் அமீர் அலி சொல்லிக் கொண்டாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் பொதுமக்கள் இல்லை.

ஏனென்றால், நிரந்தரப் பகைவனும் இல்லை நிரந்தர நண்பனும் இல்லை என்ற ஒரே இடம்தான் அரசியல் களம். இன்றைக்கு அடித்துக் கொள்ளும் அரசியல்வாதிகள் நாளை தோளில் கை போட்டுக் கொள்வார்கள்.

அண்மைக் காலமாக முஸ்லிம் அரசியலில் பேசப்படுகின்ற ஒரு விடயம்தான் மு.கா. விலிருந்து பிரிந்து சென்ற அதிருப்தியாளர் குழுவில் முக்கியமானவரும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான அமீர் அலி தனது தாய்க் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் மீண்டும் இணைந்து கொள்ளப் போவதான செய்தி.

அப்படி ஒன்றும் இல்லை என்று அமீர் அலி தரப்பு மறுத்தாலும், எங்கே ஒரு மூலையில் எரிந்த நெருப்பில் இருந்துதான் இந்தப் புகை வந்திருக்க வேண்டும் என்பதை மறுக்க முடியாது.

சரி, அமீர் அலி மு.கா.வில் இணைவாரா, இல்லையா; அப்படி இணைந்தால் அது அவரது தனிப்பட்ட அரசியலிலும் முஸ்லிம் அரசியலிலும் எத்தைகைய தாக்கங்களைச் செலுத்தும் என்பதெல்லாம் தனியாக ஆராயப்பட வேண்டிய விடங்கள். தற்போது எழுந்துள்ள புகைக்கான நெருப்பு எங்கு மூட்டப்பட்டது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும்.

மு.கா.வின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான ஹாபிஸ் நஸீர், மு.கா. தவிசாளர் அமைச்சர் பஷீர் சேகு தாவூதின் வீட்டுக்குப் பக்கத்தில் மூட்டிய நெருப்பின் புகைதான் இப்போது வெளிக் கிம்பியிருக்கிறது.

உள்ளூர் எதிரியைவிட அயலூர் எதிரியின் ஆபத்துக் குறைவானது என்துடன், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டுக்கு இணங்கவே மு.கா.வுக்குள் பஷீர் சேகுதாவூதை தட்டி வைக்க அமீர் அலியை இழுத்துப் போட நினைக்கிறார் ஹாபிஸ் நஸீர்.

இந்த தந்திர அரசியலை விளங்கிக் கொள்ள நாம் கொஞ்சம் பின் நோக்கிச் செல்ல வேண்டும்.

அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் மரணத்தை அடுத்து மு.கா.வின் தலைமைத்துவப் போட்டியில் ரஊப் ஹக்கீமுக்கு அதிஷ்டம் அடித்தது. ஆனாலும், மு.கா. கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சியாக நோக்கப்பட்டதால், அந்த மண்ணுக்கே உரித்தான தலைமைத்துவம் ஒன்றினால் வழி நடத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

கண்டிக்காரரான ரஊப் ஹக்கீமை தூர வைத்துப் பார்க்கும் ஒரு நிலையும் அப்போது காணப்பட்டது. எனவே, தனக்கு எதிரான அலைகள் மேலெழுந்து விடாமல் அடக்கிவைக்க கிழக்கு அரசியல் தலைமை ஒன்றுடன் ஒட்ட வேண்டிய தேவையும் அதன் மூலம் கிழக்கு அரசியலைக் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் ரஊப் ஹக்கீமுக்கு இருந்தது. இதற்காக அவர் தெரிவு செய்தவர்தான் பஷீர் சேகுதாவூத்.

அன்றிலிருந்து ஹக்கீமுக்கும் பஷீர் சேகுதாவூதுக்கும் இடையே 'பாகையன் பொலிடிக்ஸ்' ஆரம்பித்தது. அந்த பிஸ்னசில் இருவரும் மிகவும் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டனர்.

இருந்தும் இருவரும் ஆளுக்காள் மேடைகளில் தலைவர், தவிசாளர் எனப் புகழ்ந்து கொட்டினாலும் உள்ளுக்குள் பற்களைக் கடித்துக் கொண்டே காலத்தை கடத்தினர். தவிர, எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்ற தயார் நிலையிலேயே ஹக்கீம்-பஷீர் அரசியல் உறவு இருந்தது.







அப்படி ஒன்று நடந்தால் தனது தலைமையைப் பாதுகாத்துக் கொள்ள பஷீர் சேகு தாவூத் மு.கா. ஹைக் கொமாண்டில் தனக்கு சார்பாகவுள்ள இருபது பேர் மட்டிலானவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா மாதாந்த சம்பளம் கொடுத்து வளர்த்து வந்ததாக ஏறாவூர் இரகசியச் செய்திகள் தெரிவித்தன.

ரஊப் ஹக்கீம் ஒன்றும் சளைத்தவர் அல்லர்! பஷீர் சேகுதாவூதின் இந்த வியூகத்தைத் தெரிந்து கொண்ட அவர் எந்நிலையிலும் தனக்கு சார்பாக கையுயர்த்தக் கூடிய கண்டி, கொழும்புக்காரர்கள் பலரை மு.காவின் உயர் பீடத்துக்குள் இழுத்துக் கொண்டார். பஷீரின் ஊருக்குள்ளேயே அவருக்கு சவாலாக ஒருவரைத் தேடினார்; வெற்றியும் கண்டார். தலைமைத்துவத்துடன் முரண்பட்டுக் கிடந்த ஹாபிஸ் நஸிரை மு.கா. வுக்குள் இழுத்து ஒரே கல்லில் இரு மாங்காய்கள் பறித்தார் ஹக்கீம்.

பஷீரை ஓரம் கட்டுதல், ஹைக் கொமாண்டில் தனக்கு சார்பான தலை ஒன்றை உள்ளீர்த்தல், மு.கா. தலைமையகமான தாருல் சலாத்தைக் கைப்பற்றல், எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தல் காலங்களின் அள்ளி இறைக்கும் பணக்காரன் ஒருவரைப் பிடித்தல் என்ற எல்லா மாங்காய்களையும் வீழ்த்த ஹாபிஸ் நஸீர் கை கொடுத்தார். பாலும் பொங்க பழம் நழுவி விழுந்த கதையாய் கிழக்கு மாகாண சபைத் தேர்தலும் வந்தது. மு.கா. சார்பாக ஹாபிஸ் குதித்தார்; வெற்றியும் பெற்றார். இன்று ஹக்கீம்- ஹாபிஸ் பிஸினர் ஓகோ என்று நடக்கிறது.

இவற்றையெல்லாம் கண்டு கடுப்பேறிய பஷீர் சேகுதாவூத் தனது பிரதேச மக்களை வைத்தே ரஊப் ஹக்கீமுக்கு ஒரு கை பார்க்க நினைத்தார். எனவே, ஏறாவூரை மையமாக வைத்து பன்னிரெண்டு கூட்டங்களை நடத்தி அதில் தனது வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதன் மூலம் ஹக்கீமுக்கும் ஹாபிஸ் நஸீருக்கும் மக்கள் மூலமே மருந்து கட்ட நினைத்தார்.

அவரது கூட்டத்துக்கு சனமும் திரண்டது; கைகளும் தட்டினார்கள். ஆனால், தன் கையாலேயே தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்ட கதையாகத்தான் அமைந்ததே தவிர பஷீர் சேகுதாவூத் நினைத்தது எதுவுமே நடக்கவில்லை.

தாங்க முடியாத பஷீர் சேகுதாவூத், ஹக்கீமுக்கு காலைவார சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார். புதிய அமைச்சரவை மாற்றத்தின்போது பஷீர் சேகுதாவூதுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. ஏற்கனவே பிரதியமைச்சர் பதவியை ராஜிநமா செய்த அவருக்கு இந்தக் கொழுத்த சந்தர்ப்பம் பெரும் வாய்ப்பாக அமைந்தது. முழு அமைச்சர் என்ற அந்தஸ்துடன் உலாவரவும் ரஊப் ஹக்கீமுக்கு சவால் விடவும் இது அவருக்குக் கிடைத்த அதிஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். மு.கா. தலைமைத்துவத்தின் அனுமதியின்றியும் எந்தவொரு கலத்தாலோசனையுமின்றியே அவர் ஜனாபதியிடம் சென்று அமைச்சுப் பதவியை வாங்கிக் கொண்டார். இதையடுத்து கட்சிக்குள் எழுந்த வாதப் பிரதிவாதங்களெல்லாம் நாம் அறிந்ததே.

பஷீரின் போக்கு சரியில்லை என்று நினைத்த ரஊப் ஹக்கீம், ஹாபிஸ் நஸீருடன் இது பற்றி இரகசியம் பேசிய போதுதான் இருவருக்குமான தற்பாதுகாப்பு எனக் கூறிய ஹாபிஸ் நஸீர், அமீர் அலிக்கு தூண்டில் போடுகிறார்.

அமீர் அலி மு.கா.வுக்குள் வந்தால் பஷீர் சேகுதாவூத் தவிர, சம்பந்தப்பட்ட முத்தரப்புக்கும் அது இனிப்பான செய்திதான். ஏனென்றால், மு.கா.விலிருந்து பிரிந்து சென்று தனிக் கட்சி அமைத்து தனக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனிடமிருந்து அமீர் அலியைப் பிரித்தெடுத்து ரிஷாதுக்கு சவால் விடுவதென்பது ஹக்கீமுக்கு எவ்வளவு இனிப்பான விடயமாக இருக்கும்?

(18ஆம் பக்கம் பார்க்க)

**அமீர் அலி மு.கா.வுக்குள் வந்தால் பஷீர் சேகுதாவூத் தவிர, சம்பந்தப்பட்ட முத்தரப்புக்கும் அது இனிப்பான செய்திதான். ஏனென்றால், மு.கா.விலிருந்து பிரிந்து சென்று தனிக் கட்சி அமைத்து தனக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனிடமிருந்து அமீர் அலியைப் பிரித்தெடுத்து ரிஷாதுக்கு சவால் விடுவதென்பது ஹக்கீமுக்கு எவ்வளவு இனிப்பான விடயமாக இருக்கும்? அதேவேளை, உள்வீட்டுக்குள்ளேயே சவால் விட்டுக் கொண்டிருக்கும் பஷீருக்கு போட்டியாய் அமீர் அலியை உருவாக்கி விட்டால் பஷீரிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் வேலையும் மிச்சமாகிவிடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள பல முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரம் பின்னடைந்துள்ளது

## அமைச்சர் ரஊப் ஹகீம்

கொழும்பில் உள்ள 20 முஸ்லிம் பாடசாலைகள் சிலவற்றில் மட்டுமே சிறந்த பெறுபேறுகள் கிடைக்கின்றன. அநேகமான பாடசாலைகள் கல்வித் தரத்தில் பின்னடைவைக் கண்டுள்ளமை கவலைக்குரியதாகும் என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வருமான ரஊப் ஹக்கீம் தெரிவித்தார். பம்பலப்பிட்டி முஸ்லிம் மக ளிர் கல்லூரியில் இடம்பெற்ற இஸ்லாமிய தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஹாஜரா மண்டபத்தில், அதிபர் கலாநிதி ஜே.எம். கே.பி. ஹஜர்ஜான் மன்சூர் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு நகர பிதாவின் துணைவியார் திருமதி முஸம்மிலும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மாணவிகளின் நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றன.

இங்கு உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது: கடந்த நூற்றாண்டின் ஆரம்ப பகுதி இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கால கட்டமாகும். வாப்பிச்சி மரிக்கார், அறிஞர் சித்திலெப்பை, என்.டி.எச். அப்துல் கபூர், ஐ.எல். எம். அப்துல் அஸீஸ், சேர் ராசிக் பரீத் போன்றோரின் மகத்தான பங்களிப்பு அக்கால இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிட்டு கூறக் கூடியதாகும்.

இந்நாட்டில் ஐரோப்பிய காலனித்துவவாதிகளின் காலத்தில் கல்வித்துறையில் கிறிஸ்தவ மிஷனரிகள் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களது பாடசாலைகளில் சென்று கல்வி கற்பது மத மாற்றத்திற்கு வழிவகுத்து விடும் என்ற காரணத்தினால் முஸ்லிம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அவ்வாறான பாடசாலைக்கு அனுப்புவதற்கு பின் வாங்கினர்.



இந்தப் பாடசாலையில் கூட பல்வேறு பின்னணிகளைக் கொண்ட குடும்பங்களிலிருந்து பலசிரமங்களுக்கு மத்தியில் வந்து மாணவிகள் கல்வி பயில்வதை நான் அதிபரின் ஊடாக அறிந்து கொண்டேன். மாணவர்களைப் பாதுகாத்து, திறம்பட கண்காணித்து, அவர்களைப் புடம் போட்டு, சமூகத்திற்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும் பிரஜைகளாக்குவது இவ்வாறான பாடசாலைகளின் பொறுப்பாகும். இதனை அடையப் பெறுவதற்கு நிறைய அர்ப்பணங்கள் அவசியமாகின்றன.

ஒரு நல்ல பாடசாலை எந்த கடினமான சுபாவம் கொண்ட மாணவனையும் வளைத்தெடுத்து புடம்போட்டு நெறிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. படிப்பு மட்டுமன்றி விளையாட்டு, புறக்கீத்திய தொழிற்பாடு போன்ற பல்துறை திறமைகளை மாணவரில் வளர்த்தெடுப்பது பாடசாலைகளின் பணியாகும்.

இன்று கல்வித்துறையில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நகர்ப் புறங்களில் மட்டுமல்லாது, கிராமப் புறங்களில் இருந்தும் அதி விஷேட சித்தி பெறும் மாணவர்களை நாம் காண்கின்றோம்.

இந்த மாற்றம் பாடசாலை ஆசிரியர் குழாத்தினதும் பெற்றோர்களினதும் உன்னதமான பங்களிப்புடனேயே இடம் பெறுகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என்பனவும் இதில் அரும் பணியாற்றுகின்றன.

பாடசாலைக்கு வேண்டிய அனைத்தையும் அரசாங்கம் மட்டுமே செய்ய முடியாது. எனவே, பெற்றோரும் தனவந்தர்களும் எமது பாடசாலைகளை முன்னேற்ற அர்ப்பணத்துடன் செயலாற்ற வேண்டும்.

# அம்பாறையில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் முக்கிய தீர்மாணங்கள்

ஏ.கே.ஏ ரஊப்

சமயத் தலங்கள் அவை அமைக்கப்பட்ட இடத்தில்தான் இருக்கும் என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவை வேறு இடங்களுக்கு மாற்றப்படவோ, அகற்றப்படவோ மாட்டாது என்றும் ஜனாதிபதி பகிரங்கமாக உறுதிமொழி வழங்குவாரானால் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை இலகுவாக வந்துவிடும் என அண்மையில் நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற சர்வமத மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மூன்றாவது கட்டளைப் பிரிவின் தளபதி ஹஸீன் பெரேரா தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் பௌத்த, ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத்தவர்களும் சமயத் தலங்களின் பரிபாலன சபைத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல இனத்தவர்களும் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடனும் வாழ்வதற்கான வியூகங் கள் என்ற கருப்பொருளில் இம்மாநாடு நடைபெற்றது.

இங்கு மேலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாவன: அண்மைக் காலமாக இனங்களுக்கிடையே சமாதானம் குன்றிப் போனமைக்கான முக்கிய காரணம், மதத்தலங்கள் தாக்கப்பட்டமையாகும். இது சில இன மக்களின் உள்ளங்களைக் கடுமையாகப் புண்படுத்தியுள்ளது. இதனால்தான் இனங்களுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

நான்கு சமயத் தலைவர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றைத் தெரிவு செய்து மாவட்ட அரச அதிபரையும் உள்வாங்கி பொது மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இன்று மொழிப் பிரச்சினையால் இன முறுகள் ஏற்படுவதும் ஒரு சாதாரண விடயமாகி விட்டது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சிங்களத்தையும் சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் மக்கள் மத்தியில் மிகக் குறைவாகவுள்ளது.

முன்னொரு காலத்தில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் கற்பித்தார்கள். அந்த யுகம் மீண்டும் பிறக்குமானால் இன நல்லுறவு கட்டியெழுப்பப்படும். இது போன்ற மாநாடுகள் பொது மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் பகிரங்கமாக நடைபெறுமாக இருந்தால் சகல இனத்தவரும் ஒற்றுமைப்பட வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

இம்மாநாட்டில் அம்பாறை மாவட்ட சர்வதம பேரவையின் தலைவர் டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல், கல்முனை பௌத்த விகாராதிபதி சங்கரத்ன தேரர், சம்மாந்துறை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஐ.ஏ. ஜப்பார் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

# சமூகத்தை வழி நடத்தக்கூடிய பெண்களாக மாற்றுவதே அரபுக் கல்லூரிகளின் எதிர்பார்ப்பாகும்

## அஷ்ஷெய்க் முபாறக் (மதனி)

ஜெஸ்மி எம். மூஸா

அரபுக் கல்லூரிகளின் பணிகள் புனிதமானவை. படித்து, பல்கலைக்கழகம் நுழைந்து, திருமணம் முடித்து, பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதோடு எமது கடமை முடிந்து விடுகிறது என அரபுக் கல்லூரிகளுக்கு வரும் மாணவிகள் நினைத்தால் அது பெரும் துரோகத்தனமாகும். சமூகத்தை வழி நடத்தக்கூடிய பெண்களாக தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அரபுக் கல்லூரிகளின் எதிர்பார்ப்பாகும். என மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபரும் இஸ்லாமிய பிரசார மையத் தலைவருமான எம்.எல். எம். முபாறக் (மதனி) தெரிவித்தார்.

கல்லூரியின் தலைவரும் வைத்திய அதிகாரியுமான டாக்டர் ஏ. ஆர்.எம். ஹாரிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற, பல்கலைக்கழகம் புகும் மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பல்வேறு தியாகங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் பெண் மாணவிகளை பெற்றோர் அரபுக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்கள் வெறும் மௌலவியாக்களாக மட்டும் வெளியாகுவதனால் எதிர்பார்ப்பின் விளைவு பூச்சியமாகிறது. இஸ்லாமிய வரலாற்றில் நபிகளாரின் மகள் பாத்திமா, மனைவியர்களான ஆயிஷா, கதீஜா போன்றோரினூடாக மார்க்க அறிவுகளும் ஒழுக்கவியல் கோவைகளும் இச்சமூகத்திற்குக் கிடைத்துள்ளன. அத்தொடரினை எடுத்துச் செல்லும் நல்ல பிரசாரர்களாக மாணவிகள் திகழ வேண்டும் என்பது எதிர் பார்ப்பாகும்.

பல்கலைக்கழகம் நுழைவது எமது அறிவியலை மேலும் வளர்ப்பதற்கான உந்து சக்தி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை வைத்துக் கொண்டு எமது சமூகத்திற்கு எவ்வாறான பயனுள்ள அறிவைக் கொடுக்கலாம் என்பதைப் பற்றிய சிந்தனையுடன் இருந்து அதில் வெற்றி காணுகின்ற மாணவிகளாக எல்லோரும் மிளிர வேண்டும் என்பதே எமது அவாவாகும். இந்நிலையினைக் காணும்போதே இக்கல்லூரியின் வளர்ச்சிக்கென இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கும் நிருவாகிகள் மகிழ்ச்சியடைவர்.

காதலுக்காகக் கொலை செய்கின்ற ஓர் அபாயகரமான சூழலில் வாழும் நாம் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றும்கூட எம்மை ஆளாக்கிய அரபுக் கல்லூரிகளின் பெயர்களுக்குக் களங்கம் ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும். மௌலானா மௌதூதி அவர்கள் பல்கலைக்கழகங்களா? பலிபீடங்களா? என அன்று கேட்ட வினாக்கள் இன்றும் மீள வலியுறுத்தப்பட வேண்டிய நிலைபோல் பல்கலைக்கழகங்களின் ஒழுக்க விழுமியப் பண்புகள் மாறிவருகின்றன.

எனவே, எமது இலக்குகள், நோக்கம், நாம் வந்த விதம் என்பவற்றை மனதில் இருத்தி எம் செயற்பாடுகளை உளத்தூய்மையோடு நகர்த்தும்போது வெற்றி கிட்டும். அவ்வெற்றிகளே சமூகம் எதிர்பார்ப்பவைகளாக அமையும். இதற்கான வாய்ப்பை அமைத்துக் கொள்கின்றவர்களாக அரபுக் கல்லூரி மாணவிகள் இருக்க வேண்டும்.

# தோப்பூர் பொது மைதானத்தை அபிவிருத்தி செய்யக் கோரிக்கை

- கந்தளாய் நிருபர் -

தோப்பூர் பொது விளையாட்டு மைதானம் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மைதானத்தைச் சுற்றி வேலி அமைக்கப்படாததால் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. இதனால் விளையாட்டு வீரர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி பொது விளையாட்டு மைதானத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

# திருகோணமலை ரோட்டரிக் கழகத்தின் சமூக அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

- கந்தளாய் நிருபர் -

திருகோணமலை ரொட்டரிக் கழகம் வெளிச்சம் என்ற தொனிப் பொருளிலான செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் நொச்சிக்குளம் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக அங்கு பணி புரியும் ஐந்து தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 9500 ரூபாவை வழங்கி வருகின்றது.

வெளிச்சம் திட்டத்தின் கீழ் மூன்று கிராமப்புர பாடசாலைகளுக்கு மூன்று தொகுதி கணிணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. பொருளாதார வசதி குறைந்த பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது. கிளிவெட்டி இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவ பீடக் கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# கல்வியல் கல்லூரி அனுமதி என்ன நடக்கிறது?



முஜீஸ் ரயீஸுத்தீன்

கல்வியல் கல்லூரி அனுமதிக்கென கல்வி அமைச்சில் ஒரு தனிப் பிரிவு இருந்தும் மாணவர் தெரிவு செய்யப்படுவதற்காக வர்த்தமானியில் ஒரு தடவை விண்ணப்பத்தைக் கோருவதோடு மாத்திரம் நின்று விடுகிறது. பின்னர் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு கல்வியல் கல்லூரிகளின் அதிபர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு கல்வியல் கல்லூரிகளின் நேர்முகப் பரீட்சைக்காக மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர். நேர்முகப் பரீட்சைகள் முடிவுற்றதும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்படுகின்றது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி அனுமதிக்குத் தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தமது நிலை குறித்து தடுமாறித் திரிகின்றனர். ஏனெனில், கல்வியல் கல்லூரி அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் முறைப்படி ஊடகங்கள் மூலம் வெளிப்படையாக அறிவிக்கப்படுவதில்லை.

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் 28ஆந் திகதி முதல் நாடளாவியரீதியில் நடைபெறுகின்றது. கல்வியல் கல்லூரிக்கு 3400 மாணவர்கள் சேர்க்கப்படவுள்ள நிலையில், சுமார் 37500 பேர் விண்ணப்பித்துள்ளனர். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 28 வகையான பாடநெறிகளுக்காக 18 தேசியக் கல்வியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவர்.

நாட்டிலுள்ள தேசியக் கல்வியல் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற் பயிற்சிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக கல்வி அமைச்சினால் வருடாந்தம் விண்ணப்பம் கோரப்படுகின்றது. கல்வியல் கல்லூரிகளில் 3 வருட ஆசிரியர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு அரசாங்கம் ஆசிரியர் நியமனம் வழங்குவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளது.

25 வயதுக்குட்பட்டிருத்தலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், மொழி உள்ளிட்ட 6 பாடங்களில் 3 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தலும் இதற்கு அடிப்படைத் தகைமைகளாகும்.

கா.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத, பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிக்கு அடுத்த நிலையிலுள்ள மாணவர்களே கல்வியல் கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பிக்கின்றனர்.

சில மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கக்கூடிய உயர் தகைமையைப் பெற்றிருந்தும் ஆசிரியர் நியமனத்தை விரும்பி, அல்லது உடனடி ஆசிரியர் தொழில் வாய்ப்புக்கருதி கல்வியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிக்கின்றனர். பெண் மாணவிகளே இதில் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றனர்.

இதன்படி, பல்கலைக்கழக அனுமதியைப் போன்று மிகவும் போட்டி நிறைந்த ஒன்றாக இன்று கல்வியல் கல்லூரி அனுமதியும் மாறியிருக்கின்றது. இத்தகைய உயர் எதிர்பார்ப்பில் கல்வியல் கல்லூரி அனுமதியை நாடும் மாணவர்கள் மிக மோசமான அலைக்கழிவிற்கும் பாரபட்சத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். கல்வியல் கல்லூரி அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் பல குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் காணப்படுவதாக மாணவர்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர்.

தமது மாவட்டத்தில் தமக்குத் தகைமையுள்ள ஒரு கற்கை நெறியில் தம்மை விடக் குறைந்த Z புள்ளியைப் பெற்றவர் அனுமதிக்காகத் தெரிவு செய்யப்படுவதாகவும் இதில் இலஞ்சம், ஊழல் நடப்பதாகவும் பாதிக்கப்பட்ட பல மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர். கல்வியல் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் காணப்படும் நடைமுறை மிகவும் பலவீனமாக இருப்பதே இவ்வாறான ஒழுங்கீனங்களும் மோசடிகளும் இடம்பெறக் காரணமாக இருக்கின்றது.

அதாவது, பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதுபோல் ஒழுங்குமுறையான, தெளிவான, வெளிப்படையான தெரிவு முறையாக கல்வியல் கல்லூரிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் முறை காணப்படவில்லை.

கல்வியல் கல்லூரி அனுமதிக்கென கல்வி அமைச்சில் ஒரு தனிப் பிரிவு இருந்தும் மாணவர் தெரிவு செய்யப்படுவதற்காக வர்த்தமானியில் ஒரு தடவை விண்ணப்பத்தைக் கோருவதோடு மாத்திரம் நின்று விடுகிறது. பின்னர் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு கல்வியல் கல்லூரிகளின் அதிபர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு கல்வியல் கல்லூரிகளின் நேர்முகப் பரீட்சைக்காக மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

நேர்முகப் பரீட்சைகள் முடிவுற்றதும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்படுகின்றது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி அனுமதிக்குத் தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தமது நிலை குறித்து தடுமாறித் திரிகின்றனர். ஏனெனில், கல்வியல் கல்லூரி அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் முறைப்படி ஊடகங்கள் மூலம் வெளிப்படையாக அறிவிக்கப்படுவதில்லை.

நேர்முகப் பரீட்சையின்போது மறைமுகமாகவும் வெளியிலும் வேறு பல வழிகள் மூலமும் பணப் பரிமாற்றங்கள் இடம்பெறுவதாக பெற்றோர் பரவலாகப் பேசிக் கொள்கின்றனர். இம்மோசடி நிலை மிக நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்றது.

மாணவர்கள் 3 கற்கை நெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடிவதுடன் அவற்றில் தகுதி பெறும் ஒன்றிற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்காக ஒருவர் தனித்தனியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றார். இதற்காக மாணவர்கள் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் நேர்முகப் பரீட்சைகளுக்குப் பல தடவைகள் சென்று வருகின்றனர்.

இந்த வழிமுறை மாணவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் ஒரு வகை சுற்றி வளைப்பு முறையாகும். கணினி யுகத்தில் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு எவ்வளவோ சிறந்ததும் இலகுவானதுமான பொறிமுறைகள் இருக்கிறபோது கல்வியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதில் மாத்திரம் திருத்தம் வராதது ஏன்?

அதேவேளை, நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்படும் சிலருக்கு கடிதம் அனுப்பப்படுவதுமில்லை. உயர் பெறுபேறு பெற்ற மாணவர் ஒருவர் எங்காவது தகவல் அறிந்து நேரில் சென்று விசாரித்து விளக்கம் கேட்டால் மாத்திரம் அவர் நேர்முகப் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டு கற்கை நெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நேர்முகப் பரீட்சையின்போது மாணவர்களின் ஆவணங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்படுகின்றனவே தவிர, அவர்களின் ஆளுமை பரீட்சிக்கப்படுவதில்லை. ஆவணப் பரீட்சிப்புக்கு எவ்வளவோ சிறந்த வழிமுறைகள் இருக்கும்போது மாணவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து சீரழிக்கத்தான் வேண்டுமா?

அப்பாவி மாணவர்கள் படித்து சித்தியடைந்தும் அனுமதி கிடைக்காமல் விரக்தி, வேதனைப்படுவதுதான் மிச்சம். பணத்துக்காக மாணவர்களின் துயரங்களில் குளிர் காயும் இத்தகையவர்கள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் இனியும் இந்நிலை தொடர இடமளிக்கக் கூடாது.

நாட்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இலட்சக்கணக்கான மாணவர்கள் வேலைவாய்ப்பின்றி வீதியில் வீணாகப் பொழுதைக் கழிக்கின்றனர். இந்நிலையில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அற்ப சொற்ப வாய்ப்புகளையும் தட்டிப் பறிக்கும் இத்தகைய தீய சக்திகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது. இதற்காக கல்வியில் கல்லூரி அனுமதி தொடர்பான சட்ட திட்டங்கள், சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள் என்பன தெளிவாக இருக்க வேண்டியதுடன், அவை சார்ந்த நடவடிக்கைகள் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.

எனவே, தற்போது நடைபெறும் கல்வியல் கல்லூரி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை முடிவடைந்ததும் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் மாவட்ட ரீதியாகக் கணிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகள் பற்றிய அறிவித்தல் தெளிவான முறையில் ஊடகங்களில் வெளியிட சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ■

எங்கள் தேசத்தில் விளம்பரம் செய்வதற்கு தொடர்பு கொள்ளவும்

ரீ. முஸ்தாக்
0777 396 306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா மஜீத் நகர் மீள்குடியேற்றம் மக்களின் அவலம் தீர்க்கப்படுமா?

எச்.எம். ஹலால்தீன்

கடந்த முப்பது வருடகால யுத்தத்தில் வடக்கு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது பொருளாதாரத்தையும் நிலத்தையும் விட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் உறவினர் விடுகளிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர். சமாதான சூழ்நிலையை அடுத்து சில கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்க உதவியுடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இதனால் வாழ்க்கைக்கு விடிவு கிடைத்து விட்டது என பலரும் பல்வேறு கற்பனைகளையும் சுமந்தபடி மீள்குடியேறினர்.

மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு முன்னர் வீடு கட்டித் தருவோம், குடிநீர் வசதி மற்றும் போக்குவரத்து வசதியினைச் செய்து தருவோம், அத்துடன் வைத்தியசாலை, பாடசாலை என்பனவற்றுடன் சுய தொழில் ஊக்குவிப்பினையும் செய்து தருவோம் எனக்கூறி மக்களை மீள்குடியேற்றம் செய்தனர். இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களுள் ஒன்றுதான் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜீத் நகர் கிராம சேவகர் பிரிவாகும்.

இக்கிராம சேவகர் பிரிவில் மஜீத் நகர், கிரான், சின்னக் கிரான், கல்லடி வெட்டுவான், பறக்கத் நகர், வாழைமடு, தீனேரி, கண்டக்காடு முதலான பல கிராமங்கள் உள்ளன. இம்மக்கள் விவசாயத்தை தமது அடிப்படைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

1990ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இக்கிராம மக்கள் தமது சொத்துக்களையும் உடைமைகளையும் இழந்து கிண்ணியாவில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அமைதியான சூழலை அடுத்து கல்லடிவெட்டுவான் கிராமத்தில் சுமார் 25 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கட்டாய மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இவர்களுக்கு தற்காலிகக் கொட்டில்களும் செய்து கொடுக்கப்பட்டன. இதைத் தவிர வேறு எவ்வித வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

நீர் வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதிகள் என்பன செய்து கொடுக்கப்படாத நிலையில் இம்மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கிடையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான துன்பங்களையும் சுமந்து தமது பிள்ளைகளுடனும் உறவினர்களுடனும் வாழ்ந்து வரும் இம்மக்களின் தேவைகளைப் பற்றியோ, அவர்களது வாழ்வு நிலை பற்றியோ எந்த அரசியல்வாதியும் அதிகாரிகளும் கவனத்திலெடுத்தாகத் தெரியவில்லை.

இடம்பெயர்ந்து அகதிகளாக உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்ததைவிட மிகவும் மோசமாக தற்போது வாழ்வதாக இம்மக்கள் கூறுகின்றனர்.

அன்றாட கூலி வேலைகள் செய்தும் காட்டில் விறகெடுத்தும், பிழைப்பு நடத்துகின்ற இம்மக்களின் அவல நிலையை பலமுறை கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர், நகர சபைத் தலைவர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர், பிரதேச செயலாளர், பாராளுமன்ற உருப்பினர்களிடமும் எடுத்துக் கூறியும் எவ்வித முன்னேற்றகரமான எதுவும் இடம்பெறவில்லை.

மாறாக, இங்கிருந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்மையால் மீண்டும் வேறு இடங்களுக்குச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

கல்லடிவெட்டுவான் கிராமத்தில் 1972.10.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஒன்றுள்ளது. இப்பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் வருகையும் குறைந்து செல்வதாக அப்பாடசாலையின் அதிபர் கவலையுடன் தெரிவிக்கிறார். இதனால் பாடசாலைக்கு வருகை தரும் வலய, மாகாணக் கண்காணிப்பின்போது வகை கூற வேண்டியுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

அன்றாடம் உணவுக்கு கஷ்டப்படும் ஏழைகளின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விட்டு அம்மக்களுக்கு சேவை செய்யாது சொந்த விடயங்களில் ஈடுபடும் பிரதேச அரசியல்வாதிகள் குறித்து இம்மக்கள் தமது அதிருப்தியை வெளியிடுகின்றனர்.

நீண்ட காலமாகச் சேதமடைந்து காணப்படும் பூவரசந் தீவையும், கல்லடி வெட்டுவானையும் இணைக்கும் வடசல் பாலத்தைப் புனரமைப்புச் செய்து கொடுப்பதன் மூலம் இரு கிராம மக்களினதும் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அத்துடன், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் தொகையும் அதிகரிப்பதோடு இக்கிராமங்களில் செய்கை பண்ணப்படும் மரக்கறி முதலான பொருட்களை சந்தைப்படுத்த இலகுவாகவும் இருக்கும்.

இக்கிராமத்தில் வைத்திய வசதி ஏதும் கிடையாது. அவசரத் தேவைக்கோ, திடீரென ஏற்படும் சுகயீனங்களுக்கு சிகிச்சை பெறவோ கச்சக்கொடித்தீவு, ஆலங்கேணி, கிண்ணியா முதலான இடங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது. 5 தொடக்கம் 10 கிலோ மீற்றர்கள் தூரம் வரையுள்ள இப்பிரதேச வைத்தியசாலைகளுக்கு இரவு வேளைகளில் நோயாளர்களைக் கொண்டு செல்வதென்பது மிகவும் சிரமத்துக்குரிய விடயமாகும்.

எனவே, இக்கிராம மக்களின் வாழ்வின் விடியலுக்கான ஏற்பாடுகளைச் செய்து, அவர்களுக்கு உதவ முன்வர வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும். ■

# மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரஊப் ஹக்கீமுடனான சந்திப்பில் கோரிக்கை

மீன்பிடி துறைமுகங்கள், மீனவர்கள் செறிந்து வாழும் சாய்ந்தமருது போன்ற கரையோரப் பிரதேசங்களை மையப்படுத்தியே அமைக்கப்பட வேண்டுமென்பதை அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்குவதாக குறிப்பிட்ட நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரஊப் ஹக்கீம், பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட தென் கிழக்கு கரையோர மீனவக் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடுகளையும் இயன்றவரை துரிதமாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.



சாய்ந்தமருது மீனவர்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து, அவற்றிற்கு தீர்வு காணும் முகமாக அண்மையில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கல்முனைத் தொகுதி அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேசங்களில் வசிக்கும் வறிய மீனவர்களின் மீன்பிடி வலைகள், வள்ளங்கள் போன்றவை தென்பகுதி மீனவர்களால் களவாடிச் செல்லப்படுவதாக அம்பாரை மாவட்ட ஆழ் கடல் மீன்பிடிச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.ஹமீட் மற்றும் உப தலைவர் ஏ.எம்.றஹீம் ஆகியோர் உட்பட மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டோர் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் ஏறத்தாழ 16ஆயிரம் மீனவர்கள் இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர். சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் 35 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட இருந்த நங்கூரமிடும் தளத்திற்கு என்ன நடந்தது என்பது இன்னமும் மர்மமாக இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இவ்வாறான மீனவர் பிரச்சினை சம்பந்தமாக தாம் அண்மையில் இரு தடவைகள் சம்பந்தப்பட்ட அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்தினவை நேரில் சென்று சந்தித்து கதைத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மீன்பிடி நடவடிக்கைகளால் நாட்டிற்கு அதிக வருமானம் கிடைப்பதாக பெருமிதத்துடன் கூறிக் கொள்ளும் மீன்பிடி அமைச்சர், இந்த வறிய மீனவர் சமூகத்தின் பரிதாபகரமான நிலைமையை தீர்த்து வைக்க வேண்டுமென்பதை தாம் மீண்டும் அவரிடம் வலியுறுத்துவதாகவும் அமைச்சர் ஹக்கீம் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பனரும் மாவட்ட பொருளாளருமான ஏ.சி.எஹியாகான், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஐ.எல்.ஏ.மஜீட், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எம். உதுமாலெப்பை ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். ■


ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)

விஷேட வில்லையுடன் நவீன சிகிச்சை முறையில்

கட்டணம் ரூபா 15000.00

குவைத் வைத்தியசாலை, புத்தளம்
தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107, 0773171720

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும்
2950.00 மட்டுமே

ஜூன் 22ஆம் திகதிக்கான பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

# தொண்டமான் நூற்றாண்டு விழா
# எப்படி நடத்தப் போகிறீர்கள் சிவலிங்கம் ஐயா அவர்களே?

கடந்த இதழ் கட்டுரையில் தொண்டமான் நூற்றாண்டு விழா வழமையான இ.தொ.கா. பாணியில் அனுஷ்டிக்கப்படக்கூடாது என்றும் இலங்கை வாழ் சகல மக்களுக்கும் பயன்தரும் வகையில் உருப்படியான விஷயங்கள் அதில் அமைந்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். அது மட்டுமல்ல, அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துகள் மற்றும் யோசனைகள், இ.தொ.கா.வின் உண்மையான அதிகாரங்களைக் கையில் வைத்திருக்கும் ஆறுமுகனாருக்கு சமர்பிக்காமல் உத்தியோகபூர்வ தலைவரான முத்து சிவலிங்கத்தாருக்கே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அவர் உத்தியோகபூர்வ தலைவர் என்பதால் அல்ல; இன்றளவுக்கும் அவர் மட்டுமே இ.தொ.கா. என்ற தொழிற் சங்கத்தின் ஒரே ஒரு தொழிற் சங்கத் தலைவராகக் காட்சியளிப்பதாலும் மனுஷன் அண்டக்கூடிய மனிதராக அவர் திகழ்வதாலுமே, நூற்றாண்டு விழா தொடர்பான யோசனைகள் அவருக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அவருக்கு சொல்லப்படும் ஆலோசனைகளை அவர் மேலிடத்தில் முன்வைக்கலாம்; முன்வைக்காமலும் விடலாம். அல்லது, சில மாறுதல்களுடன் தன் சொந்தப் புத்தியில் உதித்ததாகவும் முன்வைக்கலாம். தனக்கிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகார வரம்புக்குள் அவர் எதையாவது செய்து விட்டுப்போகலாம். அல்லது, எக்கேடு கெட்டாவது போங்கள் என்று அவர் விட்டும் விடலாம். ஏனெனில், பல விஷயங்களில் முத்து சிவலிங்கத்தார் கண்டும் காணாத மாதிரித்தான் நடந்து கொள்கிறார். ஏனெனில், பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுக்கண்டம் நமக்கு என்று சொல்ல வேண்டுமாம்!

இ.தோ.கா.வில் முன்னர் பி.பி. தேவராஜ், அண்ணாமலை, சென்னன் ராதாகிருஷ்ணன், புத்திர சிகாமணி, யோகராஜன், செல்லசாமி, ஏ.ம.டி. ராஜன், ராஜரட்ணம், சதாசிவம் ஆகியோர் உப தலைவர்களாகவும் முக்கியஸ்தர்களாகவும் வீற்றிருந்தபோது, அது ஒரு தொழிலாளர் இயக்கமாகக் காட்சியளித்தது. ஏனெனில், இவர்கள் அனைவருமே தோட்டங்களில் இருந்தும் தொழிலாளர் குடும்பங்களில் இருந்தும் வந்து, சௌமிய மூர்த்தியாரால் கைதூக்கி விடப்பட்டு கை காட்டப்பட்டவர்கள். இன்றையதைப்போல கைகட்டப்பட்டவர்களாக இவர்கள் இருக்கவில்லை.

இவர்களுக்கு தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டதும் அவற்றின் பின்னணிகளைப் புரிந்து கொள்ளவும் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளவும் முடிந்தது. அடிமட்டத்தில் இருந்து வந்ததால் அடிப்படை விஷயங்கள் இவர்களுக்கு அத்துப்படியாக இருந்ததோடு, தோட்ட அரசியலை அதன் காரமணத்தோடு ஒரு கங்காணியைப் போலவே தெரிந்து வைத்திருந்தார்கள். தாம் அடிபட்ட அனுபவங்களும் அவர்களிடம் இருந்தன. ஒரு தொழிலாளி இப்படித்தான் வேதனை அடைந்திருப்பான்- வலி இப்படித்தான் இருந்திருக்கும்- என்பது மட்டுமல்ல, போலித்தனங்களும் திகிடு தத்தங்களும் என்னென்ன என்பதும் அவர்களுக்கு அத்துப்படி.

தோளுக்கு மேல் வளர்ந்து விட்டவர்களைத் தட்டிக் கொடுத்துதான் வேலை வாங்க வேண்டுமே தவிர, ஏறி மிதித்து வேலை வாங்க முடியாது. படித்த பெரியவரான பி.பி.தேவராஜுக்கு எந்த இடம் கொடுக்கப்பட வேண்டுமோ அந்த இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர், தான் ஆபிஸ் பையனைப்போல நடத்தப்படுவதற்கு விரும்பியிருப்பாரா?

இ.தொ.கா.வை விட்டு பட்சிகள் பறந்து விட்டன. இ.தொ.கா. என்பது ஆலமரம்.



பட்சிகள் பறந்தால் புதிய பட்சிகள் வந்து குடியேறும் பயப்படவே தேவையில்லை என்று ஆருடம் சொல்லப்பட்டதுதான். ஆனால், விலகிப்போன பட்சிகளைப்போல முதிர்ந்த பறவைகள் மீண்டும் இந்த ஆலமரத்தில் குடியேறவில்லை என்பதும் வந்திறங்கியவை காக்கைகள் மட்டுமே என்பதும் சிவலிங்கத்தாருக்கு நன்றாகவே தெரியும். ஏனெனில், அங்கிருக்கும் ஒரே பழம் தின்று கொட்டை போட்டவர் அவர் மட்டுமே.

இன்று இ.தொ.கா.வில் பிரச்சினைகள் புரிந்தவர், தோட்டக்காடெல்லாம் அத்துப்படியானவர், சொல்வதையெல்லாம் கேட்டு பொறுமையாக தொழிலாளர்களுக்கு விளங்கும் பாதையில் பதில் சொல்லக் கூடியவர், தொழிலாளர்களையும் இ.தொ.கா. தோட்டத் தலைவர்கள், பிராந்திய அலுவலகங்களில் பணியாற்றுபவர்களை முக அடையாளம் கண்டு, வாப்பா சௌக்கியமா இருக்கிறியா? என்று குசலம் விசாரித்து, வந்த விஷயம் என்னவென்று கேட்டுத் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்கிறவர் - என்றொருவர் கொழும்பு சௌமியபவனில் ஒரு நிழல் தரும் மரமாக இருக்கிறார் என்றால், அவர் அமைச்சர் முத்து சிவலிங்கம் மட்டுமே!

அதனால்தான் தொண்டமான் நூற்றாண்டு விழா எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி அவரிடம் சொல்கிறோம். தொண்டமான் வரலாற்று நூல் தொண்டமான் உயிரோடு இருக்கும் காலத்திலேயே தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியானது. இரண்டுமே நல்ல நூல்கள்தான். தமிழ் நூலை எழுதியவர் பத்திரிகையாளர் எஸ்.டி. சிவநாயகம். இந்நூல் இப்போது அச்சில் இல்லை. ஆனால், இந்நூல் விற்கிறதோ இல்லையோ, எப்போதும் புத்தகக் கடைகளில் இருக்கின்ற மாதிரி பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். நாம் அறிந்த வகையில், சௌமிய மூர்த்தி பவனின் கீழ் தளத்தில், பழைய பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் அறையில் தொண்டமான் வரலாறு நூல் கட்டுக் கட்டாக அநாதரவாகக் கிடப்பதாகத் தெரிகிறது. தூசுதட்டி, இந்நூலை மீண்டும் விற்பனைக்கு விடலாம். அல்லது பின் இணைப்பாக மேலும் சில முக்கிய தகவல்களைச் சேர்ந்து மறுபதிப்பாக இந்நூலை வெளியிடவும் நீங்கள் முன்வரலாம்.

காங்கிரஸ் ஒரு பெரிய ஸ்தாபனம். இதன் வரலாற்றுடன் மலையக மக்கள் வரலாறும் தொழிற்சங்க வரலாற்றின் ஒரு முக்கிய காலகட்டமும் பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, காங்கிரஸ் வரலாறு ஒரு தனி நூலாக வெளிவர வேண்டிய அவசியம் உள்ளது. காங்கிரஸ் வரலாற்றுடன் இணைந்ததே வீரகேசரி பத்திரிகையின் வரலாறு. இதன் வரலாற்றை காலஞ் சென்ற பத்திரிகையாளர் கார்மேகம் ஒரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். எனவே, வீரகேசரி வரலாறு இன்று ஆவணப்படுத்தப்பட்டு விட்டது. மேலும் வீரகேசரியின் பழைய இதழ்களின் முன் பக்கங்களும் 'பெரிய சைஸ்' நூலாக வெளிவந்து, ஆவணமாகி விட்டது. ஆனால், வீரகேசரியுடன் வளர்ந்த சுமார் எண்பது ஆண்டு கால காங்கிரஸின் வரலாறு இன்னும் ஆவணப்படுத்தப்படாமல் கிடப்பதை, முத்து சிவலிங்கம் அவர்களே, கவனித்தீர்களா?

நீங்கள் போகிற இடமெல்லாம், பிள்ளைகளே படியுங்கள், நன்றாகப் படியுங்கள், அது ஒன்றுதான் நம்மைத் தூக்கி விடும் என்று மாணவர்களுக்குச் சொல்கிறீர்களே, அவர்கள் கணிதமும் ஆங்கிலமும் வர்த்தகம் மற்றும் விஞ்ஞானமும் மட்டுமா தெரிந்திருக்க வேண்டும்? மலையகத்தில் படித்தவர்கள் எல்லாம், "நான் மலையகம் கிடையாது, நான் டவுன் காட்டான்" என்று தம்மை மறுதலித்துக் கொண்டு திரிகிறார்களே அதற்குக் காரணம் என்ன தெரியுமா? மலையகப் பெற்றோர் வெறும் எளிய காரணங்களின் பேரில் தமது பிள்ளைகளை சிங்கள மீடியத்தில் சேர்கிறார்களே, தமிழ் இளைஞர்கள் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து, சில சமயம் பெயரையும் மாற்றிக் கொண்டு "நான் அவனில்லை" என்று மாறிப் போகிறார்களே இவை எல்லாம் பரவலாக நடப்பதற்குக் காரணம் என்ன?

(18ஆம் பக்கம் பார்க்க)



உங்கள் தலைவர் நூற்றாண்டு விழாவை பூசை புனங்காரங்களுடன் ஆடம்பரமாக நடத்துவார். அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் ஆடம்பர விழா, பின்னர் அன்னதானம் என நடக்கும். இவற்றால் இச்சமூகம் பெறப்போகும் பலன் என்ன? பெயர் சொல்கிற மாதிரி, நீண்டு நிலைக்கின்ற மாதிரி, மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயன்படுகின்ற மாதிரி நூற்றாண்டு விழா அர்த்தமுள்ளவாறு நடத்தும் திட்டம் ஏதேனும் காங்கிரஸ் தலைமையிடம் உள்ளதா? இந்த விழாவை, தலைமையைச் சுற்றியிருக்கும் தோட்ட மக்களுடன் சம்பந்தப்படாத தமிழ் முதலாளி வர்க்கமும் காக்கைக் கூட்டங்களும் பயன்படுத்திக் கொள்கிற மாதிரி நடத்தாமலிருக்க நீங்கள் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும், அமைச்சர் அவர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் வித்தியாலயத்தில் புனர்நிர்மாண வேலைகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனைத் தொகுதி அபிவிருத்தித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸ் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு அடிக்கல் நடுவதையும் கலந்து கொண்ட பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: எஸ்.எம்.எம். றம்ஸான்




கந்தளாய் றெக்டோ நிறுவனத்தின் அனுசரணையில் அல்ஹிக்மா முன்பள்ளி பாடசாலை சிறுவர்களின் நலன் கருதி அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் றெக்டோ நிறுவனத்தின் தலைவர் ஜே.எம். அசார், நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ். நஹீம், முறைசாராக் கல்வி செயற்றிட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம்.டீ.எம். தாரீக் ஆகியோர் முன்பள்ளி ஆசிரியையிடம் விளையாட்டு உபகரணங்களைக் கையளிப்பதையும் பாடசாலை மாணவர்களையும் பெற்றார்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம்.தாணீஸ்



கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் எம்.எஸ்.எம். சுபையிர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க கண்டி தெல்தொட்ட ஜம்இய்யதுல் ஹைறியா அல் இஸ்லாமிய்யா நிறு வனத்தின் நிதி உதவியுடன் சுபையிர் ஹாஜியார் பவுன்டேஷனால் வீடு கட்டுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் ஏறாவூரில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதி யாக கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபையிர், ஜம்இய்யதுல் ஹைறியா அல் இஸ்லாமிய்யா நிறுவனத்தின் தலைவர் ஜே. எம். பௌசர்,அதன் ஆலோசகர் மௌலவி எம்.எம்.முனீர் சாதீக் ஆகியோர் வீட்டுக்கான அடிக்கல்லை நடுவதைப் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: எம்.ரீ.எம்.பாரிஸ்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 30வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மட்டக்களப்பு உறுகாமம் கிராமத்திற்கு 140 இலட்சம் ரூபா செலவில் புதிய மின் இணைப்புத்திட்டம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறுக் மற்றும் ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: பழுளுல்லாஹ் பர்ஹான்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியின் மூன்றாம் வருட மாணவர்களின் 'காண்பியக் கலைக் கண்காட்சி' அண்மையில் பல்கலைக்கழக கலைக்கூடத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியை பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா சிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் சிரேஸ்ட கலைஞர் எம்.கணகசபை ஆகியோர் திறந்து வைப்பதையும் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

படமும் தகலலும்: பாறூக் சிகான்

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-03



—— பஷீர் அலி

விமானம் மலேசிய-புரூணை வான் பரப்பில் மேகத்தைக் கிழித்து விர்றிக் கொண்டிருந்தது. அடிக்கடி போர்டிங் பாஸை எடுத்துப் பார்த்துக் கொண்டேன். விமானத்தின் பின் பக்கமாக உள்ள பாத்ரூம் பக்கம் அடிக்கடி சென்று வரவும் முடியாத இக்கட்டில் நான் இருந்தேன்.

இருந்தாலும், நான் ஒன்றும் போதைப்பொருள் கடத்திச் செல்லவில்லையே என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டாலும்கூட ஆறுதலாயிருக்க முடியவில்லை. மீண்டும் போடிங் பாஸை எடுத்துப் பார்த்தேன்.

ஏதாவது வெளியீடுகள், சஞ்சிகைகள் எடுத்து வருகிறீர்களா? அப்படியானால்... A, B, C, D... என ஒரு பட்டியலே அதில் இருந்தது.

நான் எனது பயணப் பொதிக்குள் பிஸ்கட் உட்பட உடை, வேறு பல சோப்பு, சீப்புகளை எடுத்து வைத்தேனோ இல்லையோ எங்கள் தேசம், அல்ஹஸனாத் உட்பட வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் என 10 கிலோ அளவிலான வெளியீடுகளால் பயணப் பை நிறைந்திருந்தது. புரூணை விமான நிலையத்தில் போட்டு உருட்டப் போகிறார்கள் என்பதை நினைக்கும்போது எப்படி விமானத்தின் பின்புறம் சென்று வராமல் இருக்க முடியும்?

ஏற்கனவே நண்பர் இஸ்மத் அலி புரூணை விசாவுக்கான அனுமதிக் கடிதத்தினை அனுப்பியிருந்ததால் விசா சம்பந்தமான பிரச்சினை இல்லையென்றாலும் பயணப் பைக்குள் இருந்த 'பேப்பர்க் கட்டு' என்னைப் போட்டு வாட்டிக் கொண்டிருந்தது. ஏனென்றால், இதற்கு முன்னர் நான் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு சென்றிருப்பதால் அங்கு எந்த போடிங் பாஸிலும் வெளியீடுகள் சம்பந்தமாக இந்தளவு கேள்வி கேட்டு உருட்டவில்லை. அத்தோடு, வழமைக்கு மாறாக வெளியீடுகளை வேறு பயணப் பையின் மேல்பகுதியிலேயே வைத்துக் கட்டியிருக்கிறேன். பையைத் திறந்து பார்த்தவுடன் அவை கண்களில் குத்துமே என்ன செய்வது என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டேன். இரண்டு மணிநேர பறத்தலின் பின் புரூணையில் கால்பதித்தேன்.

புரூணை என்ற அந்தக் குட்டி பூங்காவனத்துக்கென ஒரேயொரு விமான நிலையம் தான் இருக்கிறது. புரூணை ஒரு முஸ்லிம் நாடு என்பதைப் பறைசாற்ற விமான நிலைய உள்ளகப் பகுதிகளில் அல்குர்ஆன் வசனங்களால் அழகு படுத்தியிருக்கிறார்கள். இது ஒரு செல்வச் செழிப்பான நாடு என்று விமான நிலையமே சொல்லிவைக்கிறது.

சோதனை, போக்குவரத்துக் கெடுபிடி, இராணுவ சீருடை என்று எதுவுமில்லாமல் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. 'பண்டார் ஸ்ரீ பகவான்'- இது ஒன்றும் இந்துக் கோயில் என்று நினைத்து விடாதீர்கள். புரூணை விமான நிலையத்தின் பெயர்தான் அது. பண்டார் ஸ்ரீ பகவானுக்கு பிறகு விளக்கம் சொல்லுகிறேன்.

ஐம்பதுகளை எட்டிப் பிடிக்கும் பாட்டன் பூட்டன்மார் வேலை செய்யும் நமது நாட்டு விமான நிலையம் போலன்றி, 20 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதிலான இளைஞர் யுவதிகளே குடிவரவு அதிகாரிகளாக புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள்.

புரூணை வந்ததற்கு நன்றி சொல்லி தஸ்தாவேஜுகளைப் பரிசோதித்த குடிவரவு அதிகாரியொருவர் சில வாரங்கள் புரூணையில் தங்குவதற்கான விசா அனுமதியை வழங்கினார். அதற்கான விசா கட்டணமாக 20 புரூணை டொலர்கள் செலுத்த வேண்டும் என்றும் கோரினார். புரூணை டொலர்களை எடுத்துச் செல்லாதபோதும் ஏற்கனவே நண்பர் இஸ்மத் அலி சொல்லியிருந்ததற்கிணங்க சிங்கப்பூர் டொலர்களை வைத்திருந்தேன். புரூணையில் எல்லா இடங்களிலும் தாரளமாக சிங்கப்பூர் டொலர் புளக்கத்திலுள்ளது. இரு நாடுகளின் பணப் பெறுமதியும் சமனானதாகும். 20 சிங்கப்பூர் டொலர்களைக் கொடுத்து விசா அனுமதியைப் பெற்றுக் கொண்டேன்.

பயணப் பொதிகள் பரிசோதிக்கும் இடம் வந்தவுடன் மீண்டும் கலக்க ஆரம்பித்தது.

பயணப் பொதிகள் ஸ்கேன் செய்து முடிய முடிய பிரயாணிகள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். எடுபிடிகள் பெரிதாகத் தெரியவில்லை. ஆனாலும் எனது பைக்குள் உள்ள 'அது' என்னைப் பயமுறுத்திக் கொண்டே இருந்தது.

ஸ்கேனர் காட்டிக் கொடுத்துவிட்டது!

அதிகாரிகள் எனது பயணப் பையை சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

எவருடைய பயணப் பொதிகளையுமே திறந்து காட்டுமாறு கூறாத அதிகாரிகள் எனது பையை மட்டும் திறந்து காட்டச் சொன்னவுடன் பதற்றமாகவே இருந்தது. நான்கு அதிகாரிகள் எனது பையிலேயே கண்களைக் குத்திக் கொண்டிருந்தார்கள். ஒருவர் துளாவ ஆரம்பித்தார். இன்னொருவர் எனது கடவுச்சீட்டை வாங்கிப் பார்த்து விட்டு இவர் ஒரு ஜேர்னலிஸ்ட் (பத்திரிகையாளர்) என்று மற்ற அதிகாரிகளிடம் கூறவே எனது கடவுச்சீட்டு கைமாறிக் கொண்டிருந்தது. எலியின் சீவன் போவது விளையாடிக் கொண்டிருக்கும் பூனைக்கு எங்கே தெரியப் போகிறது?

புரூணைக்கு ஊடகவியலாளர் என்றாலே ஒரு பயமிருக்கிறது. அதிலும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களென்றால் ஒரு படி மேல். அதன் இரகசியத்தை என்னிடம் கேட்டால் சொல்லுவேன். எழுத வேண்டாம் என்பது நண்பர் இஸ்மத் அலியின் கட்டளை.

திறக்கப்பட்ட பயணப் பொதியிலிருந்து ஒவ்வொரு பொருட்களாய் வெளியில் எடுக்க ஆரம்பித்தார்கள். ஆளுக்கொரு கையில் ஒவ்வொரு பத்திரிகை!

இப்போது வசமாக மாட்டிக் கொண்டதாகவே எனக்குப்பட்டது.

'என்ன இது?' அதட்டினார்கள் என்று சொல்ல மாட்டேன். விளக்கம் கேட்டார்கள். அனேக பத்திரிகைகள் தமிழில் இருந்ததால் அவர்களுக்கு விளக்கம் சொல்ல மிச்ச நேரம் எடுக்கவில்லை. Trend ஆங்கில சஞ்சிகைகளை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தார்கள். முடிந்தது கதை என்று நினைத்தேன். ஒன்றுமே சொல்லவில்லை!

அப்படியானால் என்னதான் சொன்னது அந்த ஸ்கேனர் இயந்திரம்?

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக ஊடகங்கள் Social Media

### Facebook

சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படும் Facebook, Twitter, Youtube, Blogger... போன்றவை நவீன புரட்சிகளுக்குக் காரணமாக அமைந்து நல்ல பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் துரதிஷ்ட வசமாக சிலர் இதற்கு அடிமையாகி தீய விடயங்களின் பால் செல்கின்றனர். எனவே, சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்தி நன்மையடைய முடியும் என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

www.facebook.com/JMFSriLanka

### Youtube

Youtube இலிருந்து வீடியோக்களைத் தரவிறக்கம் Download செய்ய Real Downloader எனும் மென்பொருள் உதவுகிறது. இது தவிர வேறு வழிமுறைகளும் உள்ளன. அவை அடுத்த இதழில்...

www.youtube.com/JMFSriLanka

### Twitter




Follow JMFSriLanka

சமூக ஊடகங்கள் Social Media பற்றிக் கற்க ஆர்வமாக உள்ளீர்களா? உங்கள் தொழில் மற்றும் கல்வி வழங்களை சமூக ஊடகங்கள் மூலம் முன்னேற்ற விரும்புகிறீர்களா? அப்படியாயின்

Just Media Foundaton நடத்தும் ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வில் பங்கு கொள்ளுங்கள்

**தொடர்புகளுக்கு:**

**071 9392121, 077 7871758**



# உங்கள் facebook கணக்கு பாதுகாப்பானதா?

டாக்டர். அலி ஸஜா
(HND-IT, UWE, SCJP)

Facebook இன்று இளைஞர், யுவதிகளை மூழ்கடித்துள்ள ஒரு சமூக ஊடகமாகும். அதில் முகம் தெரியாத முகவரிகள் பல. சமூக வலை தளங்கள் பல்கிப் பெருகியுள்ளபோதும் இன்று அதிகம் பயன்படுத்தப்படும் சமூக ஊடகம்தான் Facebook. நட்புக்காக தொடங்கும் Facebook கணக்குகள் நாளடைவில் சிலரின் சமூக சீர்கேட்டுக்கே கற்புகளை இழக்க வழிவகுத்து விடுவதுமுண்டு.

Facebook இன் ஸ்தாபகர் மார்க் ஸுகர் பேர்க் (Mark Zuckerberg)இன் Facebook கணக்கினுள்ளே நுழைந்து அவரது தனிப்பட்ட புகைப்படங்களை Hacking செய்து அனைவருக்கும் பகிர்ந்து தமது குறும்பு விளையாட்டை அரங்கேற்றிக் காட்டினர் சிலர். அதன் பின்னர்தான் நாம் தற்போது Facebookஇல் காணும் Timeline மாற்றமடைந்தது.

குறும்புக்காக செய்யும் விளையாட்டுத்தான் இன்றைய இணையத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்த முதல் வைரஸ் என்பது நாமறிந்ததே! பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுவனொருவன் தனது நண்பனை விளையாட்டாகப் பயமுறுத்துவதற்காக அனுப்பிய மின்னஞ்சல்தான் உலகின் முதலாவது வைரஸ். எனவே, எமது எதிரிகள் அல்ல, நண்பர்கள்கூட விளையாட்டுக்காக செய்யும் இணைய குறும்புகள் வினையாக முடிந்துவிடக் கூடும். அவற்றின் விளைவை நாம்தான் அனுபவிக்க வேண்டும்.

நீங்கள் Facebook பயன்படுத்துபவராக இருந்தால் அதிலுள்ள பாதுகாப்பு முறைகளை அறிந்திருப்பது பயனளிக்கும் எனக் கருதுகிறோம். Facebook பயன்படுத்துபவர்களை இதிலிருந்து முழுக்குப் போட்டு விடுவதைவிட பயன்படுத்துவதை பாதுகாப்பாக, பயனுள்ளதாக, பண்பாடாக நேரத்தை வீணாக்கமாமல் பயன்படுத்தக் கற்றுத் தருவது சிறந்தது.

ஒரு நிமிடம்...!!!

Facebook பயன்படுத்த முன் நான் ஏன் இப்போது இதனைப் பயன்படுத்துகிறேன் என்று ஒரு நிமிடம் யோசியுங்கள். அடுத்த நொடி உங்களுக்குக் கிடைக்கும் விடை நீங்கள் Facebook பயன்படுத்த வேண்டுமா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். காரணம், பலர் இன்று எந்தவொரு பிரயோசனமுமில்லாமலும் நேரத்தை வீணடிப்பதற்காகவும் Fashionஎன்ற நினைப்பிலும் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

உங்கள் கணக்கை Hacking செய்வது ஒன்றும் அவ்வளவு கடினமானதல்ல; உங்கள் கணக்கைக் களவாடுவது (Hacking) கடினமானதல்ல என்பதை மனதில் நன்றாகப் பதிந்து கொள்ளுங்கள். எனவே, முதலில் இந்தத் தடையைத் தாண்டி அதாவது, நான் Facebook பயன்படுத்த வேண்டுமா, இல்லையா என்ற தடை தவிர்க்க முடியாத நிலையில், அல்லது ஏதாவதொரு காரணத்தினால் நீங்கள் Facebook பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால் சில முக்கிய விடயங்களைக் கண்டிப்பாக கவனத்தில் கொள்ளுங்கள்.

**பாதுகாப்பான வழிமுறைகளின் ஊடாகவே உங்கள் Facebook கணக்கை ஆரம்பியுங்கள்**

நீங்கள் பெரும்பாலும் கணக்கை ஆரம்பித்திருப்பீர்கள். அவ்வாறெனில் உடனே உங்கள் Facebook கணக்கிலுள்ள Setting எனும் பகுதிக்குச் சென்று உங்கள் தனிப்பட்ட (Privacy) விடயங்களைப் பேணிக் கொள்ளுங்கள். ஆண்களைவிட பெண்களே இதில் மிகவும் கவனமாகவும் அவதானமாகவும் பாதுகாப்பாகவும் விழிப்போடும் நடந்து கொள்ள வேண்டும். பெண்களின் தனிப்பட்ட விடயங்களை திரைக்குக் கொண்டு வருவதில் இன்பம் காணும் கயவர்களிடமிருந்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

**யாரோ உங்களைப் பின் தொடர்கிறார்கள்...!**

சமூக ஊடகம் எனும் பொது வெளியில் அலைந்து திரியும் உங்களை நீங்கள் அறியாமல் யாரோ பின் தொடர்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். Facebook Timeline வடிவத்தில் உங்களது செயற்பாடுகள் அனைத்தும் நேரம், திகதி என்பவற்றுடன் காட்டப்படுவதால் யாரேனும் உங்களது செயற்பாடுகளைத் தொடர்ந்தேர்ச்சியாகக் கண்காணிக்க வாய்ப்பாக அமைகிறது. எனவே, நீங்கள் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதுபவை பாதுகாப்பற்றவையாக மாறலாம். எனவே, Timeline வடிவத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக Timeline Privacy Setting ஐ செய்ய வேண்டும்.

**Facebook**
**ஒரு பொதுத்தளம் (Public Space)**


இது மிக முக்கியமான வரையறை. சமூக ஊடகங்கள் என்பது ஒரு பொதுத்தளம் (Public Space). ஒரு பொது இடத்தில் நாம் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை என்ற வரையறை இருக்கும்; எமக்கும் பேணுதல் இருக்கும். ஆனால், நாம் அறியாத அனைவருமே காண்கின்ற ஒரு பொது மேடைதான் சமூக வலைதளங்கள் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். நாம் எமது நண்பர்கள் நால்வருடன் தனியாகக் கதைத்து மகிழ்கின்ற ஓரிடமாக நினைத்து நாம் பதிவேற்றி (Upoad), பகிர்ந்து (Share) கொள்ளும் விடயங்கள் எமது தனித்துவத்தைப் பாதித்து விடுகின்றன என்ற உண்மையை விளங்கி, நாங்கள் Facebook இல் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை என்ற வரையறையை இட்டுக் கொள்வது பாதுகாப்பானது.

**பெண்களே!**
**எக்காரணம் கொண்டும் உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றி விடாதீர்கள்**

பெரும்பாலும் பெண்கள் தங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றுவதில்லை. அதற்குப் பதிலாக வேறு புகைப்படங்களைப் பதிவேற்றுவர். ஆனால், சில நிகழ்வுகளில் கலந்து கொண்டு அதில் குழுவாக எடுத்த படத்தை பதிவேற்றிவிடுவர். இதனால் அவ்வளவு காலமும் கட்டிக்காத்த அந்த தனித்துவம் தவிடுபொடியாகி விடும். பொது இடங்களில் தங்கள் அழகை மறைக்க விரும்பும் நாணமுள்ள நங்கையர் பொதுத் தளத்தில் (Public Space) தங்கள் அழகை அனைவருடனும் பகிர்ந்து கொள்வது எவ்வளவு மடைத்தனம்?

உங்கள் புகைப்படத்தை மாத்திரமல்ல, உங்கள் குடும்பத்தினர், உங்கள் நண்பிகள், உங்கள் வகுப்புத் தோழிகள் யாருடைய புகைப்படத்தையும் பதிவேற்றி விடாதீர்கள். அது நீங்களே உங்கள் குடும்பம், நட்பை பொது இடத்தில் அவமானப்படுத்துவதாக அமையும். எனவே, பேஸ்புக்கைப் பயன்டுத்தும் நீங்கள் அது பாதுகாப்பானதா, இல்லையா என்பதை அறிந்து அதற்கேற்ற பாதுகாப்பு முறைகளில் பயன்படுத்துவதே சிறந்தது. ■

# தொடுதிரைக் கணினிகள் குழந்தைகளுக்கு நல்லதா?



'டச் ஸ்கிரீன்' எனப்படும் தொடுதிரையுள்ள ஸ்மார்ட் போன்களும் 'டெப்ளெட்கள்' என்று அழைக்கப்படும் தொடுதிரை கையடக்கக் கணினிகளும் சிறு குழந்தைகளின் கற்றலுக்கு நல்லது என்று புதிய ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இதை சில விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள்.

பொதுவாக, குழந்தைகள் மணிக் கணக்கில் கணினிகள், தொடுதிரை கணினிகள், தொலைக்காட்சிகளின் முன்னால் நேரத்தை செலவிடுவது தவறு என்றும், இதனால் அவர்களின் மூளையின் கற்றல் திறன் பாதிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் கவலை வெளியிட்டு வரும் நிலையில், இந்தப் பிரச்சினை குறித்து விஸ்கான்ஸின் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வின் முடிவுகள் இந்தக் கவலை தேவையற்றவை என்று கூறியிருக்கிறது.

பொதுவாகவே ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இயற்கையிலேயே தொழில் நுட்பத்தை அறிந்து கொள்வதில் கூடுதல் ஆர்வம் இருக்கிறது. எனவே, அந்த வயது குழந்தைகளின் கைகளில் ஒரு புதிய தொழில் நுட்பக் கருவியைக் கொடுத்தால், பெரியவர்களைவிட இயல்பாக அந்தக் கருவியை ஆராய்ந்து அதைக் கையாள்வதில் அவர்கள் பெரும்பாலும் வெற்றி பெறுவார்கள்.

இந்தப் பின்னணியில் இரண்டு வயதுக் குழந்தைகளிடம், தொடுதிரை கையடக்க கணினிகள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆய்வு செய்த விஸ்கான்ஸின் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், குழந்தைகளின் கற்றலை இந்த தொடுதிரை கணினிகள் ஊக்குவிக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நூற்றாண்டுக் கல்வி இலக்கு: முஸ்லிம் கல்வித்துறை மீதான பார்வை

இலங்கையின் கல்வி முறைமை மீதான பலத்த விமர்சனம் மிக நீண்ட காலமாகவே பல மட்டத்திலும் இருந்து வருகிறது. அண்மைக் காலம் முதல் கல்வி முறைமை மீதான விமர்சனம் பல கட்டுரைகளாக பத்திரிகைகளிலும் இணைய தளங்களிலும் புத்தக வடிவிலும் பிரசுரமாகிய வண்ணமுள்ளன. இவற்றால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டதா யார் கண்ணிலும் பட்டுள்ளதா, கல்வித் துறைசார் ஆளுமைகளால் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.



> இலங்கை முஸ்லிம்களிடம் பிரபல்யமான பாடசாலைகளாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எதுவுமில்லை. ஆனால், குறிப்பெடுத்தலையும், பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறலையுமே எமக்குச் சொல்லித்தந்தது. எமது முழு பாடசாலைகளின் கலைத் திட்டமுமே குறிப்பெடுத்தலும் சிறந்த பெறுபேற்றை நாடும் கல்வி முறைமையாகவே உள்ளது.

இலங்கையில் கல்வி முகாமைத்துவம், கல்வி உளவியல், கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகளால் தவறுகள் புரியப்படுவதுதான் எமது கல்வி முறைமீதான பலமான அதிர்வை ஏற்படுத்துகின்றது. அவர்களின் பட்டங்களை வீட்டிலே வைத்துவிட்டு பிரம்புகளை மட்டுமே கையில் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குள் நுழைந்து விடுவதாக நடுநிலைமையாகச் சிந்திப்போர் அங்கலாய்க்கிறார்கள். கற்பது தங்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக மட்டுமே; நடந்து கொள்வது தங்கள் மனம்போன போக்கிலேதான். கல்வி உளவியல், கல்விச் சமூகவியல், கல்வி தத்துவவியல் எல்லாமே எதற்காக? பிரயோகிக்க முடியாத கல்வி இறந்துகிடக்கும் பிணத்தை ஒத்ததாகவல்லவா இருக்கிறது. என்றாலும், அண்மைக் காலம் முதல் முஸ்லிம் கல்வியில் பாரிய வளர்ச்சிப் போக்குப் பதிவளித்து வருகிறது. கடந்த காலங்களிலும் பார்க்க பல்கலைக்கழக நுழைவிலும் விஞ்ஞானத் துறைமீதான முஸ்லிம் மாணவர் வருகையிலும் வளர்ச்சி பதிவளித்திருக்கிறது. வடக்கு, கிழக்குத் தவிர்ந்த முஸ்லிங்களின் கல்வி மீதான நாட்டமும் அதிகரித்து வருகிறது.

அண்மையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியும் பாராளுமன்ற கல்வி மீளமைத்தற் தெரிவுக் குழுவின் பிரதிநிதியுமான பேராசிரியர் சுசந்த லியனகே அவர்களால் 'குற்றச் செயல்களை உருவாக்கும் கல்வி' (*Educating to create morons*) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அக்கட்டுரையில் ஒரு படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய புத்தகம் விரிக்கப்பட்டு, அதில் கல்வி முறைமை (*Education System*)என எழுதப்பட்டுள்ளது. அந்தப் புத்தகத்திற்குள் நன்றாக உடுத்திக் கொண்ட மாணவர்கள் உள்ளே நுழைகிறார்கள் அவர்கள் வெளியில் வரும்போது கழுதைகள் போன்று வெளியாகிக் கொண்டிருக்கிறார்கள். குறித்த கட்டுரையும் இப்படத்தை சித்தரிப்பதாகவே எழுதப்பட்டிருந்தது.

அண்மையில் ஓர் ஆங்கில வாராந்தப் பத்திரிகைக்கு செவ்வி வழங்கிய மனிதவள அபிவிருத்தி அமைச்சர் டியூ குணசேகர அவர்களும் தற்போதைய கல்வித்திட்டம் சிறந்ததொரு கல்வித் திட்டமில்லை என்றும், இதனால் எமது இளைஞர்களுக்கு வருமானமீட்டவும் வாழவும் முடியாது என்றும், உடனடியாக இக்கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த 2012இல் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய முன்னாள் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க அவர்களும் எமது கல்வி முறைமை அதிகமான வழிப்பறிக்காரர்களையும் போதைக்கு அடிமையானவர்களையும் பாதாளக் கோஷ்டிக்காரர்களையும் குடும்ப வன்முறையாளர்களையும் ஏமாற்றும் பொய் பேசும் அரசியல்வாதிகளையும் உருவாக்கி விட்டுள்ளதாகக் கூறியதுடன், இவர்களுக்கு கடந்த பல வருடமாக கல்விச் சான்றிதழ்களை வழங்கிய நானும் ஒரு வகையில் குற்ற உணர்வுடன் இருப்பதாகக் கூறி விரைவில் எமது கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும் எனப் பேசியுள்ளார்.

உண்மையில் எமது பாடசாலைகளில் என்ன நடக்கிறது? மாணவர்கள் வகுப்பறையில் அமர்ந்து குறிப்புகளை எழுதுவதும் பின்னர் தனியார் வகுப்புகளில் கலந்து கொள்வதும், பரீட்சைக்கு நெட்டுருச் செய்வதும் சிறந்த பரீட்சைப் பெறுபேற்றைப் பெறுவதற்கு முயற்சிப்பதுமே நடைபெறுகின்றன. மாறாக, எந்த மாணவனாலோ, ஆசிரியராலோ அல்லது பெற்றோராலோ சிறந்த வாழ்க்கை முறைமை வேண்டும் என்று முயற்சித்தது கிடையாது.

பேராசிரியர் லியனகே அவர்கள் இலங்கைப் பல்கலைகழகங்களிலும் இதுவேதான் நடைபெறுவதாகக் கூறுகின்றார். பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்களிடம் குறிப்புகளைப் பெற்றும் அவற்றை நெட்டுருச் செய்து பரீட்சைகளில் ஒப்பிவிடுவதுமே நடைபெறுவதாகக் கூறி, நாம் உற்பத்தி செய்யும் கல்வித் தரமுள்ள பட்டங்களால் தொழில் சந்தையில் முகங்காட்ட முடியாதிருப்பதாகவும் தொழிற் சந்தை அவற்றை நீண்ட காலமாகவே நிராகரித்து வருவதாகவும் விமர்சிக்கின்றார்.

### தேகாரோக்கியமான கல்வி (*wholesome Education*)

போரசிரியர் லியனகே அவர்களின் கூற்றுப்படி பிரபல்யமான பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் பட்டம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொழிற் சந்தையில் நல்ல தொழிலொன்றைப் பெற முடிகிறது. இலங்கை முஸ்லிம்களிடம் பிரபல்யமான பாடசாலைகளாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எதுவுமில்லை. ஆனால், குறிப்பெடுத்தலையும், பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறலையுமே எமக்குச் சொல்லித்தந்தது. எமது முழு பாடசாலைகளின் கலைத் திட்டமுமே குறிப்பெடுத்தலும் சிறந்த பெறுபேற்றை நாடும் கல்வி முறைமையாகவேயுள்ளது. (*note taking grades seeking education*) எமது பாடசாலைகள் தொடர்ந்தும் கடந்த காலத்தை மறந்தே பயணிக்கின்றன. ஆரோக்கியமான கல்வி (*wholesome education*), மறைக் கலைத் திட்டம் (*Hidden curriculum*), மேலதிக கலைத் திட்டச் செயற்பாடுகள் (*Extracurricular activities*), இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகள் (*Co-Curricular activities*) ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக எமது மாணவர்களுக்கு புத்தகக் கல்வி தவிர மேலுள்ள எதிலும் உத்தியோகபூர்வமாக ஈடுபடுவதற்கான நேரம் கிடைப்பதில்லை. கணிசமான பாடசாலைகளில் விளையாட்டுத் திடல்கூட இல்லை என்பது புதிரான விடயமாகும். பரீட்சை எழுதும் அபரிமிதமான கற்பிதத்திலேயே மாணவர்கள் புத்தகப் பையைச் சுமந்து வருகிறார்கள். பரீட்சையில் நல்ல பெறுபேறு கிட்டினால் முழு வாழ்க்கையிலும் வெற்றி பெற்றதாக சமூகமும் மாணவர்களும் பிழையாக உருவகப்படுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கியம் எமது கல்வி முறைமையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆரம்பக் கல்வியில் 5ஆம் தர புலமைப் பரிசிலுக்கும் இடைநிலையில் சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறு பெற்று கணித, விஞ்ஞானத் துறைகளில் கால்பதிக்க வேண்டும் என்றும், உயர் தரத்தில் பல்கலைக்கழகம் என்ற பலத்த போட்டியை வென்று கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே மாணவர்கள் ஆற்றுவிக்கப்படுகிறார்கள். அதிகமான மாணவர்கள் தங்களின் எவ்வித விருப்பமும் இன்றி பெற்றோராலும், ஆசிரியராலும் தள்ளப்பட்டு விருப்பமில்லாத துறைகளில் தங்களின் படிப்பை மேற்கொள்வதும் எமது கல்வி முறைமை மீது சுட்டுவிரலை நீட்டும் செயற்பாடாகவே உள்ளது.

(மிகுதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாகல் பாடசாலைக்குள் புகுந்த இனவாதம்

## இனவாதத் தீயில் கருகும் கல்வி உரிமை

ஏ. முஹம்மத் பாயிஸ்

**ஒரு தேசிய பாடசாலையின் அதிபர் இலங்கைப் பிரஜைகளின் கல்வி உரிமையை இனவாதத்தின் காரணமாக மறுத்திருப்பதுடன் சட்டத்திற்கு மாற்றமாகவும் செயற்பட்டிருக்கிறார். இது இலங்கைவாழ் மக்களை தவறாக வழி நடத்தும் செயற்பாடாகும்.**




இலங்கையின் கல்வித் தரமும் அதற்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் அனுசரணையும் உலகளவில் போற்றப்படுகிறது. இதற்கு இந்நாட்டில் திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனோநிலையே காரணமாகும். ஆனால், இளம் பிஞ்சுகளின் கல்வியில் இனவாதத் தீயைப் பரப்பி எதிர்கால சந்ததியின் வாழ்வைக் கேள்விக் குறியாக்கிவிடும் செயற்பாடுகள் ஆங்காங்கே முளைவிட்டிருக்கிறது. இவ்வாறான இனப் பாகுடனான சம்பவங்களில் ஒன்றுதான் குருநாகல் நகரிலும் இடம்பெற்றுள்ளது.

மருத்துவர்கள் நான்கு ஆண்டுகள் சேவையின் பின்னர் இடமாற்றம் பெறுகின்றனர். 2013ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் 3 முஸ்லிம் வைத்தியர்கள் உட்பட, 25 வைத்தியர்கள் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றனர். இவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லும் பிரதேசத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது நியதியாகும். இதற்கிணங்க குருநாகல் பிரதேசத்திலுள்ள தேசிய பாடசாலையொன்றில் இணைத்துக் கொள்வதற்கு 3 முஸ்லிம் வைத்தியர்களதும், 4 சிங்கள வைத்தியர்களதும் பிள்ளைகளுக்கு கல்வி அமைச்சின் செயலாளரினால் கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. முஸ்லிம் வைத்தியர்கள் குறித்த தேசிய பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக அதிபரைச் சந்திக்கச் சென்றபோது, அதிபர் தம்மைச் சந்திக்க வந்த வைத்தியர்களிடம், அவர்களது பெயரைக் கூடக் கேட்காது இந்தப் பாடசாலைக்கு முஸ்லிம் பிள்ளைகள் வருவதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. நான் அவர்களை அனுமதிக்கப் போவதில்லை. அவர்களுக்குப் பதிலாக 3 பௌத்த மாணவர்களையே அனுமதிக்கப் போகிறேன் எனத் தெரிவித்துள்ளார். பின்னர், அந்த அதிபர் தம்மிடம் வந்த வைத்தியர்களின் பெயரைக் கேட்டுத் தெரிந்த பின் அதிர்ச்சியடைந்துள்ளார்.

மேலும், இவ்வைத்தியர்கள் குறித்த அதிபரிடம் எவ்வளவோ கதைத்தும் அவர்களது பிள்ளைகளை இப்பாடசாலையில் அனுமதிக்க மறுத்துள்ளார். இதன் பின்னர் இவ்வைத்தியர்கள் பலமுறை முயற்சிகள் எடுத்தும் அதிபர் குறித்த வைத்தியர்களைச் சந்திப்பதிலும் அவர்களது பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதிலும் அலைக்கழிப்புச் செய்கிறார். இந்நிலையில், ஏமாற்றத்திற்குள்ளான குறித்த வைத்தியர்கள் நீதியமைச்சரைச் சந்தித்துள்ளதுடன் அவரினூடாக கல்வி அமைச்சரைச் சந்தித்து தெளிவுபடுத்தியுள்ளனர். இருப்பினும், குறித்த அதிபர் தமது நிலைப்பாட்டிலிருந்து தளரவில்லை.

குறித்த வைத்தியர்களின் பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படாமையால் அவர்களின் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலை நீடித்து வருகிறது.

நாட்டில் அண்மைக் காலமாக பரப்பப்பட்டு வரும் இனவாத, மதவாதக் கருத்துக்கள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக நாட்டின் பல்வேறு தரப்பினரையும் சென்றடைந்து, அவர்களை மனோ நிலை மாற்றத்திற்குள்ளாக்கியுள்ளன. இவ்வாறான கருத்துக்கள் நாட்டின் இன நல்லுறவில் மறைமுகமாகவும் நேரடியாகவும் தாக்கம் செலுத்துவதைக் காண முடிகிறது.

ஒரு நாட்டின் பிரஜைகள் சகல உரிமைகளையும் கொண்டவர்களாக மதிக்கப்பட வேண்டும். அவ்வாறு மதிக்கப்படுகின்றபோது நீதியான நேர்மையான ஆட்சியையும் சமூக நல்லிணக்கத்தையும் காண முடியும். இது போன்ற இனவாதச் செயற்பாடுகள் நாட்டின் சட்டவாட்சியை சீர் குலைப்பதாக அமைந்து விடுகிறது.

இலங்கை அரசியலமைப்பின் அத்தியாயம் ii உறுப்புரை 12(2) இல்: எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல், அபிப்பிராயம், பிறப்பிடம் என்பவற்றின் அடிப்படையில் அல்லது இவைகளுள் ஏதேனுமொன்றின் அடிப்படையிலமைந்த காரணங்களுக்கெதிராகப் பாரபட்சத்திற்கு ஆளாகக் கூடாது.

இது ஒரு பிரஜையின் உரிமையை மிகத் தெளிவாக விளக்குகிறது. அதாவது, சட்டதின் முன் சமத்துவம் என்பதுடன், எந்தவொரு நபருக்கும் சார்பான சிறப்புரிமைகளின்மை மற்றும் சட்டத்திற்கு அனைத்து வகுப்பினரும் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. சட்டத்தின் பாதுகாப்பு என்பது ஒரே விதமான நிலையிலுள்ளவர்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் என்பவை தொடர்பில் சட்டத்தினால் ஒரே விதமாக நடத்தப்படுவதைப் பெற வேண்டுமென்பதைக் கருதுகிறது.

இலங்கையின் சட்டவாட்சிக்கு இந்த அரசியலமைப்பின் ஏற்பாடு மிக முக்கியமானதாகும் ஆனால், மேற்குறித்த சம்பவம் இதனை சீர் குலைப்பதாகவே உள்ளது. கல்வி என்பது மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இலங்கை அரசியலமைப்பில் அத்தியாயம் iv, உறுப்புரை 21இல்: நபரொருவர் இலங்கையின் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராயிருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது.

ஒரு தேசிய பாடசாலையின் அதிபர் இலங்கைப் பிரஜைகளின் கல்வி உரிமையை இனவாதத்தின் காரணமாக மறுத்திருப்பதுடன் சட்டத்திற்கு மாற்றமாகவும் செயற்பட்டிருக்கிறார். இது இலங்கைவாழ் மக்களை தவறாக வழி நடத்தும் செயற்பாடாகும்.

இனவாதம் மக்களின் அன்றாட பொது வாழ்க்கையை எவ்வளவோ சீர் குலைத்துக் கொண்டிருக்கிறது என்பது இது போன்ற சம்பவங்களின் மூலம் வெளிப்படையாகிறது. இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் நாட்டின் பிரஜைகளுக்கு பாரபட்சமற்ற சேவைகளைச் செய்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் நாட்டில் சட்டவாட்சியை நிலை நிறுத்தும் பொருட்டு பிரஜைகளின் கல்வி, பொருளாதார உரிமைகளை சமமாகப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இனவாதத்தால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்களை அரசாங்கம் கவனத்திலெடுத்து நாட்டின் பிரஜைகளுக்கு சம வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் நேற்று இன்று நாளை



கடந்த இதழ் தொடர்ச்சி

அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன்

இவ்வாறு கடந்த கால இங்கையைக் கட்டியெழுப்புவதில் அதன் அடையாளத்தைப் பாதுகாப்பதில் முஸ்லிம்கள் ஆற்றிய பணி பாரியது. சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் 1000 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய சமாதான வாழ்வும் இன நல்லுறவும் அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு வியப்பூட்டியது. பிரமிக்கச் செய்யும் இந்த வரலாற்று உறவுகளுக்கு இடையில் என்ன நடந்தது. இன்றைய இலங்கைச் சூழலில் முஸ்லிம்-சிங்கள-தமிழ் உறவுகள் எந்த நிலையில் உள்ளன. இலங்கைத் தேசியத்தைக் கட்டி யெழுப்புதலில் இருந்து முஸ்லிம்கள் ஏன் அந்நியப் பட்டு நிற்கின்றார்கள்? இது இன்றைய செழிப்பான சூழலில் எழுப்பப்படவேண்டிய முக்கிய வினாவாகிறது.

### இன்றைய சூழலில் முஸ்லிம்களும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும்

இன்றைய இலங்கைச் சூழலில் தேசத்தைக் கட்டியெழுப்பல் பாரிய பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந்தக் கனயதார்த்தத்தை நாம் மறுதலிக்க முடியாவிடினும் அவற்றைத் தாண்டிச் செல்ல வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது. இன்று பெரும்பான்மைச் சமூகத்திலுள்ள ஒரு சிலர் முஸ்லிம் சமூகத்தை நோக்கி பல குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். இணையங்கள், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள், சமூக ஊடக வலைப் பின்னல்கள் மூலம் இக்குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுவதை அவதானிக்கலாம். அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. முஸ்லிம் சனத்தொகை வேகமாக உயர்கிறது.
2. பள்ளிவாயல்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.
3. திட்டமிட்ட முஸ்லிம் குடியேற்றங்கள் நடை பெறுகின்றன.
4. இன அடிப்படையிலான அரசியலை மேற்கொள்கின்றனர்.
5. தாய் நாட்டுப் பற்று அற்றவர்கள்.
6. தமது வணிக நிறுவனங்களால் சிங்களவர்களை ஏமாற்றுகின்றனர்.
7. பௌத்த கலாசாரத்திற்கு இடையூறு செய்கின்றனர்.

இங்கு இக்குற்றச்சாட்டுக்களை நாம் மிகுந்த நிதானத்துடனும் புத்திசாதுர்யத்துடனும் அணுக வேண்டியுள்ளது. இது போன்ற குற்றச்சாட்டுகள் எழுவதற்கான உள்ளக நிலைமைகள் முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகின்றனவா என்பது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் நாம் பெரும்பான்மை பௌத்த நாடொன்றில் சிறுபான்மையாக வாழ்கின்றோம். இது போன்றதொரு நாட்டில் எமது இஸ்லாமிய தனித்துவ வாழ்வை நுணுக்கமாக ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது. இந்த ஒழுங்குபடுத்தலில் நாம் கடந்த காலங்களில் விட்ட பல தவறுகளும் இக் குற்றச் சாட்டுக்கு பின்புலமாக இருக்கலாம்.

எமது உள்ளக வாழ்வை ஒழுங்குபடுத்தல் முதன்மையான கவனம் பெறவேண்டிய காலத்தில் நாம் வாழ்கின்றோம். இது குறித்து அதாவது, தற்போதைய இலங்கையின் சூழ் நிலைகளைக் கவனத்திற் கொண்டு நாம் முன்னெடுக்க வேண்டிய சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

பள்ளிவாயல் நிர்மாணம் குறித்து ஒரு தெளிவான கொள்கை நிலைப்பாட்டை எடுப்பது உள்ளக அமுல்படுத்தலில் முக்கியமானது. தவிர்க்க முடியாத தேவை கருதி பள்ளிவாயல்களை நிர்மாணிக்கும்போது பௌத்த மத ஆலயங்களுக்கு மிகச் சமீபமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கவனத்திற் கொள்ளல் அவசியம்.

மத ஆலயங்களை நிறுவுவது தொடர்பான சட்டமும் அரசாங்கத்தில் அதைப் பதிவு செய்வதற்கான ஒழுங்கும் உள்ளது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கணிப்பீட்டின் படி, மொத்தமாக இலங்கையில் 2500 பள்ளிவாயல்கள் உள்ளன. அதில் 500 பள்ளிவாயல்கள் இதுவரை பதிவு செய்யப்படவில்லை. பள்ளிவாயல்களைப் பதிவு செய்வதில் நாம் எவ்வளவு அசிரத்தையாக உள்ளோம் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். சிலவேளை பதிவு செய்யப்படாத பள்ளிவாயல்கள் குறித்து இனவாதிகள் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தலைப்பட்டால் நாம் மிகுந்த அசௌகரியங்களுக் உள்ளாகலாம்.

எமது சமய அனுஷ்டானங்கள் கடமைகளை மேற்கொள்ளும்போது ஏனைய மதத்தினரின் வழிபாடுகளுக்கு தொந்தரவில்லாத வகையில் நாம் நடந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

பள்ளிவாயல் பயான்களுக்காக, தொழுகைகளுக்காக ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும்போது அதற்கான நேரம், சத்தத்தின் அளவு தொடர்பான ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதும் அவசியம். அதான் சொல்வதைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட ஊரில் எல்லாப் பள்ளிகளிலும் ஒரே நேரத்தில் அதான் சொல்லும் ஒழுங்கு முறையொன்றை வகுத்துக் கொள்ளல் அவசியம். ஏனெனில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல நிமிடங்கள் அதான் ஒலிப்பது சூழவுள்ள பெரும்பான்மை மக்களுக்கு இடையூறாக இருக்கலாம். அவர்களின் வயிற்றெரிச்சலைக் கிளம்பலாம்.

உழ்ஹியாக் காலங்களில் மாடுகளை அறுக்கும் முன்னரும் அறுத்த பின்னரும் கையாள வேண்டிய இஸ்லாமியப் பண்பாடுகளைப் பேணுவது அவசியம். ஏனெனில் சிலர் இவ்விடயத்தில் நடந்துகொள்ளும் முறை பெரும்பான்மை மக்களிடையே பாரிய விமர்சனங்களை எழுப்பியுள்ளது. சுற்றாடல், பாதுகாப்பு, சுகாதரம் ஆகிய மூன்று அமைச்சுகளின் சட்டங்களோடு தொடர்புற்றதாக இவ்விவகாரம் அமைந்துள்ளதை நாம் மனங்கொள்ள வேண்டும். தேசத்தைக் கட்டியெழுப்பக் கடமைப்பட்டுள்ள நாம் அந்த தேசத்தின் சட்ட திட்டங்களை மதித்துச் செயற்பட வேண்டும்.

இறைச்சிக் கடைகளை நடத்துகின்ற முஸ்லிம்கள் மிகச் சரியாக வழிகாட்டப்பட வேண்டும். திறந்த நிலையில் அறுக்கப்பட்ட மாடுகளின் அவயங்களை இரத்தம் தோய்ந்த நிலையில் தொங்கவிட்ட வண்ணம் இறைச்சிக் கடைகள் காட்சியளிப்பது பொருத்தமானதல்ல. இலங்கையின் பௌத்தர்கள் உயிர் கொல்லாமை குறித்துப் பேசும் இந்தக் கால கட்டத்தில் இந்துக்கள் பசுவைத் தமது கடவுளாகக் கருதும் நிலையில் இது எவ்விதத்திலும் ஆரோக்கிமானதல்ல. எனவே ஒரு மூடிய அமைப்பில் இறைச்சிக் கடைகளை நடத்தலாம்.

இத்தகைய உள்ளக ஒழுங்குபடுத்தல்கள் ஏராளம் உள்ளன. உதாரணத்திற்கே சிலதைக் குறிப்பிட்டேன். அதேவேளை மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சில எவ்வித ஆதாரமும் அற்றவை, அதற்கு அறிவுபூர்மாகப் பதிலளிக்கும் ஒரு குழு நம்மிடையே செயற்படவும் வேண்டும். கருத்துப் பரிமாற்றத்திற்கான களங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறான இனவாத சிந்தனைகளும் கருத்துக்களும் இலங்கையில் வளர்வதற்கு ஒரு வகையில் நாமும் காரணமாக இருக்கின்றோம். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையில் எம்மை நாம் ஒரு கொள்கைவாத உம்மாவாக அடையாளம் காட்டவில்லை. ஓர் இனவாத சமூகமாகவே இனங்காட்டப்பட்டு வந்துள்ளோம். முஸ்லிம்களுக்கு வரலாறில்லை; அவர்கள் வந்தேறுகுடிகள்; இலங்கையின் தேசிய நலன்களில் அவர்களுக்கு அக்கறையில்லை என்ற இந்தப் பிரசாரத்தை சமூகத்தினதும் எதிர்க் குரலாக நாம் பார்க்க வேண்டியதில்லை அதற்கு சரியான பதிலிறுப்பை (Respons) நாம் வழங்கியுள்ளோமா?

### நாளை நாம் இலங்கை தேசத்தைக் கட்டி யெழுப்ப என்ன செய்யலாம்

இது எமது தாய்நாடு என்ற பற்றோடு இந்த நாட்டின் அனைத்து விதமான முன்னேற்றத்திலும் நாம் கவனம் குவிக்க வேண்டும். இது எமது முதற்கடமை. சமகால சிந்தனையாளர் தாரிக் ரமழான் குறிப்பிடுவது போன்று முஸ்லிமாகவும் ஐரோப்பியனாகவும் இருக்க முடியுமானால் நாம் ஏன் முஸ்லிமாகவும் ஒரு நல்ல இலங்கையராகவும் இருக்க முடியாது. நீங்கள் வரலாறு அற்றவர்கள், சிங்களமும் பௌத்தமும் கொண்டவரே இந்நாட்டின் பிரஜை என்று யாரோ குரலற்ற சிலர் சொல்வதை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. நாம் அன்னியன் என்ற உணர்வு நமக்கு வந்து விட்டால் இந்நாட்டுடன் மிகச்சரியாக உறவாட முடியாமல் போய்விடும். தேசப்பற்றுள்ளவர்களாக முஸ்லிம்கள் வாழ்வதை இஸ்லாம் தடைசெய்ய வில்லை. சிலபோது அது ஒரு அவசியமான கூறாகவும் மாறிவிடுகின்றது.

தமிழர்களும் சிங்களவர்களும் எமது தேசிய சகோதரர்கள். அவர்களுடன் நீதியாகவும் நேர்மையாகவும் பழகுவதும் உறவாடுவதும் கொடுக்கல் வாங்கல்களை வைத்துக் கொள்வதும் அவசியம். அவர்ளுக்கு நாம் உதவவேண்டும். அவர்களது சுக துக்கங்களில் பங்குகொள்ள வேண்டும். இது மார்க்கம் எம்மைப் பணிக்கும் கடமை. 'அன்தபா ரூஹும் வதுக்ஸிதூ இலைஹிம்...' எனும் குர்ஆனிய வசனத் தொடர் வலியுறுத்தும் ஆழ்ந்த கருத்து இது. பெற்றோரைப் பராமரித்தல் பாதுகாத்தல் என்பவற்றுக்கே 'பிர்' எனும் சொற்றொடரைக் குர்ஆன் கையாள்கின்றது. முஸ்லிம் அல்லாத எம்மோடு, போர் புரியாத மக்களோடு உறவாடும் போதும் அவர்களுக்கு உபகாரம் செய்யுமாறு கோரும் அல்குர்ஆன் இதே சொற்றொடரை இங்கு பயன்படுத்தி இருப்பது இலங்கைச் சூழலில் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

ரத்துல் மும்தஹினாவின் 8ஆம் வசனத்தில் இடம்பெறும் 'பிர்' எனும் இச்சொல்லுக்கு இமாம் கறாமி (றஹிமஹுல்லாஹு) அவர்கள் தரும் விளக்கம் எமது நாட்டைப் பொறுத்தவரை கவனத்திற் கொள்ளத்தக்கது. முஸ்லிம் அல்லாதோரிடையே வாழும் ஏழைகளின் தேவையைப் பூர்த்தி செய்தல், பசித்தவர்களுக்கு உணவளித்தல், ஆடையற்றவர்களுக்கு ஆடையளித்தல், அவர்களையும் அவர்களது சொத்துக்களையும் பாதுகாத்தல் என்பதாக இமாம்களது விளக்கவுரை அமைந்துள்ளது. சுன்னாவிலிருந்து தனது விளக்கவுரைக்கான ஆதாரங்களையும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

> *தமிழர்களும் சிங்களவர்களும் எமது தேசிய சகோதரர்கள். அவர்களுடன் நீதியாகவும் நேர்மையாகவும் பழகுவதும் உறவாடுவதும் கொடுக்கல் வாங்கல்களை வைத்துக் கொள்வதும் அவசியம். அவர்ளுக்கு நாம் உதவவேண்டும். அவர்களது சுகதுக்கங்களில் பங்குகொள்ள வேண்டும். இது மார்க்கம் எம்மைப் பணிக்கும் கடமை.*

இலங்கைத் தேசத்தை இன்று குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கும் ஒழுக்கச் சீர்கேடுகளைக் களைவதிலும் ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதிலும் முஸ்லிம்கள் பெரும் பங்காற்ற முடியும். நான் ஒழுக்கப் பண்பாடுகளைப் பூர்த்தி செய்யவே அனுப்பப்பட்டேன் என்ற இறைத் தூதரின் வாக்கையும் வார்த்தையையும் நாம் உண்மைப்படுத்த உழைக்க வேண்டும்.

ஏனெனில், அறமும் தார்மீகமும் பண்பாட்டுப் பெறுமானங்களும் வேகமாக வீழ்ந்து வரும் ஒரு சூழலில் முஸ்லிம் சமூகம் வாழ்வது ஒரு பாவமாகும். அவற்றைத் தடுத்து நிறுத்த ஒரு முஸ்லிம் போராட வேண்டும். நன்மையை ஏவி தீமையைத் தடுப்பது முஸ்லிம் சமூகத்தின் அடிப்படைக் கடமையாகும். நன்மையான காரியத்திற்கு பரஸ்பரம் உதவியாளராக இருப்பதும் பாவமான காரியங்களுக்கு ஒத்துழைக்காமல் இருப்பதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும். இதில் சிறுபான்மை, பெரும்பான்மை எனும் வேறுபாடு கிடையாது. இன்று இலங்கையில் ஆபாசத் திரைப்படங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், விரசத்தைத் தூண்டும் உடைக் கலாசாரம் என தீமைகள் தலைவிரித்தாடுகின்றன. இது முழு இலங்கைச் சமூகமும் எதிர்கொள்ளும் பாரிய சவால் ஆகும். அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களோடு ஒருங்கிணைந்து இத்தகைய சமூகத் தீமைகளைக் களைவதில் முஸ்லிம்கள் பங்காற்ற முடியும். அதன் மூலம் ஒரு பண்பாட்டுத் தலைமையை (MORAL LEADERSHIP) இந்த நாட்டிற்கு வழங்க முடியும். இது ஒரு முக்கிய பணி எனத் துணிந்து கூறலாம்.

இஸ்லாம் மனித இனத்தின் பிரச்சினைக்கான சரியான தீர்வு என நாம் உறுதியாக நம்புகின்றோம். எனினும், அது பற்றியதொரு தவறான அபிப்பிராயமே இந்நாட்டில் நிலவுகின்றது. சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளின் பயங்கரப் பிரசாரத்தின் காரணமாக இஸ்லாம் ஒரு தீவிரவாதம் எனும் கருத்தே இன்று இலங்கையில் பரவி வருகின்றது. இன்று இலங்கையில் 30இற்கு மேற்பட்ட இணையங்கள் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக இயங்கி வருகின்றன. இவ்வாறான சூழலிலும் இஸ்லாமே தீர்வு எனும் கருத்தை நாம் முன்னிறுத்த வேண்டியுள்ளது. இது வெறும் கருத்தாக அல்ல செயல் மாதிரிகள் மூலமே நிறுவப்பட வேண்டியுள்ளது.

போதைப் பொருள் பாவனை இந்த நாட்டைப் பீடித்துள்ள இன்னொரு சாபம். இதனை ஒழிப்பதில் இஸ்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாரிய வெற்றியைக் கண்டது. இதனை ஒழிக்க இஸ்லாம் முன்வைக்கும் தீர்வு யாது? என்பதை இந்த நாட்டிற்கும் அதிகார வர்க்கத்திற்கும் நாம் எடுத்துச் சொல்ல முடியும். இஸ்லாமிய உலகின் புகழ்பெற்ற மனோதத்துவவியலாளரான கலாநிதி மாலிக் பத்ரி அவர்களது இஸ்லாமும் போதைப் பொருள் பாவனையும் எனும் பிரபலமான நூல் இத்துறையில் எமக்கு ஒரு முன்னோடி வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரியா: மேற்கின் ஆடுகளம்

**சிரியப் புரட்சி** ஓரிலட்சம் உயிர்களை பக் காவு கொண்டு விட்டது. மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்பதே தென்படும் கிட்டிய அறிகுறிகள். சிரியப் புரட்சியுடன் தொடர்புபட்ட அண்மிய நகர்வுகளைப் பற்றிய ஒரு விமர்சனப் பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது. எனவே, முதலில் அண்மையில் நடைபெற்ற சில முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாக நோக்குவோம்:

- சிரிய விவகாரம் தொடர்பாக ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்டுவதற்கு அமெரிக்கா மற்றும் ரஷ்யா இணங்கியுள்ளன. 2012ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஜெனீவாப் பிரகடனத்தை செயற்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- துருக்கி ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தோகான் அமெரிக்க அதிபரை சந்தித்து சிரிய விவகாரம் தொடர்பாகவும் சிரியா தொடர்பான எத்தகைய நகர்வுகளிலும் பஷார் அல் அஸதின் வகிபாகம் இருக்கக் கூடாது எனவும் கலந்துரையாடியமை.

- லெபனான் தலைவர் ஹசன் நஸ்ருல்லா மற்றும் ஈரானின் ஆன்மிகத் தலைவர் கொமைனி போன்றோர் தமது நாடு இறுதி வரை அஸதின் ஆட்சியைப் பாதுகாப்பதற்காகப் போராடும் என மீள் உறுதிப்படுத்தியமை.

இஸ்ரேலிய விமானங்கள் சிரியாவின் வான் பரப்பிற்குள் புகுந்து அஸதினுடைய இராணுவத்தின் ஆயுதக் கிடங்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. இதனைத் தொடர்ந்து சந்தர்ப்பம் வரும்போது இஸ்ரேலைத் தாக்குவதற்கு தயாராக இருக்கிறோம் என வழக்கம்போல சிரியாவில் அஸதும் ஈரானில் அஹ்மத் நஜாதும் போலி கோஷங்களை வெளியிட்டனர்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் சிரியா தொடர்பாக ரஷ்யாவினதும் அமெரிக்காவினதும் புதிய இணக்கப்பாடு சர்வதேச அரசியல் விமர்சகர்களை அதிகம் ஈர்த்த அம்சமாகும். ஏனென்றால், அமெரிக்காவிற்கும் ரஷ்யாவுக்குமிடையில் சிரிய விவகாரம் தொடர்பாக தொடர்ச்சியான முறுகல் நிலையே ஆரம்பம் முதல் நிலவி வந்தது. சிரியாவில் எத்தகைய இடைக்கால மாற்றங்களை சாதிப்பதாக இருந்தாலும் அஸதினதும் அவரின் கூட்டணிகளினதும் பங்களிப்பில்லாமல் அதனை அனுமதிக்கப் போவதில்லை என்கிறது ரஷ்யா. ஆனால், அதிகமான மேற்கு நாடுகளும் அரபு நாடுகளும் சிரியாவின் எதிர்க்கட்சிகளும் அதனை அடியோடு மறுக்கின்றன.

2012ஆம் ஆண்டு சிரியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு மாநாடு சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிரிய விவகாரத்தில் ஆர்வம் காட்டும் அனைத்து நாடுகளினதும் வெளிநாட்டமைச்சர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் மாநாட்டின் முடிவுகளாக பல அம்சங்கள் தீர்மானிக்கப்பட்டன. அவற்றில் மிக முக்கியமான அடுத்த கட்ட நகர்வாக, சிரிய மக்களின் விருப்பத்திற்கேற்ப புதியதோர் இடைக்கால அரசை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்துவதற்கான வழிமுறை தொடர்பான தீர்மானம் பின்வருமாறு எழுதப்பட்டது:

"நாட்டின் இடைக்கால அரசை நிறுவி, அனைத்து அலுவல்களையும் பொறுப்புக் கொடுத்தல். நாட்டின் அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் அவர்களே மேற்கொள்வார்கள். இந்த புதிய இடைக்கால அரசில் தற்போதைய அரசின் அங்கத்தவர்களும் சிரியாவின் எதிர்க்கட்சிகளும் பங்கு கொள்ளும்"



ஸகி பவுஸ் (நளீமி)

விரிவுரையாளர் இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை

குறித்த இவ் வாசகத்தைப் புரிந்து கொள்வதில் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் நீண்டதோர் கருத்து மோதல் நிலவி வந்தது. இதனால், இவ்வுடன்படிக்கையின் எந்தத் தீர்மானங்களும் செயற்பாட்டுக்கு வரவில்லை. ரஷ்யாவின் புரிதலின்படி, புதிய அரசில் அங்கம் வகிப்பவர்களாக தற்போதைய அரசின் அங்கத்தவர்களும் என்ற வாசகம் பஷர் அல் அஸதையும் உள்ளடக்கியுள்ளது என்பதாகும். ஆனால், அவ்விளக்கத்தை அமெரிக்காவும் சிரியாவின் எதிர்க்கட்சிகளும் நேரடியாக மறுத்து விட்டன.

பின்னர், சென்றவாரம் தொடக்கம் ஜெனீவா உடன்படிக்கையை செயற்படுத்த வேண்டும் என அமெரிக்கா மீண்டும் கூறிவருகிறது. அது தொடர்பாக பேசுவதற்காக அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் ஜோன் கெரி ரஷ்யாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டார். குறித்த விஜயத்தின்போது, அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ரஷ்யாவின் நிபந்தனைகளுக்கு இணங்கி சிரியப் பிரச்சினையை அணுகுவதற்கு விருப்பம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மூன்று வருட காலமாக சிரிய விவகாரத்தில் கீரியும் பாம்பும் போன்று அறிக்கைகளை விட்ட ரஷ்யாவும், அமெரிக்காவும் ஏன் திடீரென நற்பு பாராட்ட ஆரம்பித்தது என்பது சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் முன்னால் வீசப்பட்ட ஒரு திகைப்பூட்டும் கேள்வியாகும்.

ஜோன் கெரி ரஷ்ய விஜயத்தின்போது 'இனி இல்லை' என்கின்ற அளவுக்கு ரஷ்ய அதிபர் விலாடிமிர் புடினைப் புகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், 2012ஆம் ஆண்டில் விலாடிமிர் புடின் ரஷ்ய அதிபராக தெரிவானபோது, ஒபாமா உட்பட முழு அமெரிக்க செனட் சபையும் ரஷ்யாவின் புதிய அதிபரின் தேர்தல் மோசடிக்கு எதிராக மக்கள் பாதையில் இறங்க வேண்டும், ரஷ்ய வசந்தமொன்றை ஏற்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது. இப்படியிருந்த இவர்கள், இன்று சிரிய விவகாரத்தில் புதிய நண்பர்களாக மாறியிருக்கின்றமை புதியதொரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.

பலஸ்த்தீன இராஜதந்திரி கலாநிதி முனீர் ஷபீக், இது தொடர்பாக ஒரு வித்தியாசமான வியாக்கியானமொன்றை முன்வைக்கிறார். அதாவது, 2012இன் அரைப்பகுதி முதல் அமெரிக்காவின் பலத்தை பலர் பலவிதமாக மதிப்பீடு செய்தனர். அவை அனைத்தும் மிகை மதிப்பீடுகளாகவே இருந்தன என்பதே உண்மை. சர்வதேச அரசியல் களத்தில் முன்னைய காலங்கள் போன்று தனியாகத் தீர்மானம் எடுக்கும் அந்தஸ்தை அமெரிக்கா இழந்து வருகிறது. இன்றைய உலகம் சீனா மற்றும் ரஷ்யாவின் பின்னால் அணிசேர ஆரம்பித்து விட்டது. உலகின் ஆதிக்க பலம் (balance of power) நிலைமாற ஆரம்பித்து விட்டது. இதனைப் படம் பிடித்துக் காட்டும் நிகழ்வே சிரியா விவகாரத்தில் அமெரிக்க - ரஷ்ய உடன்பாடாகும். ஏனென்றால், அமெரிக்கா ரஷ்யாவுக்கு முன்னால் தனது பழைய நிலைப்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனதாலேயே புடினின் அரண்மனைக்கு முன்னால் சென்று நட்பை வெளிப்படுத்தியது, என முனீர் ஷபீக் குறிப்பிடுகிறார். இந்நிகழ்வு சர்வதேச அரசியல் களத்தில் அமெரிக்காவின்

(18ஆம் பக்கம் பார்க்க)

> அண்மிய சிரியாவை மையப்படுத்திய சர்வதேச நகர்வுகளை நோக்கும்போது, சர்வதேச சக்திகள் தமது சுயநல அரசியலை அதனூடாக போஷித்துக் கொள்கின்றமை தெளிவாகிறது. அமெரிக்க- ரஷ்ய கூட்டு அதனை நிறுவுகிறது. இஸ்ரேலின் மௌனம் அதற்கு இன்னும் பலம் சேர்க்கிறது. துருக்கியும் கட்டாரும் மட்டுமே சிரியப் புரட்சிப் படையினருக்கு பலமாக இருக்கிறது. ஏனைய நாடுகள் வெறும் வாய்ப்பேச்சில் ஆதரவு அளிக்கின்றன. எனவே, சர்வாதிகாரி அஸத் புதிய அமெரிக்க- ரஷ்யக் கூட்டினால் பலமடையப் போகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தேசம்



## காலம் கடந்த கைசேதம்

காலம் அன்று நமக்கொரு கதை சொன்னது "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்று. அர்த்தமுள்ள இப்பழமொழியை சான்றோர் புரிய வைத்ததை சிந்திக்காததால் உள்ளமே கலங்குகிறது. காலம் பொன்னானது என மற்றுமொருவர் கூறினார். ஆனால், காலம் பொன்னிலும் மேலானது என்று நாம் கூறினால் அது மிகையல்ல. பொன்னைப் பணம் கொடுத்து வாங்கலாம். ஆனால், காலத்தை எதைக் கொடுத்தும் வாங்க முடியாததுதான் வேதனை. நாம் நடந்து வந்த பாதையில் கடந்துபோன காலம் தொலைவில் இருந்து நம்மைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது. தொடர்ந்து செல்லும் பாதையில் நாம் நடந்து செல்லாமல் அமர்ந்து கொண்டது காலம் செய்த குற்றமா? ஒவ்வொரு மனிதனதும் இளமைக் காலம், ஓடிச் செல்லும் தெளிந்த நீரோடையாக இருக்கிறது. இதில் நீந்திச் செல்லாது மனிதன் சாக்கடையில் போய் தேங்கிக் கிடப்பது காலம் செய்யும் குற்றமா? துள்ளிக் குதித்தே காலத்தைத் தள்ளிக் கழித்த இளைஞர்கள் இன்று ஆமை போல உலாவித் திரிவது வேதனைக்குரிய விடயம்.

படிக்கின்ற காலத்தில் படிக்க மறந்தால் உழைக்க வேண்டிய காலத்தில் வாய்ப்பை இழக்க வேண்டி ஏற்படும். இது விதியின் சதியென்று கூறி விதியை நொந்து கொள்ளும் மனிதர்கள் தோற்றுப்போனது காலம் செய்த குற்றமல்ல. விதியை வரைந்தவனே மதியைக் கொடுக்கிறான். காலம் மனிதர்களுக்குக் கைக்கொடுக்கும் பாலம். அதைப் பற்றிப் பிடிக்காதது மனிதன் செய்த பாவம்.

மனிதர்களுக்கு அல்லாஹ் எதைத்தான் கொடுக்காமல் விட்டு விட்டான்? உலகம் முழுவதும் அவனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப் பட்டிருந்தும்; நிறைவு இல்லாத மனம் மனிதனுக்கு. நம்மை விட்டுக் கடந்து போன காலம் எம்மைத் திரும்ப வந்தடைவதில்லை. காலத்தைக் குறை சொல்லும் மனிதர்கள் தமக்கு எல்லாம் முயற்சிகளின்றி சாதகமாக அமைந்து விடவேண்டும் என்று நினைத்து விடுகிறார்கள். அது காலத்தின் குற்றமல்ல; மனிதனின் பலவீனம். மனிதர்கள் தமது பலவீனத்தை அல்லது குற்றத்தை மறைப்பதற்காக காலத்தின் மீது பழிசுமத்துவதைத்தான் மனித வாழ்வில் பார்க்கிறோம்.

வாழ்வைச் சுமக்க வேண்டிய மனிதன் இன்று சுமையாக இருக்கிறான். வாழ்ந்து வாழ்வளிக்க வேண்டிய மனிதன் தானும் வாழாது சூழவுள்ளவர்களையும் வாழ விடாது ஆட்டிப் படைக்கிறான். இதுதான் காலம் கடந்த கை சேதம். காலத்தை மனிதன் கைவிட்டதால் மனிதனைக் கடந்து காலம் போய் விட்டது. காலத்தை வீணடிக்காது திட்டமிட்டு செயற்படுவோம்! காலத்தை நம் கைக்குள் கொண்டு வருவோம்!


எம்.ஆர். ரின்ஸா
தரம் - 12, ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரி - காத்தான்குடி

இவ்வார சிந்தனைக்கு

**நன்றாக வாழ வேண்டுமானால் முன் கூட்டியே திட்டமிடுங்கள்**

(நெப்போலியன்)

## வாழ்க்கையில் முன்னேற மனதை மாற்றுங்கள்...




இந்த உலகில் வெற்றியை நோக்கி முன்னேறுவதற்கு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதத்தில் சோதனைகள் ஏற்படும். அப்படி சோதனையை எதிர்கொள்வதில் முக்கியமான ஒன்றுதான் மனம். மனம் எப்போதுமே எதிர்மறையாகத்தான் (Negative) சிந்திக்கும். அவ்வாறு சிந்திப்பதால், யாராலும் வாழ்வில் நிச்சயம் முன்னேற முடியாது.

மனம் எப்போதும் நேர் சிந்தனையாக (Positive) சிந்தித்தால், எந்த ஒரு செயலையும் துணிந்து செய்யலாம். உதாரணமாக, நமது மனம் நெகட்டிவ்வாக நினைக்கும்போது, ஏதாவது ஒரு தோல்வி நடந்தாலும் அதை அவ்வளவு சீக்கிரம் மறக்காமல் வைத்திருக்கும். இதனால் எந்த செயலைச் செய்யும்போதும் எங்கு தோல்வி கிடைக்குமோ என்று பயந்து இலகுவானவற்றைக்கூட இழக்க நேரிடுகிறது. ஆகவே, வாழ்வில் வெற்றியை நோக்கி முன்னேற என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

வாழ்வில் முன்னேறும்போது நிறையப்பேர் என்னென்னவோ சொல்வார்கள். இதில் அதிகம் நம்மைப் பற்றிச் சொல்பவர்கள் யார் என்று பார்த்தால் குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது ஆசிரியர்கள்தான். இவர்கள் சொல்வது நமது நலத்திற்காகவே இருக்கட்டும். ஏன் நாம் எதை விருப்பப்பட்டுச் செய்தாலும் மூக்கை அறுப்பதுபோல் நிறைய தடைகளைச் சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில் மனதைத் தளர விடாமல், தன் எண்ணத்தில் மட்டும் முழுக் கவனத்தைக் கொண்டு வாழ்வை மேற்கொண்டால், வெற்றியை நிச்சயம் அடையலாம்.

எப்போதும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதைச் செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால் வெற்றியை அடைய முடியாது. ஆகவே, உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஏதேனும் ஒரு புதிய விடயங்களைச் செய்யும்போது, மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதைக்கூட, நீங்கள் முழுக் கவனத்தோடு செய்து முடிப்பீர்கள்.

எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள். இதுவரை சிறு பிள்ளையாக இருக்கும்போது உங்கள் விடயத்தை உங்களது பெற்றோர்களே முடிவெடுப்பார்கள். இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இதுதான் சுயமான உங்கள் முடிவுகளை நீங்களே எடுக்க வேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால் நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவுகள் எடுக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேறும்போது தோல்விகளைச் சந்தித்துதான் ஆக வேண்டும். அதற்காக அந்தத் தோல்விகளையே மனதில் வைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. தோல்விதான் வெற்றியின் முதல் படி. தோல்விகளைச் சந்திக்க சந்திக்க நமது மனம் தெம்பாக, அனைத்தையும் எதிர்த்து நின்று, தைரியமாக செல்ல முடியும். இதனால் வெற்றியையும் எளிதில் அடைய முடியும். இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனக் குறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர். ஏனெனில், அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை. ஆனால், தோல்வியடைந்து விட்டால் மட்டும் அதை நினைத்து மனதைத் தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்கி விடுவார்கள். ஆகவே, அவ்வாறு இல்லாமல் மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும்.

## துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

2013ஆம் ஆண்டுக்கான இன்டெல் சர்வதேச விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சி அண்மையில் அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் நடைபெற்றது. இதில் மின்சார மற்றும் இயந்திர சாதன உற்பத்தியில் புதிய உற்பத்திக்கான பரிசினை அநுராதபுரம் மிஹிந்தலை மகா வித்தியாலயத்தின் மாணவன் புபுது கபுகே சுவீகரித்துள்ளார். வயல் வரப்புகளை அமைப்பதற்கான இயந்திரத்தை தயாரித்தமைக்காகவே இவருக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது. பரிசு வழங்கும் நிகழ்வில் இந்த இய்ந்திரத்தைத் தயாரித்தமைக்காக அவருக்கு மூவாயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன. இம்முறை நடைபெற்ற இன்டெல் சர்வதேச விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியில் 60 நாடுகளைச் சேர்ந்த 1600 பேர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சூரிய ஒளியிலுள்ள விட்டமின் மூலம் ஆஸ்துமா நோயாளர்களைக் குணப்படுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. விட்டமின் D குறைபாட்டினாலும் ஆஸ்துமா நோய் மோசமடைவதாக லண்டன் கிங்ஸ் கல்லூரியின் மருத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆஸ்துமாவிற்கான நிர்பீடனக் கட்டமைப்பில் விட்டமின் D குறிப்பிடத்தக்க செயற்றிறன் மிக்க பங்களிப்பை வழங்குவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், விட்டமின் Dயைப் பயன்படுத்தி நோயாளர்களுக்கு இதுவரை சிகிச்சையளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் மருத்துவ ஆய்வாளர்கள் தொடர்ந்தும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உற்பத்தித்திறன் கூடிய புதிய வகை கோதுமை ஒன்றை பிரித்தானிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த கோதுமை மூலம் உற்பத்திறனை 30 வீதத்தால் அதிகரிக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கேம்பிரிஜ்ஜைத் தளமாகக் கொண்ட தேசிய விவசாய தாவரவியல் நிறுவனம் இந்த கோதுமை இனத்தை உருவாக்கியுள்ளது. புராதான கோதுமை இனமொன்றுடன் நவீன இன கோதுமையை இணைத்து இந்த புதிய இனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பரீட்சார்த்தத்திற்கு குறைந்தது 5 வருடங்கள் எடுக்கும் என்பதுடன், செய்கைக்கு முன்னதாக அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் உலக வர்த்தக மையத்தின், பிரம்மாண்ட கோபுரத்தை நிறுவும் பணி முடிவடைய உள்ளது. 2001 செம்டெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் விமானங்களை மோதி தகர்க்கப்பட்டது. அந்த இடத்தில் நியூயோர்க் துறைமுக கழகமும் முன்னணி கட்டுமான நிறுவனமும் இணைந்து மீண்டும் உலக வர்த்தக மையத்தைக் கட்டத் தொடங்கின. 10 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் பணியில் 1776 அடி உயரத்துக்கு கட்டிடம் அமைய உள்ளது. அதில் 408 அடி உயர இரும்பு கோபுரமும் இடம்பெறுகிறது.

அமெரிக்க சிறுகதை எழுத்தாளர் லிடியா டேவிஸ் தனது achievement in fiction on the world stage எனும் கதைக்கு இவ்வாண்டுக்கான மேன் புக்கர் சர்வதேச பரிசை வென்றார். இவருக்கு 60,000 பவுன் பரிசாக வழங்கப்பட்டது. டேவிஸ், தற்போது நியூயோர்க் அல்பானி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார்.

**அறிவைத் தேடிக்கற்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமை**

(அல் ஹதீஸ்)

தனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன் தான் சமூகத்தில் முன்னேற முடியும்

-ஆபிரஹாம் லிங்கன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

**உள்ளத்துக்கு முதுமை கிடையாது. அவர்களின் வயதினைக் குறிப்பிட்டு அல்லது அவர்களது நோய்களை ஞாபகப்படுத்தி அவர்களை உள ரீதியாக விழச் செய்யாதீர்கள்.**

# தலைமுறை இடைவெளியும் நாமும்

இளையவர்களாக இருந்தால் நாளை நாமும் முதியவர்களாவோம் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். மூத்தவர்களாக இருந்தால் இளையவர்களை அன்பு காட்டி அரவணைக்க வேண்டும் என்ற உணர்வை உள்ளங்களில் விதைத்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் தங்களுக்குச் செவிமடுப்பவர்களை விரும்புகிறார்கள். மூத்தவர்கள் பேசும்போது சில விடயங்களைத் திருப்பத் திருப்பச் சொல்வார்கள். உங்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு உங்கள் செவிகளைக் கொடுங்கள்.

மூத்தவர்களிடம் பேசும்போது அவர்களுடைய கால வாழ்க்கை முறை, வாழ்வியல் அனுபவங்கள், துன்பியல் நிகழ்வுகள் மற்றும் சாதனைகள் பற்றிக் கேளுங்கள். உங்களுக்கு மிக சுவாரசியமான கதைகளுக்கான கருக்கள் கிடைக்கலாம்.

நீங்கள் எந்த வயதினராக இருந்தாலும் சரி, உங்களைவிட மூத்தவர்கள் முன் கால்மேல் கால் போட்டு அமராதீர்கள். உங்கள் உள்ளத்திலும் உடலசைவுகளிலும் பணிவை வெளிப்படுத்துங்கள் அது போலியாக இல்லாமல் உள்ளார்ந்ததாக இருக்கட்டும்.

அவர்களுக்கு சின்னச் சின்ன சந்தோஷங்களை வழங்குங்கள். அதாவது, அவர்களது பழைய நண்பர்கள் நண்பிகளைச் சந்திக்க அழைத்துச் செல்வது, மிகவும் பிடிக்கும் ஒரு புத்தகத்தைப் பரிசளிப்பது, அவர்களுக்கான விசேட சாப்பாட்டைத் தயார் பண்ணுவது போன்றவற்றைச் செய்யலாம்.

ஒரேயடியாக, உங்களுக்கு எதுவும் தெரியாது என்று மூத்தவர்களை ஒதுக்கிவிட வேண்டாம். அவர்களுடைய அனுபவங்கள் எமது வாழ்க்கைக்கு வலிமை சேர்க்கும்.

நவீன உலகின் சாதனங்களான கணினி, கைபேசி, அவன் பற்றி அவர்களுக்குத் தெரியாதிருக்கலாம் கேலி செய்யாதீர்கள்; கற்றுக் கொடுங்கள்.

உள்ளத்துக்கு முதுமை கிடையாது. அவர்களின் வயதினைக் குறிப்பிட்டு அல்லது அவர்களது நோய்களை ஞாபகப்படுத்தி அவர்களை உள ரீதியாக விழச் செய்யாதீர்கள். உள்ளம் சோரும்போது பலவீனம் சேர்ந்து கொள்ளும். சாதித்தவர்களை அல்லது வாழ்க்கையின் பின் பகுதிகளில் வெற்றி பெற்றவர்களின் வரலாறுகளைக் கூறித் தெம்பூட்டுங்கள்.

வீட்டில் அல்லது பணியிடத்தில் முக்கியமான முடிவுகளை எடுக்க நேரிடும்போது மூத்தவர்களின் ஆலோசனை கேட்பதும் விசேட நிகழ்வுகளில் அவர்களுக்கும் பொறுப்புக்கள் வழங்குவதும் அவர்களின் உற்சாகத்தைப் பல மடங்காக அதிகரிக்கும்.

நீங்கள் எமக்கு முக்கியமானவர் என்ற தகவலை அவர்களுக்கு முடியுமான எல்லா இடங்களிலும் உணர்த்துங்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள். நீங்கள் வங்கியில் அல்லது மருத்துவரிடம் வரிசையில் நிற்கும்போது அவர்களை முதன்மைப்படுத்துங்கள்.

மூத்தவர்களை உங்களில் முழுமையாகத் தங்கி வாழ்பவர்களாக ஆக்கிவிடாதீர்கள். ஒவ்வொருவருக்கும் தனித் தன்மையும் தன்மானமும் உண்டு. அவர்களுக்கு இயலுமானவரையில் உழைக்கவும் ஓய்வு பெற்ற பின்பும் சமூக வேலைகள் மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது நிறைவுதரும் விடயமாகும்.

அவர்களோடு வீணாக விவாதிக்க வேண்டாம். சில சமயங்களில் உங்கள் பக்க நியாயத்தை விட்டுக் கொடுக்கவும் தயங்க வேண்டாம். அவர்கள் வேறொரு காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள், அதனைப் புரிந்து கொள்ளுங்கள்.

மூத்தவர்களின் ஆற்றல்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர்கள் விரும்பிச் செய்யக்கூடிய பொழுது போக்குகளில் அவர்களை ஈடுபடுத்துவதோடு, அதற்குத் தேவையான உபகரணங்களையும் வாங்கிக் கொடுங்கள்.

தங்களுக்கு விரும்பிய சின்னச் சின்னப் பொருட்களை வாங்குவதற்கும் பேரப் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்தவும் தோதானவாறு அவர்கள் கையில் காசு புழங்க வழிவகை ஏற்படுத்திக் கொடுங்கள். நீங்கள்தான் எல்லா செலவுகளையும் செய்கிறீர்கள் ஆனால், அவர்கள் சுயமாக செலவழிக்க விரும்புவதைப் புரிந்து கொள்ளுங்கள்.

# பெண்ணுக்குண்டான விஷேட ஆற்றல்கள்

ஸாதிகா ஶர்யம்

சரி, இது எவ்வளவு தூரம் உண்மை என்று விஞ்ஞானப் பூர்வமாகவும் அனுபவ ரீதியாகவும் அறிந்ததை அலசுவோமா?

அறிவை வளர்க்கும் கல்வித் தலங்களில் பெரும்பகுதியினர் பெண்கள்தான்.

ஆண் குழந்தையைவிட பெண் குழந்தைகள்தான் எல்லாவற்றிலும், அதாவது சிரிப்பது, தவள்வது, நடப்பது, பேசுவது என எல்லாவற்றிலும் முந்திச் செல்கின்றனர் என்பது விஞ்ஞான உண்மை.

ஒரே கேள்வியைப் பல வித கோணத்தில் அலுக்காமல் கேட்டு உண்மையை அறியும் வல்லமை இவர்களுக்கு அதிகமுண்டு.

மோப்ப உணர்வில் இவர்களை அடித்துக் கொள்ள வாய்ப்பில்லை. உணவகத்திற்கு சென்றால் உணவுப் பொருளை மோப்பம் செய்தே இன்னென்ன மூலப் பொருட்கள் சேர்த்துச் செய்த உணவுப் பண்டம் இது என கண்டுபிடித்து சொல்வதில் முதன்மையானவர்கள்.

பார்வைத் திறனைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? ஒரு கூட்டமான இடத்துக்கு சென்றால் தெரிந்தவர் தலை இவர்களது கண்களுக்கு சட்டென சிக்கிவிடும். கூடவே வரும் துணைவரிடம் சொன்னால்கூட எங்கே... எங்கே... என்று தேடுவாரே ஒழிய துணைவரால் அந்த தெரிந்த தலையை இலகுவில் கண்டுபிடிக்கவே முடியாது போகும்.

செவிலியர்கள், மருத்துவர்கள், விமானப் பணிப் பெண்கள்... இப்படி அநேகர் சிரித்த முகத்துடன் வலம் வருவதில் பெண்களே அதிகம்.

வீட்டில் அலுமாரிகளில் மலைபோன்று குவித்து பொருட்கள் இருந்தாலும் கண் பார்த்ததும் கையால் எடுக்கும் திறமை இவர்களைத் தவிர வேறு யாருக்குண்டு?

அதிக தோழமை உணர்வு இவர்களுக்கு மட்டுமே உரித்தானது. சட்டெனப் பழகிவிடுவதில் கை வந்த கலை இவர்களுக்கு.

பஞ்சப் பாட்டு பாடிக் கொண்டிருந்தாலும் நுணுக்கமாக சேமிப்பு செய்வதில் கில்லாடிகள்.

ஒரு சிறு பொருளைப் பார்த்தாலும் அது என்னவென்று அடையாளம் கண்டுபிடிப்பதில் இருந்து மூளையில் அதுபற்றி ஏற்றிக் கொள்வது, பிறிதொரு சமயத்தில் அது எங்கே, எப்படி, எவ்வளவுக்குக் கிடைக்கும்? என்று ஞாபகம் வைத்துக் கொள்ளும் ஞானச் செல்விகள் இவர்கள் என்பதும் உண்மை.

ஒருவர் தெரிந்த மொழியில் பேசிப் புரியாவிட்டாலும் புரிந்தமாதிரி காட்டிக் கொள்வது முதல், புரியாதவர்களுக்குப் புரியும் வரை சலிப்பில்லாமல் திரும்பத் திரும்ப சொல்லிப் புரிய வைப்பதில் புண்ணியர்களும் இவர்களே.

பதின்ம வயதில் எப்படி இருந்தோமோ அப்படியே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதிலும் அதனை செயல்முறைப்படுத்துவதிலும் பிரயத்தனப்படுவதில் இவர்கள்தான் முன்னணியில் நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(முஸ்லிம் அரசியலை ஓட்டும்)...** 5ஆம் பக்கத் தொடர்

அதேவேளை, உள்வீட்டுக்குள்ளேயே சவால் விட்டுக் கொண்டிருக்கும், பஷீருக்கு போட்டியாய் அமீர் அலியை உருவாக்கி விட்டால் பஷீரிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் வேலையும் மிச்சமாகிவிடும்.

அதேவேளை, ஒரே ஊருக்குள் இருந்து கொண்டு வாக்கு வங்கி உட்பட சவாலாக இருக்கும் பஷீர் சேகுதாவூதுக்கு எதிராக அமீர் அலியைக் கொண்டு வருவது ஹாபிஸ் நஸீரைப் பொறுத்தவரை அடுத்த எம்.பி. கனவுக்கான ஆரம்பக்கட்டமாகும்.

இன்னொரு புறம் தனது ஆதரவாளர்களுடன் நடந்து கொள்ளும் நடைமுறையால் நன்மதிப்பை இளந்துள்ள அமீர் அலிக்கு மு.கா.வில் இணைந்து மு.கா. ஆதரவாளர்களின் வாக்கு வங்கியைக் கொள்ளையடிப்பது காலத்தின் தேவையாக உள்ளதாம்.

அப்படியானால் பஷீர் சேகுதாவூதின் கதி என்ன என்று நீங்கள் கேட்கலாம்.

சொந்தமாய் கப்பலே ஓட்டும் பஷீருக்கு அவரது அரசியல் வண்டியை ஓட்ட இருக்கவே இருக்கிறது காசு-மரம்!

---

**(இஸ்லாத்தின் பார்வையில்)...**
20ஆம் பக்கத் தொடர்

இது தொடர்பான மேலே கூறிய கேள்விகளுக்கு விடைகாண முடியாமல் புகழ் பெற்ற பல மெய்யியலாளர்களதும் உளவியலாளர்களதும் வாழ்க்கை பல தடவை தற்கொலை முயற்சி வரை சென்று திரும்பியுள்ளதை அவர்களது சுயசரிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இஸ்லாம் ஒன்றே இதற்கான தெளிவான பதிலை முன்வைக்கின்றது; இதனை ஈமானியப் பண்புடன் தொடர்புபடுத்துகின்றது.

**2. மனவெழுச்சியை முகாமை செய்தல் (Managing emotions)**

பொருத்தமாக உணர்ச்சிகளை கையாளும் திறன், தன்னை அறிவதன் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது. இத்திறமை குன்றியவர்கள் தொடர்ச்சியாக மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும். மாறாக இவ்வாறான உணர்ச்சிகளைக் கையாளத் தெரிந்தவர்கள் இத்தகைய குழப்பங்களிலிருந்து இலகுவாக மீண்டு வருகின்றனர்.

இஸ்லாம் இது தொடர்பாக மிக அழகான வழிகாட்டலை முன்வைக்கிறது. உலக விடயங்களுக்காகத் தங்களைவிடக் கீழ்நிலையில் உள்ளவர்களையும் மார்க்க விடயங்களுக்காக தங்களைவிட மேல் நிலையில் உள்ளவர்களையும் நோக்குவது என்பது எங்களின் மன வெழுச்சியை முகாமை செய்வதற்கான உத்தியாகக் கொள்ளலாம். மேலும், இஸ்லாம் வெற்று மகிழ்ச்சிகளை விட உள்ளார்ந்த மகிழ்ச்சிக்கும் ஆத்ம திருப்திக்கும் முன்னுரிமையளிக்கின்றது. இதனை விளங்கிக் கொள்ளாத எங்களில் பலர் வாழ்வதற்காக உழைக்கின்றார்கள். ஆனால், ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதில் தோல்வியடைந்து விடுகின்றனர்.

மேலும் இஸ்லாம் எம்மில் மேலெழும் மனவெழுச்சிகளைப் பற்றி அழகாக வரையறை செய்கிறது.

"அவர்கள் (எத்தகையவாகள் என்றால்) செல்வ நிலையிலும், வறுமை நிலையிலும் தானம் செய்து கொண்டே இருப்பார்கள். கோபத்தை விழுங்கி விடுவார்கள். மனிதர்களின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் இத்தகைய அழகிய குணமுடையவர்களை நேசிக்கின்றான்."

(அல்குர்ஆன்3: 134)

அல்லாஹ் கூறுகின்ற இத்தகைய அழகிய குணங்களை மனவெழுச்சியை முகாமை செய்வதன் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்.

---

*(தொண்டமான்)...* 09ஆம் பக்கத் தொடர்

நீங்கள் எல்லாம் ஜீவனற்ற அரசியலையும் தொழிற் சங்கங்களையும் நடத்தி வருவதால்தான் இப்படி நிகழ்ந்து வருகிறது. ஜீவன் என்றால் என்ன? அதுதான் வரலாறு. ஒரு நாட்டுக்கும் சமூகத்துக்கும் வரலாறு மிகவும் முக்கியம். இது உலகம் தழுவிய உண்மை. இந்த ஜீவனை மலையகத் தலைமைகள்- சௌமிய மூர்த்தியார் உட்பட தமது மக்களுக்கு அளிக்கத் தவறி விட்டார்கள்.

மலையக இளம் சமூகத்தினரை ஜீவனுடன் வைத்திருக்க மலையக சமூகத்தின் வரலாறு அவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அது பாடமாகக் கற்பிக்கப்பட முடியாததாகையால், தொண்டமானின் வரலாறும் காங்கிரஸ் வரலாறும் மலையக வரலாறு தொடர்பான ஏற்கனவே வெளிவந்திருக்கும் கட்டுரைத் திரட்டுகளும் இச்சமூகத்தைச் சென்றடைவதற்கு வழி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை, முத்து சிவலிங்கம் அவர்களே, உணர்ந்திருக்கிறீர்களா?

உங்கள் தலைவர் நூற்றாண்டு விழாவை பூசை புனங்காரங்களுடன் ஆடம்பரமாக நடத்துவார். அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் ஆடம்பர விழா, பின்னர் அன்னதானம் என நடக்கும். இவற்றால் இச்சமூகம் பெறப்போகும் பலன் என்ன? பெயர் சொல்கிற மாதிரி, நீண்டு நிலைக்கின்ற மாதிரி, மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயன்படுகின்ற மாதிரி நூற்றாண்டு விழா அர்த்தமுள்ளவாறு நடத்தும் திட்டம் ஏதேனும் காங்கிரஸ் தலைமையிடம் உள்ளதா? இந்த விழாவை, தலைமையைச் சுற்றியிருக்கும் தோட்ட மக்களுடன் சம்பந்தப்படாத தமிழ் முதலாளி வர்க்கமும் காக்கைக் கூட்டங்களும் பயன்படுத்திக் கொள்கிற மாதிரி நடத்தாமலிருக்க நீங்கள் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும், அமைச்சர் அவர்களே!

உங்களிடம் இதைச் சொல்லாமல் வேறு யாரிடம்தான் சொல்வதாம்?

முன்னர் தொண்டமானின் பிறந்த தினத்தையொட்டி கொட்டகலையில் வருடா வருடம் மருத்துவ முகாம் நடக்கும். இதை மறந்து பல வருடங்களாகி விட்டன. யாகம், பூஜை, வழிபாடுகள்தான் தவறாமல் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றால் இலவச சாப்பாட்டைத் தவிர தொழிலாளர் சமூகத்துக்கு வேறெந்த நன்மையும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

இந்நூற்றாண்டுக் காலத்தில் மருத்துவ பிரிவில் அதிக கவனம் எடுக்கப்பட வேண்டியது அவசியம். சுகாதாரம், பழக்க வழக்கங்கள், சமூக மருத்துவ விழிப்புணர்ச்சி முகாம்களை நடத்த வேண்டிய தேவை உள்ளது.

தொடர்ச்சியாக நடத்தப்படும் வகையில் தொண்டமான் பெயரால் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இதற்கென ஒரு நிதியம் அமைக்கலாம். இந்த புலமைப் பரிசில் நிதியத்துக்காகத் தொழிலாளர்களிடமிருந்துகூட ஒரு நூறு ரூபாவை நீங்கள் நன்கொடையாகப் பெறலாம். கோவில் திருவிழாக்களுக்குக் கொட்டிக் கொடுப்பவர்கள் ஒரே ஒரு தடவை தொண்டமான் கல்வி நிதியத்துக்காகத் தரமாட்டார்களா?

கல்வி தொடர்பாக இன்னும் பல வேலைகளைச் செய்யலாம். சிதறிக் கிடக்கும் பல மலையக சுய நிதி தொண்டர் கழகங்களை ஒன்றிணைக்க இது ஒரு வாய்ப்பாக அமையலாம்.

இன்னொரு இதழிலும் இது பற்றி பேசலாமே!

---

**(சிரியா)...** 15ஆம் பக்கத் தொடர்

ஏகபோக உரிமை பறிபோயுள்ள நிலையினை நேரடியாகப் புலப்படுத்துவதாக முனீர் ஷபீக் மேலும் குறிப்பிடுகிறார்.

வேறு சில அரசியல் விற்பன்னர்களின் கருத்துப்படி, அமெரிக்க-ரஷ்ய ஒற்றுமையினூடாக அமெரிக்கா தனது சொந்த நலன்களுக்காக சிரியாவையும் சிரிய மக்களின் அபிலாஷைகளையும் விற்று விட்டது என்பதாகும். ஷோசலிஸ சிந்தனையாளரான ஸலாமத் கையாளி தனது கட்டுரையில், அமெரிக்கா சீனாவைத் தோற்கடிப்பதற்காகவே சிரியாவை ரஷ்ய சந்தையில் விற்று விட்டது என்கிறார். அமெரிக்கா பாரிய உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, தனது பொருளாதாரத்திற்கு சவாலாக வரும் சீனாவின் பொருளாதார, இராஜதந்திர வளர்ச்சியைத் தடுப்பதிலேயே அமெரிக்கா முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறது. இதனைத் தடுக்காவிட்டால் அமெரிக்காவின் உலகளாவிய இராஜதந்திர வலைப்பின்னல் வீழச்சியடைவது உறுதியாகிவிடும். சிரிய விவகாரத்தில் வொஷிங்டனின் சாதகமான அல்லது பாதகமான பிரயத்தனங்கள் அனைத்தும் வெறும் சுயநல நாடகம் மாத்திரமே. அமெரிக்காவின் முழு மூச்சும் சீனாவை வீழ்த்துவதே. ரஷ்யாவின் நலன்களுக்காக சிரியாவை தாரை வார்த்து விட்டால் ரஷ்ய-அமெரிக்க உறவு பலமடையும். இதனால், ரஷ்யா சீனாவுடன் வைத்திருக்கும் ஆத்மிக நற்பை சற்றேனும் குறைத்து விடலாம் என அமெரிக்கா நினைக்கிறது. மேலும், அமெரிக்க அதிபரை ரஷ்ய அதிபர் விலாடிமிர் புடின் அடுத்த மாதம் சந்திக்கவிருக்கிறார். எனவே, இச்சந்திப்பில் அமெரிக்கா தனது விட்டுக் கொடுப்புக்கான கொடுக்கல்-வாங்கல் கணக்குகளை ரஷ்யாவுடன் சரிபார்த்துக் கொள்ளும் என நாசுக்காக அமெரிக்காவின் துரோகத்தை ஸலாமத் கையாளி தொட்டுக்காட்டுகிறார்.

இன்னொரு புறத்தில், இஸ்ரேல் இத்தகைய சர்வதேசத்தின் நகர்வுகளை மௌனமாகவும் மகிழ்சியோடும் அவாதானித்துக் கொண்டிருக்கிறது என அரசியல் விமர்சகர் யாசிர் ஸஆதிரா குறிப்பிடுகிறார். சிரியா விவகாரத்தில் இஸ்ரேல் மௌனமாக இருப்பதுபோல் தென்பட்டாலும் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா என்ற மும்முனையினூடாகவும் தனது இலக்குகளை நோக்கி இஸ்ரேல் நகர்ந்து கொண்டிருக்கிறது என மேலும் குறிப்பிடுகிறார் ஸஆதிரா. இஸ்ரேலின் கனவு சிரியா இடிந்து விழ வேண்டும்; ஆனால், அஸத் ஆட்சியில் தொடர்ந்தும் இருக்க வேண்டும்; சீனாவும் ரஷ்யாவும் அஸதுக்கு வலுவூட்ட வேண்டும்; இன்னும் சில நாடுகள் எதிரணிக்கு ஆதரவளிக்க வேண்டும்; இவ்வாறு தொடர்ந்தும் சமபலத்தில் போர் தொடர்வதை சர்வதேசம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதாகும். ஏனென்றால், அப்போதுதான் இஸ்ரேலின் உள்ளக பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். மாத்திரமன்றி, அஸத் ஆட்சியில் இருந்தாலும் தொடர்ந்தும் பலவீனமாகத்தான் இருக்க முடியும். இஸ்ரேலைப் பலவீனமான அஸதால் ஒருபோதும் அச்சுறுத்த முடியாது.

மேலும் விமர்சகர் ஸஆதிரா பின்வரும் அம்சங்களையும் குறிப்பிடுகிறார், சிரியாவின் அசாதாரண நிலை தொடர்வது ஈரானை இன்னும் சிரியாவுடன் இறுகப் பிணைக்கச் செய்யும். இதனால், அரபுலகத்தின் ஈரான் மீதான வெறுப்பும் கொழுந்து விட்டெரிந்து கொண்டேயிருக்கும். இதுவும் தனக்கு சாதகமானது என டெல்அவீவ் கருதுகிறது. மொத்தத்தில் அமெரிக்கா- ரஷ்ய கூட்டு சிரியா தொடர்பாக எந்தத் தீர்மானத்தை எடுத்தாலும், அது சிரியாவின் பிரச்சினையை வளர்ப்பதாகவும், அஸதுக்கு சார்பாகவும்தான் இருக்கும் என்பதை இஸ்ரேல் தெளிவாக விளங்கி வைத்துள்ளது.

அண்மிய சிரியாவை மையப்படுத்திய சர்வதேச நகர்வுகளை நோக்கும்போது, சர்வதேச சக்திகள் தமது சுயநல அரசியலை அதனூடாக போஷித்துக் கொள்கின்றமை தெளிவாகிறது. அமெரிக்க- ரஷ்ய கூட்டு அதனை நிறுவுகிறது. இஸ்ரேலின் மௌனம் அதற்கு இன்னும் பலம் சேர்க்கிறது. துருக்கியும் கட்டாரும் மட்டுமே சிரியப் புரட்சிப் படையினருக்கு பலமாக இருக்கிறது. ஏனைய நாடுகள் வெறும் வாய்ப்பேச்சில் ஆதரவு அளிக்கின்றன. எனவே, சர்வாதிகாரி அஸத் புதிய அமெரிக்க- ரஷ்யக் கூட்டினால் பலமடையப் போகிறார்.

---

**தொடுதிரைக்** *(11ஆம் பக்கத் தொடர்...)*

குறிப்பாக, தொடுதிரை கணினிகளில் இருக்கும் விளையாட்டு அல்லது காணொளியானது குழந்தை அதைத் தொடத்தொட வெவ்வேறு புதிய தகவல்கள், படங்கள், ஒலிகள் அல்லது காணொளிகள் வரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தால், அது, அந்தக் குழந்தைகளின் கற்றலை ஊக்குவித்து, குழந்தைக்கு உதவுகிறது என்று இந்த ஆய்வாளார்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த தொடுதிரைகளுடன் அதிகம் புழங்கும் குழந்தைகள் வேகமாக அதில் சொல்லப்படும் செய்திகளை உள்வாங்கிக் கொள்கின்றன. மேலும், கண்களால் அறிவதில் மட்டுமல்ல, புதிய வார்த்தைகளை கற்பதிலும் இந்த தொடுதிரை கணினிகள் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு உதவுவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த வாதத்தை மறுக்கும் விஸ்கின்ஸான் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், பெற்றோருக்கு இரண்டு யோசனைகளை அளிக்கிறார்கள்.

முதலாவது, சிறு குழந்தைகள் சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக திரை முன்னால் இருக்க அனுமதிக்காதீர்கள் என்பது முதல் யோசனை. அதாவது, தொலைக்காட்சி, கணினி, தொடுதிரை கணினி என்று எல்லாவகையான திரைகளின் முன்பும் சேர்த்து குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரியாக இரண்டு மணிகளுக்கு மேல் இருக்க அனுமதிக்கக் கூடாது என்பதாகும்.

இரண்டாவது, தொடுதிரை கணினியில் இருக்கும் கேம்கள் மற்றும் அப்ளிகேஷன்கள் போன்றவற்றைத் தேர்வு செய்வதில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)



கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

(தொடர் 17)

நபிகளாரின் நடவடிக்கைகள் இடம் பெற்ற நிலைமைகளையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் ஆராய்ந்து பார்ப்பது சட்ட அறிஞரது கடமையாகும். பொதுமக்களுக்கு எத்திவைப்பதில் கூடிய கவனம் செலுத்தியிருத்தல், அதன்படி செயற்படுவதில் அதிக கரிசனைக் காட்டியிருத்தல், வாழ்வியல் விவகாரங்களை மொத்தமாக நோக்கி அவற்றுக்கான தீர்ப்புக்களை வழங்கி மக்களுக்கு அறிவிப்புச் செய்திருத்தல் போன்றவற்றை சட்டவாக்கத்திற்கான ஆதாரங்களாகக் கொள்ள முடியும். "அறிந்துக் கொள்ளுங்கள் அனந்தரக்காரருக்கு வஸிய்யத் செய்ய முடியாது", "அடிமையை விடுதலை செய்தவருக்கே அடிமை மீது அதிகாரம் உண்டு" போன்ற ஹதீஸ்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

செயலை நடைமுறைப்படுத்துவதில் கரிசனை காட்டாதிருந்தமை சட்டவாக்கத்தை நோக்கமாகக் கொள்ளாமைக்கான அடையாளங்களில் ஒன்றாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மரணப் படுக்கையில் இருக்கும்போது "ஏடொன்றை எனக்கு எடுத்து வாருங்கள்; நான் உங்களுக்கு தேவையானவற்றை எழுதித் தருகின்றேன். அதன் பின்னர் நீங்கள் வழிபிறழவே மாட்டீர்கள்" என்று சொன்னதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்வாறு கூறியபோது மக்கள் கருத்து முரண்பாடு கொண்டனர். அவர்களில் சிலர், எங்களுக்கு அல்லாஹ்வின் வேதம் போதுமானது என்று கூறினர். வேறு சிலரோ உங்களுக்கு எழுதுவதற்காக அவரிடம் ஏடொன்றை எடுத்துக் கொடுங்கள்" என்று கூறினர். நபிகளார் முன்னிலையில் சர்ச்சைப்படுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதைக் கண்ட நபியவர்கள் என்னை விட்டு விடுங்கள் நான் இப்போதிருக்கும் நிலையே சிறந்தது என்று கூறினார்கள்.

நாம் குறிப்பிட்ட நிலைமைகளில் சட்டவாக்க நிலையே அல்லாஹ்வின் தூதருக்கு மிக்க உரித்தானது. ஏனெனில், அல்லாஹ் அவனது தூதரை அனுப்பியதன் முதன்மையான நோக்கம் சட்டவாக்கமாகும். "முஹம்மத் ஒரு தூதரன்றி வேறில்லை" (ஆலு இம்ரான்: 144) என்ற வசனத்தின் மூலம் அல்லாஹ் அவனது தூதரின் நிலைகளை வரையறுத்துள்ளான். எனவே, ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து வெளிப்பட்ட சொற்களும் செயல்களும் சட்டவாக்கமாக வெளிப்படவில்லை என்பதற்கான ஆதாரம் இருந்தாலேயன்றி மற்றைய நிலைமைகளில் அவற்றை சட்டவாக்கமாகவே கொள்ள வேண்டும்.

> நீர் உமது வாரிசுகளை மக்களிடம் கையேந்தும் ஏழைகளாக விட்டுச் செல்வதைவிட செல்வந்தர்களாக விட்டுச் செல்வது சிறந்தது"


"ஸஃது பின் அபீவக்காஸ், தனது செல்வத்தில் வஸிய்யத் (மரண சாசனம்) செய்வது குறித்து கேட்டபோது மூன்றிலொரு பகுதியை வஸிய்யத் செய்யலாம்; மூன்றிலொரு பகுதிகூட அதிகமே" என்று கூறிய ஹதீஸை அறிஞர்கள் அனைவரும் ஏகமனதாக சட்டவாக்கமாகக் கொள்கின்றனர். இதனால்தான் அனந்தரக்காரர்கள் அங்கீகாரம் வழங்காத போது சொத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகமாக வஸிய்யத் செய்வதை அறிஞர்கள் அனுமதிப்பதில்லை. நீர் உமது வாரிசுகளை மக்களிடம் கையேந்தும் ஏழைகளாக விட்டுச் செல்வதைவிட செல்வந்தர்களாக விட்டுச் செல்வது சிறந்தது" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை ஆலோசனையாகவும் உபதேசமாகவும் கொள்வதற்குரிய இடம்பாடு இருந்தபோதும், அறிஞர்கள் அப்படியாகக் கருதவில்லை. நபியவர்களது இக்கூற்று ஸஃது (ரழியல்லாஹு அன்ஹு) அவரது வாரிசுகளதும் தனிப்பட்ட நிலையையும் அவர்களது கடுமையான வறுமையையும் எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது. இன்னும், இவ்வுரையாடல் ஸஃதுக்கும் ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் மத்தியில் தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற போதிலும் ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்வாறு செயற்படாதது மாத்திரமன்றி, இதனை ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஸஃது மாத்திரம் அறிவிக்கின்ற போதிலும் எந்த ஒரு சட்ட அறிஞரும் அனந்தரக்காரர்கள் செல்வந்தர்களாக இருந்தால் மூன்றிலொரு பகுதியைவிட கூடுதலாக வஸிய்யத் செய்யலாம் என்று கூறவில்லை. அல்லது அனந்தரக்காரர்கள் இல்லையென்றால் அப்படிச் செய்யலாம் என்று மார்க்கத் தீர்ப்புச் சொல்லவில்லை. இப்னு மஸ்ஊத், உபைதா அஸ்ஸல்மானி மற்றும் ஒரு சாரார் அப்படிச் செய்யலாம் எனக் கூறுவதாக இப்னு ஹஸ்ம் (முஹல்லாவில்) பதிவு செய்திருப்பதாக சிலர் கூறியுள்ளனர். அது புறநடையான கருத்தாகும். (மகாஸிதுஷ் ஷரீஅத்தில் இஸ்லாமிய்யா)

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை கூறியதன் பின்னர், முக்கியமான இந்த அடிப்படை விவகாரத்திற்கு முன்னால் நிதானமாக நின்று அக்கருத்துக்களையும் கூற்றுக்களையும் திறனாய்வு செய்வது அவசியமாகும். அல்குர்ஆன், சுன்னா மூல வசனங்கள், அடிப்படை விதிகள், ஷரீஆவின் இலக்குகள் ஆகியவற்றின் ஒளியில் சரியான கருத்தைச் சொல்வதற்கு முயல்கின்றோம். அல்லாஹ் எம்மை சரியான கருத்தின்பால் வழிப்படுத்த வேண்டும். எமக்குரிய நற்கூலியை தடுத்து விடக்கூடாது. கண்மூடித்தனமான பின்பற்றல், வெறித்தனமான பற்று, மனோ இச்சையைப் பின்பற்றல், பிறர் குறித்து தப்பெண்ணம் கொள்ளல் ஆகிய அடிமைத் தளைகளிலிருந்து அல்லாஹ் எம்மை விடுதலைச் செய்ய வேண்டும் எனவும் அல்லாஹ்வை நாம் பிரார்த்திக்கின்றோம்.

(தொடரும்)

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்

▶ சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்



ஜனநாயக அரசியலில் வாக்குரிமை என்பது முக்கியமாகக் கருதப்படுகின்ற ஒன்று. மக்களின் வாக்குகளினால் தெரிவாகின்ற ஓர் அரசாங்கத்தின் உறுப்பினர்களே கொள்கைகளை வகுத்து செயற்படுகின்றனர். தற்காலத்தில் பல அரசியல்வாதிகளின் ஒரே நோக்கு தேர்தலில் வென்று அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டும்தான். இத்தகைய நோக்கம் நிறைவேறுகின்றபோது அங்கு மக்களின் அதிகாரம், நல்லாட்சி முதலிய சொற் பதங்களெல்லாம் பெறுமதியற்றதாகி விடுகிறது. அரசாங்கத்தின் நலன்கள் குறிப்பிட்ட சில வர்க்கத்தினருக்கு மட்டும் உரித்துடையதாகவும் அக்குறிப்பிட்ட குழுவே சமுதாயத்தில் உயர் வர்க்கமாகவும் மதிக்கப்படுகின்ற நிலை தோன்றிவிடுகிறது. பொது மக்கள் அரசாங்கத்தின் அனைத்து நலன்களையும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என பேச்சளவில் கூறப்பட்டாலும், நடைமுறையில் அரசாங்கத்தின் செயற்பாடோ முற்றிலும் மாற்றமாகவே அமைந்து விடுகிறது.

> அரசியல் அதிகாரம் என்பது பெரும்பான்மை மக்களுடைய சம்மதத்திலும் ஆதரவிலும் தங்கியிருக்கவில்லை. மாறாக, சிறுபான்மையாகக் காணப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட உயர்வர்க்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கும் நலன்களுக்குமாகவே செயற்படுகின்றது என்பதே யதார்த்தம். தேர்தலின்போது பாடுபட்ட சாதாரண மக்கள் வெறும் அறுவை ஆடுகளாகவே ஜனநாயக அரசியலில் மதிக்கப்படுகின்றனர் என்பதுதான் கசப்பான உண்மை.

பட்ட மக்கள் குழுக்களும் பொதுமக்களும் காணப்படுவர். ஆனாலும், இத்தகைய சாதாரண மக்கள் உண்மையில் எந்தவொரு கட்டத்திலும் அரசாங்க நடவடிக்கைகளில் பங்கேற்பது கிடையாது அவர்கள் வெறுமனே அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும் ஆளப்படும் கூட்டமாகவுமே காணப்படுவர்.

பொதுமக்கள் மத்தியிலும் அவர்கள் மத்தியில் காணப்படுகின்ற உயர் வர்கத்தினர் மத்தியிலும் இடம்பெறுகின்ற பல்வேறு

சமூகத்தில் உயர் வர்க்கமாக இருப்பவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் அவர்களாலேயே ஒட்டுமொத்த சமூகம் தொடர்பிலான தீர்மானங்களும் எட்டப்படுகின்றன. இவர்களுடைய செயற்பாடுகளையும் தீர்மானமெடுக்கும் தன்மையையும் வைத்து இவர்களை இரு பிரிவினராக பிரித்துக் குறிப்பிடலாம்: ஒன்று, ஆட்சி செய்யும் நபர்கள். மற்றையது அவர்களையொத்த ஆனால், குறிப்பிட்டளவு அதிகாரம் கொண்டவர்கள். மேலும், சமூகத்தின் அடிமட்ட சமூக, பொருளாதார, அரசியல் தீர்மானங்களை மேற்கொள்கின்றதும் ஆட்சியாளர்களின் அரசியல் அதிகாரத்தினை பிரயோகிக்கின்றதுமான ஒரு சிறிய குழுவொன்றும் சமூக தளத்தில் தொழிற்படுகின்றது. இத்தகைய சமூகக் கட்டமைப்பின் கீழாக பல்வேறு

சமூக, அரசியல் காரணிகள் சமூகத்தில் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கின்றன. உயர் வர்கத்தினர் மத்தியில் உருவாகின்ற குழப்ப நிலையும் ஒற்றுமையின்மையும் அவர்களிடையே பிரிவினையை உருவாக்கி அவர்கள் சார்ந்த ஒட்டுமொத்த சமுதாயத்தின் அரசியலையும் நாசமாக்கி விடுகிறது. இதனால் அச்சமூகத்தின் இருப்பும் அதன் அபிலாசைகளும் கேள்விக்குறியாகி விடுகிறது. இவ்வுயர் வர்க்கத்தினர் மக்களை தன் பக்கம் ஈர்த்து தேர்தலின்போதோ அல்லது வேறு ஏதேனும் சந்தர்பங்களிலோ தலைமைத்துவத்திற்கு எதிராக மக்களைப் பிரயோகிக்கின்றனர். எவ்வாறேனும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவென அவர்கள் அரசியலில் காணப்படுகின்ற இனம், சமயம் முதலிய எவ்வகையான துடுப்புச் சீட்டினையும் பயன்படுத்தத் தயங்க மாட்டார்கள்.

அரசியல் தலைவர்கள் பதவிகளை வகிப்பது மக்களின் தேவைகளை நிறை வேற்றவும் கொள்கைகளை வகுத்துச் செயற்படுவதற்காகவுமே என்ற பொதுவான கருத்துண்டு. இத்தகைய வார்த்தைகளுக்கு மயங்கிப் போகும் அப்பாவி மக்கள் தமது வாக்குகளை உயர் வர்கத்தினரான அந்த தலைமைக்கு வழங்கி விடுகின்றனர்.

உண்மையில், அரசியல் அதிகாரம் என்பது பெரும்பான்மை மக்களுடைய சம்மதத்திலும் ஆதரவிலும் தங்கியிருக்கவில்லை. மாறாக, சிறுபான்மையாகக் காணப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட உயர் வர்க்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கும் நலன்களுக்குமாகவே செயற்படுகின்றது என்பதே யதார்த்தம். தேர்தலின்போது பாடுபட்ட சாதாரண மக்கள் வெறும் அறுவை ஆடுகளாகவே ஜனநாயக அரசியலில் மதிக்கப்படுகின்றனர் என்பதுதான் கசப்பான உண்மை.

இந்த ஜனநாயக அரசியலில் குறிப்பிட்ட உயர் வர்க்கமே அதிகாரம் கொண்டது எனில், வாக்காளர்களுடைய பங்களிப்புதான் என்ன? ஜனநாயக அரசியலில் மக்களுடைய பங்களிப்பு வாக்களிப்பதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. சமூக ஒப்பந்தக் கோட்பாடு என்றும் ஜனநாயக முறைமையில் மக்களின் பங்கு அதிகமானது எனக் கூறினாலும் நடைமுறையில் பெரும்பாலான அரசியல் முறைமையானது மக்களுக்கு நன்மை புரிவதாக இல்லை என்பது மட்டும் உறுதி.

ஜனநாயக அரசியல் தலைவர்கள் மக்களை அடிமைத்தனத்திலிருந்தும் ஒடுக்கு முறையிலிருந்தும் மீட்டு அவர்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழி வகுப்பதாக தங்களை காட்டிக் கொள்ளலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாக்கிங்' போகலாம் வாங்க



நம் உடலில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு நடைப் பயிற்சிதான் நல்ல தீர்வைத் தருகிறது. நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய் போன்ற முக்கிய பிரச்னைகளுக்கு மருத்துவர்கள் முதலில் பரிந்துரை செய்வது 'வாக்கிங் போங்க' என்பதாகத்தான்.

எப்படி நடக்க வேண்டும் என்பதே பலருக்குத் தெரிவதில்லை. இதனால், நடையின் பலனும் முழுமையாகக் கிடைக்காமல் போய் விடுகிறது. பொதுவாக நாற்பது வய்தானால் பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. அந்த வயதில்தான் பலரும் நடைப் பயிற்சி செய்கிறார்கள். நடைக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. வாக்கிங் போவதன் மூலம் நல்ல ஆரோக்கி யமாய் இருப்பதுடன் இளமையுடனும் இருக்க முடியும்.

ஒரு மணி நேரம் தொடர்ந்து நடந்தால் தான் முழுமையான பலன் கிடைக்கும். எனவே, படிப்படியாக தூரத்தை அதிகரிக்க வேண்டும். முதலில், தினசரி இரண்டு கிலோ மீற்றர் நடக்க ஆரம்பித்து, நிமிடத்துக்கு சுமார் 100 அடி எடுத்து வைத்து நடக்கலாம். இது ஆண்களுக்கு 92-102 பாத அடியாகவும் பெண்களுக்கு 91-115 பாத அடியாகவும் இருக்க வேண்டும். பெண்களின் பாத அளவு, கால்களின் உயரம் குறைவாக இருப்பதால் அவர்கள் அதிக அடி எடுத்து வைத்து நடந்தால்தான் ஆண்களுக்கு இணையாக கடக்க முடியும். நடைப் பயிற்சியின்போது, வியர்வையை உறிஞ்சக் கூடிய தளர்வான பருத்தி ஆடையை அணிந்து கொள்வது நல்லது.

மூச்சு வாங்கும் அளவுக்கு வேகநடை கூடாது. அருகில் நடப்பவர் வேகமாக நடக்கிறார் என்று நம் வேகத்தைக் கூட்டுவது ஆபத்தில் கொண்டு போய்விடும். நேராக நிமிர்ந்து நடக்க வேண்டும். தோள் பட்டையைத் தளர்த்தி, கைகளை நன்றாக வீசி நடக்க வேண்டும். அடிவயிறு சற்று எக்கியபடி நடப்பது நல்லது. சாலைகளில் நடப்பதைவிட பூங்காக்கள், கடற்கரை, விளையாட்டு மைதானத்தில் நடப்பது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது.

நாற்பது வயதுக்கு மேலுள்ளவர்கள் இருதய நிபுணரின் ஆலோசனைப்படி நடப்பது நல்லது. தசை, மூட்டு தொந்தரவு இருந்தால் அதற்கு சிகிச்சை பெற்று, பிறகு நடைப் பயிற்சி மேற்கொள்ளலாம். வியர்வையை உறிஞ்சக் கூடிய காலுக்குப் பொருத்தமான பருத்தி ஷொக்ஸ், ஷூ, செருப்பு அணிந்து நடப்பது அவசியம். காலணியின் அடிப்பாகம் பாதத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மேடு-பள்ளம் இல்லாமல் மென்மையாக இருக்க வேண்டும்.

சுமார் 350 மைல்களுக்கு மேல் நடக்கும் பட்சத்தில், ஷூவை மாற்ற வேண்டும். ஷூ ஒரு பக்கம் தேய்ந்த நிலையில் தொடர்ந்து நடக்கும்போது, மொத்த உடல் எடையும் ஒரு பக்கமாக சாயும். இதனால், கால் முட்டி, பாதத்தில் வலி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. குறுகிய வட்டத்துக்குள் நடப்பதை தவிர்ப்பதன் மூலம் இடுப்பு, முதுகு வலி வராமல் தடுக்கலாம்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள், எப்போதும் கையில் சொக்லெட்டும், இருதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் போத்தலில் தண்ணீரும் எடுத்துச் செல்வது அவசியம். பனி, குளிர் காலத்தில் கம்பளி, ஸ்கார்ஃப் அணிந்து வாக்கிங் செல்ல வேண்டும். வயதில் மூத்தவர்கள் மாடிப்படி ஏறி, இறங்குவதைத் தவிர்த்து, சமதளத்தில் நடப்பது நல்லது.

இதனால் இரத்த ஓட்டம் சீராகும். உடலில் இருக்கும் தேவையற்ற நீர் வெளியேறும். நுரையீரல் சீராக செயல்பட்டு சுவாச நோய்கள் வராமல் தடுக்கப்படும். கொழுப்பின் அளவு குறையும். புத்திக் கூர்மை, நோய் எதிர்ப்பு சக்தி, ஞாபக சக்தி அதிகரிக்கும்.



# தீ காயங்கள் ஏற்பட்டால்

தீக்காயங்கள் ஏற்பட்டால் முதலுதவியாக, காயத்தில் மை ஊத்துவது, எண்ணெய் போடுவது எல்லாம் தவிர்க்க வேண்டிய செயல்கள்.

தீக்காயங்கள் பட்டவுடன் அந்த வெப்பத்தினால் செல்கள் சேதமடைந்து காயம் ஏற்படுகிறது. அதனால் முதலில் நாம் செய்ய வேண்டியது, காயம் பட்ட இடத்தில் உஷ்ணத்தைக் குறைப்பதுதான். எண்ணெய் போடுவதால் வெப்பம் வெளியேற முடியாமல் உள்ளேயே தங்கி, மேலும் ஆழமாக செல்களைச் சேதப்படுத்தும். வேறு எதை காயத்தின் மீது ஊற்றினாலும் வெப்பம் தொடர்ந்து தணியாது.

எப்பவுமே காயம் பட்ட இடத்தில் அரை மணி நேரமாவது தொடர்ந்து தண்ணீரை ஊற்றிக் கொண்டே இருப்பதுதான் சரியான முதலுதவி. தண்ணீரை திறந்து விட்டு தொடர்ச்சியாகக் காயத்தில் படும்படி செய்ய வேண்டும். காயத்தின் எரிச்சல் தீரும் வரை தண்ணீரை ஊற்றி விட்டால் காயத்தின் தீவிரம் குறையும். சூட்டை வேகமாகக் குறைப்பதற்காக சிலர் ஐஸ் கட்டி, ஐஸ் தண்ணீர் போன்றவற்றை வைப்பார்கள்; அதுவும் தவறு.

இந்த முதலுதவி முடிந்ததும் உடனடியாக டாக்டரை அணுகி, அவர் வழங்கும் கிரீமைத்தான் காயத்துக்குப் போட வேண்டும். காயத்தின் தன்மை, அது பட்ட இடத்தின் தன்மை புரியாமல் இஷ்டத்துக்கு பாமசியில் ஏதோ ஒரு கிரீமை வாங்கித் தடவுவது கூடாது.



# ஆரோக்கிய தேசம்

தொகுப்பு: எஸ். பாமினா அலி

## இஸ்லாத்தின் பார்வையில் மனவெழுச்சி மதிநுட்பம்

### (Emotional Intelligence-EI)

எம். முஹம்மட் பைறோஸ் MSc. (Psy)

இன்றைய உலகில் மனிதன் உணர்ச்சிகளாலும் மனவெழுச்சியாலும் அடிமைப் படுத்தப்பட்டு இருக்கின்றான். வாழ்க்கையின் உன்னத இலக்கு, தெளிவான வழிகாட்டலை சுமந்து இருக்கின்ற முஸ்லிம் சமூகத்திலும் இந்நிலை காணப்படவே செய்கின்றது. சமகாலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினை, அவர்களது உணர்வு ரீதியான அம்சங்களைக் கொச்சைப்படுத்துவதன் மூலம் மனவெழுச்சியைத் தூண்டி முஸ்லிம்கள் தொடர்பான பிழையான அபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைகின்றமையாகும். எனவே, மனவெழுச்சி மதிநுட்பம் தொடர்பாக இஸ்லாமிய உளவியல் அறிவை உள்வாங்குவது காலத்தின் தேவையாக உள்ளது.

மனவெழுச்சி (Emotion) என்பது எமது உடல், உள்ளம் தூண்டப்பட்ட அசாதாரண நிலையாகும். மதிநுட்பம் (Intelligence) என்பது சூழ்நிலைகளுக்கேற்ப தன்னை இசைவாக்கிக் கொள்ளும் திறனாகும். இருப்பினும், மனவெழுச்சி மதிநுட்பமானது (Emotional Intelligence) பரந்த அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. அதாவது, ஒருவர் தன்னிடத்திலும் மற்றவர்களிடத்திலும் காணப்படும் உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் அவதானித்தறிந்து அதன் மூலம் தனது சிந்தனையையும் நடத்தையையும் நெறிப்படுத்துவதாகும். மனவெழுச்சி மதிநுட்பம் (EI) என்பதை சுருக்கமாக கூறுவதாயின் வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மனவெழுச்சி தொடர்பில் சாதுரியமாக செயற்படலும் வெற்றிகரமான வாழ்விற்கான ஓர் ஆற்றலும் எனச் சொல்லலாம். இது எமது வாழ்வில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது. குறிப்பாக, தொழில் விருத்தி, திருமண வாழ்க்கை, வேலைத்தளங்களில் இதன் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

EI பற்றிய ஒரு விழிப்புணர்வானது மாணவர்களுக்கு ஆக்கபூர்வமான கல்விச் சூழலை உருவாக்குவதிலும் பங்களிக்கின்றது. இதனால்தான் அதிகமான சந்தர்ப்பங்களில் EI, IQ வை விட முக்கியத்துவம் பெறுகிறது. இதன் நிமிர்த்தம் மனவெழுச்சியை கையாளும் திறனைக் குழந்தைகளிடத்தில் விருத்தி செய்வதன் மூலம் அவர்களிடத்தில் EIயை அதிகரித்து அவர்களை ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான வாழ்விற்கு வழிகாட்டலாம்.

பிரபலமான உளவியலாளர்களினதும், மெய்யியலாளர்களினதும் கருத்துப்படி மனவெழுச்சி மதிநுட்பம் முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது:

1. சுய விழிப்புணர்வு- (Self awareness)
2. மனவெழுச்சியை முகாமை செய்யதல்- (Managing emotions)
3. சுய ஊக்கம்- (Motivating oneself)
4. மற்றவர்களின் மனவெழுச்சியை அங்கீகரித்தல்- (Recognizing emotionsin others)
5. உறவுகளைக் கையாளுதல்- (Handling relationships)

மனவெழுச்சியானது மனித ஆன்மாவின் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. இருப்பினும், இஸ்லாம் எல்லா விடயங்களிலும் நடுநிலையை ஊக்குவிக்கிறது. மிதமிஞ்சிய எதிர்மறையான அதேபோல், எல்லை கடந்த சந்தோசமான மனவெழுச்சியும் இஸ்லாத்தின் பார்வையில் தவிர்க்கப்பட வேண்டியவையே.

மேலே கூறப்பட்ட விடயங்கள் தொர்டபாக இஸ்லாமிய வழிகாட்டுதலை அணுகுவது மிகப் பொருத்தமாக அமையும்.

**1. சுய விழிப்புணர்வு** (Self awareness)

ஒருவர் தனது உணர்வுகளையும் மனவெழுச்சியையும் அறிந்து கொள்ளல் என்பது EIயின் மிக முக்கியமான அம்சமாகும். தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்ற எமது உணர்வுகளை திறமையாகக் கையாளுதல் அவசியமானதாகும். தமது உணர்வுகளைப் பற்றி தீர்க்கமான அறிவுடையவர்கள் சரியான சந்தர்ப்பத்தில் பொருத்தமான முடிவை எடுப்பர்.

"நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை நிராகரித்து அவனை முற்றிலும் மறந்து விட்டவர்களைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம். ஏனென்றால், (அதன் காரணமாக) அவர்கள் தம்மையே மறக்கும்படி (அல்லாஹ்) செய்து விட்டான். இத்தகையவர்கள் பெரும்பாவிகள்தான்."

(அல் குர்ஆன் 59:19)

இவ்வசனம் ஒரு மனிதன் தன்னைப் பற்றி அறிவதனூடாக தன் இரட்சகனை அறிய முடியும் எனக் கூறுகிறது. மறுதலையாக எப்போது மனிதன் தன் இரட்சகனைப் பற்றி தெளிவான அறிவுடன் இருக்கின்றானோ அப்போது அவன் தன்னைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்வான். அத்தோடு மனிதன் தனது ஆற்றல்கள், ஆளுமைகளை அறிவதுடன் மனிதனை மிருகத்திலிருந்து உயர்வுபடுத்தும் இயல்புகளை அறிவதும் அவசியமாகும்.

எமது மனவெழுச்சியானது உள இயக்கத்தால் (Psycho-Motor) கட்டுப்படுத்தப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டாலும் இஸ்லாம் எமது மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தவும் அதனை அறிந்து கொள்வதற்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்கிறது.

நாங்கள் எமது தாய்மாரின் கருவறையில் உருவாகும் முன்னரே எங்கள் ஆன்மாக்கள் அல்லாஹ்வை சந்தித்துக் கொண்டன. ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மா நிலையில் அல்லாஹ்வை தனது இரட்சகனாக ஏற்றுக் கொண்டுள்ளான். இத்தகைய அவனது புனிதமான ஆரம்ப உறவு காரணமாக மனிதன் மீண்டும் இந்த உறவைத் தேடி பயணிக்கின்றான். இதுவே அவனது வாழ்வின் அர்த்தமாக அமைகின்றது. பல்வேறு கட்டங்களுக்கூடாக பயணிக்கும் ஆன்மாவின் இறுதி இலக்கு மீண்டும் தனது படைப்பாளனை சந்திப்பதேயாகும்.

எனவே, சுய விழிப்புணர்வு என்பது மனிதன் தன்னைப் பற்றி அறிதலும் மதிப்பீடு செய்வதுமாகும். அதாவது நான் யார்? நான் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறேன்? எனது வாழ்வின் நோக்கமும் இலட்சியமுன் என்ன? நான் எங்கே செல்லப் போகிறேன்? எனக்கும் என் படைப்பாளனுக்கும் உள்ள உறவு என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை தேடலும் தனது பலம், பலவீனம் தொடர்பான தகவல்களைப் பெற்று அதன் மூலம் தன்னை சீர்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுமாகும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

## நூல் மதிப்புரை

# றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும்

நூலின் பெயர்: றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும்
நூலாசிரியர்: ஏ.கே. முஜாரத்
வெளியீடு: பேனா பப்ளிகேஷன்
தொ.பே. இல: 077 5294492/075 6064355



▸ எம். றம்ஸா

ஏ.கே. முஜாரதுடைய 'றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும்' என்ற இத்தொகுப்புக்கு கிண்ணியா சபருள்ளா, ஏ. நஸ்புள்ளா ஆகியோர் தனது கருத்துக்களையும் உணர்வுகளையும் இங்கு அழகாக பதிவு செய்திருக்கின்றனர்.

முழு உலகையும் ஒரு கணம் அழச் செய்த, ஆழமாக யோசிக்கச் செய்த, ஒரு துளி கண்ணீரையேனும் தன் கன்னத்தில் உருண்டோடச் செய்த, சர்வதேசத்தின் சர்வாங்கமும் அடங்கிப் போகச் செய்த றிஸானாவின் மரணம் கவிஞர்களின் மனதில் எழுப்பிய சலனங்கள், உணர்ச்சிகள், அழுகைகள், ஆராதனைனகள், பிரார்த்தனைகள் மற்றும் கதறல்கள் அனைத்தையும் ஒளித்தொகுப்பு செய்து தந்திருக்கிறது இந்த றிசானவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும் என்றுரைக்கும் சபருள்ளாஹ், இத்தொகுதியிலுள்ள அத்தனை கவிதைகளும் றிஸானாவின் மரணத்தை ஆவணப்படுத்தி அடுத்து வரும் பரம்பரைக்கும் விட்டுச் செல்லும் ஓரளகிய தொகுப்பு என்கிறார்.

அவற்றுள் பிடித்த வரிகளில் சில:

காக்கப் போனவளை தாக்கப் போனவளாக சித்தரித்தவர்களே.

நாளை மஹ்ஷரில் தவாத்மி சுவர்கள் மௌனம் கலைக்கலாம்.

நீ வெட்டுண்டு மரணிப்பதற்கு முன்பதான ஒரு செக்கனில்...

உன்க்கும் அல்லாஹ்வுக்கும் தெரிந்திருக்கும்.

மனசு தீய்க்க அழுது கொண்டிருந்தார்கள்.

உன் இருக்கை காலியாகவே இருக்கிறது.

வீடு முழுக்க...

அடைக்கப்பட்ட அபலை.



# நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்

-ஒட்டமாவடி அறபாத்-

தொடர் - 40

அந்த நேரத்தில் நண்பர் பவ்சர், என் ஆத்மா, பொத்துவில் மஜீத், அக்கரைப்பற்று ஏ.எம். தாஜ், கருங்கொடியூர் கவிராயர் எனப் பெரும் கவிஞர் பட்டாளமே தினகரனில் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரு வருடத்திற்குள் எல்லா முன்னணிப் பத்திரிகையிலும் உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் எனது கவிதைகள் வெளிவரத் தொடங்கின.

விடாமுயற்சியும் வாசிப்பும் என் எழுத்தின் தீவிரத்திற்குத் தீனி போட்டுள்ளது என்பதை இப்போது நினைத்துப் பார்க்கின்றேன். இப்போது எழுதிக் கொண்டிருக்கும் புதியவர்கள் வாசிப்பது அரிதாகத்தான் உள்ளது. அதை அவர்களின் எழுத்தில் பார்க்கலாம். உப்புச் சப்பற்ற எழுத்துகளுக்கு தாங்களே தன் கழுத்தில் மாலை போட்டுக் கொள்ளும் அசிங்கம் இங்குதான் உண்டு.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதைவிட நூல்கள் இல்லாத ஊரில் குடியிருப்பதுதான் என்னைப் பொறுத்தவரை மிகுந்த அவஸ்தை என்பேன். இப்போதும் படிக்கத் தொடங்கி விட்டால், எழுதத் தொடங்கி விட்டால் என்னை அசைக்கவே முடியாது என்பது என் துணைவியின் குற்றச்சாட்டுக்களில் ஒன்று. எழுத்தும் வாசிப்பும் மனமொன்றி இருந்தால் அது மற்றவர்களின் மனதில் சாசுவதமாய் தங்கி வாழும்.

நான் வேலைபார்த்த இடங்களில் பெரும்பாலும் வாசிப்பதற்குப் பத்திரிகைகளைத் தவிர வேறொன்றும் கிடைப்பதில்லை. மலைநாட்டில் உள்ளவர்களுக்கும் வடமத்திய மாகாணத்திலுள்ளவர்களுக்கும் 'சரிநிகரை' அறிமுகப்படுத்தியிருக்கின்றேன். இன்றைய காலம் போல் இணையத்தில் பத்திரிகைகளை வாசிக்க முடியாத காலம் அது. சிறு சஞ்சிகைகள் அக்காலத்தில் வந்து கொண்டிருந்தது.

மட்டக்களப்பிலிருந்து படி, மூன்றாவது மனிதன், நந்தலாலா மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து அம்மா, எக்சில், உயிர் நிழல் போன்ற சஞ்சிகைகள் வந்தன. மறு சஞ்சிகைகள் வரும் வரை திரும்பத் திரும்ப பாராயணம்தான்.

கடைசியாக, கொழும்புக்கு 1996 இல் காலடி எடுத்து வைத்தபோது வாசிப்பும் எழுத்தும் உச்சத்தில் இருந்தது. நான் வேலை பார்த்த அலுவலகம் பொரல்லையில் அமைந்திருந்தது. வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் அமைதியான இடம். தூரிகைக் கவிஞர் நண்பர் எஸ். நளீமிடமிருந்தும் கவிஞர் அனாரிடமிருந்தும் காத்திரமான புத்தகங்களை இரவல் பெற்று வாசித்திருக்கின்றேன்.

சம்பள நாளில் செட்டியார் தெருவில் இருக்கும் பூபாலசிங்கம் புத்தக நிலையத்திற்குச் சென்று விடுவேன். இந்திய மற்றும் ஈழத்து சஞ்சிகைகள், புத்தகங்கள் என அள்ளிக் கொண்டு வந்து அடுத்த மாத சம்பளம் வருவதற்கு முன் வாசித்து விடுவேன். திருமண பந்தத்தில் இணையாத பொற்காலம் என்பதால் நிறைய வாசிக்கவும் எழுதவும் அக்காலங்கள் உதவின. அதிகம் என்னை வாசிக்க வைத்தவர் எஸ்.எல்.எம். ஹனீபா.

முதிசம்களின் இலக்கியப் பொக்கிசங்களை எஸ்.எல்.எம். ஹனீபா மூலம்தான் படித்து முடித்தேன். ஜெயமோகன், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, நகுலன், ராஜகோபாலன், அசோகமித்திரன், ஜானகி ராமன் எனப் பெரும் படைப்பிலக்கிய ஜாம்பவான்களைப் படித்தது அவரிடமிருந்துதான். தோப்பில் முஹம்மது மீரான், தகழி, வைக்கம் முஹம்மது பசீர் என்று மலையாளிகளை அறிமுகப்படுத்தியவரும் அவரே. பொற்றே கார்ட்டின் பல நாவல்களை படித்து பரவசமுற்றதும் இக்காலத்தில்தான்.

வாசிப்பும் தொடர்ச்சியான எழுத்துப் பயிற்சியும் இல்லை என்றால் ஓர் எழுத்தாளனால் சோபிக்க முடியாது என்பது என் அனுபவம். என்ன எழுதுகிறோம் என்பதைவிட, அதை எப்படி வெளிப்படுத்துகின்றோம் என்பதுதான் படைப்பிலக்கியத்தில் அதி உச்சம் என்பேன். ஒரு புனைவின் நம்பகத்தன்மையும் வாழ்வின் உன்னதங்களைக் கோடிட்டுக் காட்டும் மெய்யுமே இலக்கியத்தில் நிலையானவை என்பது இன்று நம்மில் பலருக்குத் தெரியாமலேயே போய்விடுகின்றது.

எழுத்துக்கு மட்டுமல்ல, அரசியல் போராட்டம், அல்லது இயக்கம் சார்ந்த செயற்பாடுகள், எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். காலத்தால் நின்று சில புனைவுகள் பேசப்படுவதற்குக் காரணம், அவர்கள் மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் முறைதான் என்பது எவ்வளவு சத்தியமாக உள்ளது.

ஊஞ்சல் இன்னும் ஆடும்...

# நாட்டுப்புறவியல்


## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம்.ஸியாத் - இறக்காமம்

நாட்டுப்புறவியல் எனும் துறை, இன்று பலராலும் பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டுவரும் தனித்துவமான துறையாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம், அது புலப்படுத்தி நிற்கும் பொருளும் உண்மைகளும் உணர்ச்சிகளுமேயாகும்.

நாகரிகம் மேன்மையுற்று இயந்திரச் வாழ்க்கைக்குள் மனிதர்கள் மூழ்கிப் போவதற்கு முன்னர், அரச சார்பான இலக்கியங்களையும் தெய்வங்களைப் பாடும் பக்தி இலக்கியங்களையும் உயர் இலக்கியமாகவும் ஏனையவற்றை பொதுமக்கள் சார்பான இலக்கியமாகவும் நோக்கினர். பொதுமக்கள் சார்பான இலக்கியங்களில் சாதாரணமான பொதுமக்களே பாத்திரங்களாக உலாவந்தனர். இவ்விலக்கியத்தின் அடிக்கூறு சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.

பொதுமக்கள் சார்பான இலக்கியங்களுக்குக் 'கர்த்தாக்கள்' இருந்தனர். யார் இதனை எழுதியது



என்பது வெளிப்பட்டு நிற்கின்றமையால், இயற்றமிழுக்குள் உட்பட்டு நிற்கின்றது. இவை, இயற்றியோர் அறியப்படாது ஏட்டில் ஏறாது வாய் மொழி ஊடாகப் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு நிற்கும்போது, அது நாட்டார் இயலுக்குள் சேர்ந்து விடுகின்றது.

பல்வேறு நிலைகளிலும் முன்னேற்றம் கண்ட மக்கள் கூட்டத்தினர் அவர்களுக்கு இணையாகாதோரை நாட்டவர், பட்டிக்காட்டவர் எனப் பிரித்து நோக்கினர். பட்டணத்தாரை விடவும் பட்டிக்காட்டவர் பண்பாட்டிலும் குணத்திலும் நிறைந்து காணப்பட்டதோடு அவர்களின் மூதாதையர் விட்டுச் சென்ற விடயங்களை பொன்னெனப் போற்றினர். இவர்கள் வெளிக்காட்டி நின்ற மொழிக் கலையினையும் பண்பாட்டுக் கோலங்களையும் நாட்டுப்புறவியல் அல்லது நாட்டாரியல் எனலாம்.

நாட்டுப்புறவியல் அல்லது அது தொடர்பான ஆய்வினை Folk-Lore என்பர். Folk என்பது மக்களையும் Lore என்பது உடமை எனவும் பொருள் கொண்டு 'மக்கள் உடமை', 'பொதுமக்கள் உடமை' என விளக்கம் தருகின்றனர். ஆயினும் Lore என்பதன் அகராதிப் பொருளாக, 'கற்றல்' அறிவு- பரம்பரையாக வழங்கப்பட்டு வருவது எனக் காணப்படுகின்றது.

மக்கள் உடமையான மொழிக் கலை பல்வேறு பண்புகளைக் கொண்டிருப்பதும் அப்பண்புகளை முறையாகக் கற்றோரைவிடப் பாமரர் பேணுவது கொண்டும் இதனைப் பாமர இலக்கியம் எனவும் ஏடறியா இலக்கியம் எனவும் கூறப்படுகிறது.

**பாமரர் இலக்கியம்/ நாட்டாரியல் பண்புகள்**

- பேச்சு வழக்கு மொழிக் கலவை காணப்படல்
- பரம்பரை ரீதியாகப் பயிலப்பட்டு, வாய் மொழிப் பேணுகை
- இலக்கண வரம்புகளை மீறிக் காணப்படல்
- இயல்பான ஓசை
- ஆக்ககர்த்தாவோ, உரிமைகோருனரோ இன்மை

மேற்கூறப்பட்ட பண்புகள் மேலோங்க நிற்கும் மொழிக் கலையினை நாட்டுப்புறவியல் எனலாம்.

**நாட்டுப்புறவியல் உள்ளடக்கும் துறைகள்**

- தொடர்கள்
- விடுகதைகள்
- பழமொழிகள்
- பாடல்கள்/ கவிகள்

கதைகள்

வாழ்வியல் அம்சங்கள் (நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், மருத்துவம்...)

கல்விப் புலத்தினை பின்னணியாகக் கொண்ட நாட்டுப்புறவியல் ஆய்வுநர்கள் 'தொடர்களை' இதனுள் உள்வாங்கியதாக தெரியவில்லை. ஆயினும், கிராமப் புறங்களில் பேணப்பட்டு வரும் தொடர்கள் கருத்தாளம் மிக்கனவாகவும் சமூக கலாசாரத்தையும் மொழித் தொன்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவை அவர்களின் மூதாதையர் விட்டுச் சென்ற எச்சங்களாகக் காணப்படுகின்றன. இவற்றை மொழியியலாளர்கள் கிளைமொழிகளுக்குள் உட்படுத்துவர்.

**நாட்டார் தொடர்கள்**

தொடர் என்பதைச் சொற்கூட்டம் அல்லது சொற்களின் தொகுதி எனக் கொள்வோம். அவ்வகையில், நாட்டுப்புறவியலுக்குள் காணப்படும் தொடர்கள் வருமாறு:

மரபுத் தொடர்கள்

உவமைத் தொடர்கள்

இணை மொழிகள்

அடுக்கிடுக்குத் தொடர்கள்

அடுக்குத் தொடர்கள்

கருத்தாளமிக்க ஏனைய தொடர்கள்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் சூழ்ந்த நீண்டதோர் இரவின் நிசப்தம்...! நிலவு தன் முந்தானையை மூடிக் கொண்டது. விண்மீன்கள் கருமேகத் திரைகளுக்குப் பின்னால் மெல்ல மறைந்து விட்டன. பிரபஞ்சம் முழுவதையும் அமைதி ஆட்கொண்டது. மனிதர்கள் கனவு வெளியில் தொலைந்து விட்டிருந்தனர். நானோ கெமருனை எதிர்பார்த்தவளாய் தனியாக அமர்ந்திருக்கிறேன். எனதுள்ளமோ தட்டழிந்து குழம்பிப் போயிருக்கிறது. அது வேதனையின் காற்றைப் பிழிகிறது. இருந்த இடத்தை விட்டும் எழும்ப விரும்புகிறேன், முடியவில்லை. என்னுலகத்தில் பெரியதொரு தளர்வை உணர்கிறேன். கதிரையின் விளிம்பைப் பிடித்தவளாய் கஷ்டத்தின் மத்தியில் எழும்ப முயற்சிக்கிறேன்.

கெமருன் அறையினுள் நுழைந்தார். "எங்கு போயிருந்தீர்கள்? இவ்வளவு நேரமாக ஏன் வரவில்லை... உங்களுக்கான காத்திருப்பில் நான் மெழுகாவேன் என்று உங்களுக்குத் தெரியாதா?"

"நீ என்னைக் குறுக்கு விசாரணை செய்வதை நான் விரும்பவில்லை... எப்போது விரும்புகிறேனோ அப்போது நான் வீட்டுக்கு வருவேன்"

மேலங்கியைக் கழற்றி கதிரையின் ஓரத்தில் வீசியெறிந்தவர், குளியலறையை நோக்கிச் சென்றார். நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து பிரவாகிக்கும் எரிவோடு அழுகிறேன்; இருளின் கோரங்களோடு நான் போராடுகிறேன்.

முன்னரெல்லாம் இரவில் அரிதாகவே தாமதித்து வருபவர், இப்போது இரவு முழுவதையும் வெளியிலேயே கழிக்கிறார். சிலபோது காலையிலேயே என்னிடம் வருகிறார். இது வாழ்வின் மீதான என் எதிர்பார்ப்பைத் தவிடுபொடியாக்குகிறது.

என் சிரசத்தில் கடுமையான வலியை உணர்கிறேன். இரு கரங்களாலும் என் தலையைப் பற்றிப் பிடிக்கிறேன். இந்நாட்களில் இவ்வாறுதான் என் வலிகள் கடுமையாகிப் போகின்றன.

கெமருன் குளியலறையிலிருந்து வெளியேறினார். என் விழிகள் அவரை வலம் வருகின்றன. ஒரு கோப்பைப் பாலை அருந்தினார். மறு ஆடையை அணிந்து விட்டு மேலங்கியை எடுத்தார். வெளிச் செல்வதில் லயித்துப் போனவர் அதை அணிந்து கொண்டு கதவிற்கு சூடானதொரு பிரியாவிடை கொடுத்தார். நான் அவரை உற்றுப்பார்க்கிறேன். என்னால் எதையுமே செய்ய முடியவில்லை. கெமருனின் நடத்தைகளைப் பற்றி குடும்பத்தாரிடம் நான் எவ்வாறு பேசுவேன்? ஆரம்பத்திலேயே அவரை மணமுடிப்பதற்கு அவர்கள் உடன்படவில்லை. நான் என்ன செய்வேன்; யாரிடம் என் உளக்குமுறல்களை முறையிடுவேன்? என் உளச் சுமைகளை யாரிடம் நான் இறக்கி வைப்பேன். இறைவா! இதை நான் அவரது தாயிடத்திலாவது சொல்லியாக வேண்டுமே. நான் எழ வேண்டும். அமைதியாக அசைகிறேன்.

கெமருனின் அந்நியமான நடத்தைகளோடு இவ்வாறு தாமரையிலைத் தண்ணீராய் ஏகாந்தமாக என்னால் வாழ முடியாது. அவர் ஏன் இவ்வாறு மாறிப்போனாரென அறியேன். அவருக்கு என்னதான் நடந்தது?

பல மணவாளர்கள் என் கைபிடிக்க முனைந்தபோது, நானோ மதிமயக்கத்தால் தற்பெருமை கொண்டேன். என் குடும்பத்தாரது வார்த்தைகளுக்கு நான் செவிசாய்க்கவில்லை. அவர்களது நிலைப்பாடுகளையும் என் மீதான பாசத்தையும் அவர்களது உபதேசத்தையும் நான் பொருட்படுத்தவில்லை.

அன்றொரு நாள் என் தாய் உபதேசித்தை இப்போது நினைவுபடுத்துகிறேன்...


"மகளே! மாலையில் வீடு திரும்ப மறந்துவிடாதே. இராணுவ அதிகாரியின் குடும்பத்தார் உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்"

"நான் திருமணத்தை விரும்பவில்லை, இந்நாட்களில் அதைப் பற்றி யோசிக்கவுமில்லை என நான் முன்னரே கூறியிருக்கிறேனல்லவா"

இனியதொரு மாலைப் பொழுதில் அவர்கள் ஓர் அழகிய ரோஜா மலர்ச் செண்டுடன் வந்திருந்தனர். அவர்களை வாழ்த்துக் கூறி வரவேற்ற பின் அறைக்குள் நுழைந்த நான் அவர்கள் செல்லும்வரை வெளியே வரவில்லை. அவர்கள் இன்னொரு முறை தோன்றுவேனா என ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால், துரதிஷ்டம் ஒரு கோப்பைத் தேநீரைக்கூட நான் அவர்களுக்கு வழங்கவில்லை.

"கவலைப்படாதே மகனே! எத்தனையோ இளம் பெண்கள் உன்னை மணமுடிக்க கனவு காண்கின்றனர். இது அகங்காரம், ஏதோ வானத்திலிருந்து வந்தவள்போல"

சில மாத இடைவெளியின் பின்னர் அவன்




மணமுடித்த விடயம் என் காதில் விழுந்தது. அது என் துரதிஷ்டம். "மகளே... இது மணமகனின் அறிவுப் பண்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவரை வேண்டாமென்று மறுத்த மற்றுமொரு வரன். இவ்வாறிருப்பது உனக்கு ஏற்றதல்ல. அவர்களோடு அமர்ந்து பேசிப்பழகி பின்னர் உனது முடிவைத் தீர்மானித்துக் கொள்வதுதான் நல்லது. உனக்கென்று வரும் சந்தர்ப்பத்தை நீயாகவே எட்டி உதைத்துவிடாதே" இது என் தாய் அள்ளிச் சொன்ன புத்திமதிகள்.

பல்கலையில் ஒரு நாள், மேசை முன்னால் நான் தனியாக அமர்ந்திருந்தேன். எனது படிப்பு சம்பந்தமாக என் சிந்தனைகளை முடுக்கி விட்டிருந்தேன். கண் சிமிட்டும் அழகிய மலர்களை உற்றுப்பார்க்கிறேன். அவை ஏதோ சேதி சொல்கின்றன. அவ்வாறே என் தலையை மெதுவாக உயர்த்துகிறேன். மேசையின் முன்னால் ஓரிளைஞன் உணவுத் தட்டுடன் நிற்கிறான். என் முன்னால் அமர்வதற்கு என்னிடம் அனுமதி கோருவதை அவனது வதனமொழி உணர்த்தியது. அமைதியாக என் உதடுகளிலிருந்து உதிர்ந்த பளிச்சிடும் புன்னகையுடன், "அமருங்கள்" என்றேன்.

"இன்று நான் உங்களைத் தனியாக இருக்கக் காண்கிறேன்..."

"நண்பர்கள் எல்லோரும் விரிவுரைக்குச் சென்று விட்டனர்"

புன்னகைத்தவராக அவர் கூறினார், "சிறிது நேரம் உங்களிடமிருந்து பேசி என்னை அறிமுகம் செய்யக் கிடைத்ததைப் பெரும் போறாகக் கருதுகிறேன்"

அந்நாளிலிருந்து இனம் புரியா ஓருணர்வு என்னை ஆட்கொண்டது. என்னுள் பெரியதொரு பூரிப்பை நான் உணர்ந்தேன். பிறந்ததிலிருந்தே மூடியிருந்த இதயக் கதவில் மெல்லிய, இதமான தட்டும் ஓசையை நான் செவிமடுத்தேன். என் வெள்ளத்து தேவதையின் சப்தம் என் பெயர் சொல்லி அழைக்கிறது. மூடிய என் இதயக் கதவு இதமான புன்னகையுடன் மெல்லியதோர் உரசலோடு அகலத்திறக்கிறது. என் வதனம் வெளுத்துப்போனது. அவரைச் சந்திக்கின்றபோது என் இதயமொழியின் ஓசையைக் கேட்பதற்கே நான் அஞ்சினேன். என்னைச் சூழவுள்ள ஒவ்வொரு பொருளும் அழகில் நனைந்தன.

பூரண சுதந்திரமும் பாரிய அறிவுத்திறனும் படைத்த வசீகரமான இந்த கெமருன் இந்தளவு கரிசனை கொள்கிறானா. நான் எவ்வளவு பெரிய அதிஷ்டசாலி; நானே குதூகலத்தின் ஆழத்திற்கே சென்றேன். என்னுள்ளம் அவர் பால் ஆகர்ஷிக்கப்பட்டது. முதற் சந்திப்பிலேயே அது பச்சைக்கொடி காட்டியது.

**தமிழில்: ராஷித் எம். யஹ்யா**
**நளீமியா வளாகம்**

உணவு மேசையில், நூலகத்தில் ஒவ்வோரிடத்திலும் என் கண்ணெதிரே அவரைக் காண்கிறேன். எனக்கும் அவருக்குமிடையிலான உரையாடல்கள் அதிகரித்தன. அவர் மீதான எனது சிரத்தை அதிகரிக்குமளவு அவர் என்மீது அபூர்வமான கரிசனை கொண்டார்.

என் வாழ்வின் நீண்ட இருள் அகலத் தொடங்கியது; வசந்தம் மலர்ந்து மணம் வீசத் தொடங்கியது. இறுதியில் நாங்கள் திருமணம் செய்ய உடன்பட்டோம். என் வாழ்வின் மிக மகிழ்ச்சியான தருணமிது.

திருமணமும் சடங்கு சம்பிரதாயங்களும் மிகச் சுருக்கமாகவே இருந்தன. நாங்கள் விரைவாக மணமுடித்தோம். ஏனெனில், நான் அவரோடு வாழ ஆசைப்பட்டேன். அவரைப் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை. அன்பினதும் மகிழ்ச்சியினதும் ஊற்றுக்கள் அதுவே. தேனிலவு காலம் எனக்கு மிகவும் இனித்தது. ஒவ்வொரு யுவதியும் கனவு காண்கின்ற மகிழ்ச்சியின் உச்சத்தால் நான் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வாழ்ந்தேன். உயர்ந்த பெறுமதியானதோர் இணை. என்னை நானே பொறாமைப்பட்டுக் கொண்டேன். மகிழ்ச்சிகரமான இம்மண வாழ்வைத் தந்தமைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி கூறிக் கொண்டேன். எங்கிருந்து வந்தார் கெமருன். அவருடன் நான் எவ்வாறு அறிமுகமாகிக் கொண்டேன். மனம் துளிர்விட்ட அந்தப் பொழுது குறுகியதாகவே இருந்தது. அனாலும், அது எனதிருப்பின் மீது எதிர்பார்ப்பைத் தூண்டியது. நான் தியாகம் செய்ய, என் வாழ்வு முழுவதையும் அவருக்கே வழங்கிவிட விரும்புகிறேன். ஏனெனில், அது விடயத்தில் அவர் தாராளத் தன்மையுடையவராக இருந்தார். ஆனால், எமது மகிழ்ச்சி மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. அவருடைய நடத்தையில் மாற்றத்தையும் என் மீதான அசிரத்தையும் நான் அவதானிக்கலானேன்.

இந்த வேகத்தைக் கண்டு ஆச்சரியப்படுவேன். கெமருன் ஏன் மாறினார்? அவர் ஏன் வேற்றுரு எடுக்கிறார். தன் வீட்டையோ தன் மனைவியையோ அவர் பொருட்படுத்துவதில்லை; இரவில் தாமதித்துவர ஆரம்பித்தார். ஒருமுறை, இருமுறையல்ல. அது வழமையாகிப் போயிற்று. இதனால், என்னையே நான் நொந்து கொண்டேன். மகிழ்ச்சி எனக்குப் பிரியாவிடை கொடுப்பதைக் காண்கிறேன்.

"கெமருன் நாமிருவரும் ஒன்றாக ஒரு சிறிய பிரயாணம் மேற்கொள்வோம். வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதால் எனக்கு அலுப்பாயிருக்கிறது. நீங்கள் என்னிடம் சொன்னீர்களே... இத்தரணியில் உன்னோடு நான் பயணிப்பேன் என்று..."

"வீட்டுக்கென்ன? உனக்கேதாவது குறைந்தா போச்சி...?"

"நான் வீட்டிலிருந்து சலிப்படைந்து விட்டேன்... நீங்களோ இரவின் பெரும் பகுதியை வெளியில் கழிக்கிறீர்கள்"

"பெண் என்பவள் வீட்டில் கரிசனை கொள்பவளே... அதில் சலிப்படைந்து விடுபவளல்ல"

நான் உணவு மேசையைத் தயார் செய்து விட்டு உணவைக் கொண்டு வரும் போதெல்லாம் ஆட்சேபணைகள் தொடங்கும்...

"சாப்பாடு ருசியாக இல்லை."

உணவுத்தட்டை வீசிவிட்டு மேசையை விட்டு எழுந்துவிடுவார்.

இப்போது என் தாயிடம் நான் என்ன சொல்வேன்...? கெமருன் முட்டாள்தனமான கெட்டதோர் இளைஞர். அவரது பண்பாடுகள் மோசாமானவையென நான் கூறுவதா. அவரது மோசமான நடைமுறையை நான் எவ்வாறு தாயிடம் கூறுவேன். என்னை அறைவதற்கு அவர் கையை ஓங்கிவிட்டாரென அவளிடம் கூறுவேனா? ஏன்? அவரின் அடி தாங்க முடியாமல் என் உடலம் அழுகுரல் எழுப்புகிறது என அவளுக்குத் தெரிவிப்பதா? இப்போதெல்லாம் என் கண்கள் வீங்கிவிட்டன. அதன் நிறமோ கருமையாக மாறிவிட்டது. என் தலையே சிதறிவிடும் போலிருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA




இறைவா!
உலகிலுள்ள மரங்களை எழுதுகோலாக்கி
சமுத்திரங்களை மையாக்கி எழுதினேன்
தீர்ந்து விட்டன
உன் புகழல்ல
எழுதுகோலின் மைகள்

எம்.ரீ.எம். இர்ஷாத்
நஹ்ஜா கலாபீடம், வாழைச்சேனை




திசைமாறிப்
போய்விடுவேன்
என்கிறாய்
திசை பற்றி
யோசிக்காது
உன் பக்கம் நின்று
நிலை தவறிப்போன
எனக்கு
போகும் திசை
புதிசுதான் - உன்
குறுக்கல்கள்
இல்லாதவரையும்
புதிதாகப்
பயணித்துக்
கொள்வேன்
நான்...

வெலம்பொடையூர் - ரஸ்மியா தௌபீக்




# மீண்டோம்



நான் வாழ்ந்த மண்...
என்று உம்மா சொன்னபோது
அவள் காயங்களும்
அடிமனதின் ஏக்கங்களும்
ஏனோ எனக்குப் புரியவில்லை

சொந்த மண்ணுக்கே
சுற்றுலா போகும்
அபாக்கியம் வட புல
மக்கள் கண்டது...

குடும்பத்துடன் அங்கு
சுற்றியபோது
போகும் வழியெல்லாம்
உம்மா - தாம்
வாழ்ந்த மண்ணின் சுவடுகள்
சொன்ன படியே...

நகர எல்லையில்
கால் பதித்தபோது

அவள் முகத்தில்
எத்தனையோ ஏக்கங்கள்
அவள் சிந்தியது
ஆனந்தக் கண்ணீரா
ஆத்திரக் கண்ணீரா?

வாழ்ந்த வீட்டை - இன்று
பாதிச் சுவரும் மீதி கானகமுமாய்
கண்டபோது அவர்கள்
பட்ட வேதனையை
என்னால் காண முடிந்ததேதவிர
ஓடித்திரிந்த முற்ற வெளி
கூடிக் கதைத்த வீதி வழி
ஆடி விளையாடிய ஆல மரம்

இடி விழுந்த தென்னை மரம்
செல் உடைத்த பக்கத்து வீடு
என்னுறவுகள் ஒவ்வொன்றாய்
ஏக்கத்துடன் சொல்லித் தீர்த்தனர்...
ஏனோ...
என்னால் அதையெல்லாம்

உணர முடியவில்லை
நான் அந்த மண்ணுக்கு
சொந்தமில்லாததாலா?

நடயங்கள் காணும்போது
எம் உம்மம்மா சொன்ன
சோகக் கதைகள் சில
நினைவில் மின்னின

பனைமர வேலி
பார்ப்பதற்கு பசுந்தாக இருந்தாலும்
புதைகுழி வாழ்க்கை
கேட்பதற்கு பயமாக இருந்தது
குப்பிவிளக்குடன் பங்கருக்குள்
குடிபோன இடத்தை காட்டிச்
சொன்னபோது
உள்ளம் பலமாய்க் கனத்தது

என்னுறவுகள் முகத்தில்
என்றுமில்லாத ஏக்கம்
எதிர்பார்ப்பு, ஆனந்தம் - என
எத்தனையோ... அன்றுதான்
கண்டேன்
ஓ... அது சொந்த மண்ணில்
சொந்தமாகியதாலா...?

ஸபானா சுலைறப் - இஸ்லாஹிய்யா வளாகம்



# அழுது வடிக்கிறது

துப்பாக்கிகளும் குண்டுகளும்
வெட்டுக் கிளிகளை
வண்ணத்து பூச்சிகளை
கொல்ல வில்லை
மானுடத்தின் பெறுமதியான
ஆன்மாக்களைத் தவிர!

எச்.எம்.எம். பாஹிம் - இறக்காமம்

# மானத்தின் வாசமுகவம்

என் வார்த்தைகள்
சேய்மையாகிப் போயிற்று
உன் காதுகளில்

கண்ணீர்த் துளிகள்
பூமியை முத்தமிடு முன்னே
என்னுதிரத்தையல்லவா
சிந்திடச் செய்திட்டாய்

கவி வடித்த-என்
கரங்களையும் முடமாக்கி
புரட்சிக் கானங்கள்
இசைத்திட்ட
நாவையுமல்லவா
துண்டித்தாய்


எனக்குமோர்
இதயமிருப்பதை
நீ மறந்தேனோ?

இப்போதும்
சத்தியமிட்டுச்
சொல்வேன்
நீயொரு
துரோகியென்று

நஸீர் ஹாரிஸ்

# யாருக்கு?

வெயில் காலத்தில்
நாய்க்கு விசர்
பிடிக்கும்
தேர்தல் காலத்தில்
யாருக்கோ!
மக்களின்
பிரச்சினை
வெள்ளம்
பிடிக்குமாமே!



அ.கா.மு. றிஸ்வின் - மூதூர்

# பொழுது படுமுன்

பிர்அவ்ன், நம்றூதை
பின்னோக்கிப்பார் சற்று!
முடிவுகளின் விளைவை
உன்
முகவரிகளாக்காதே!
அபூ லஹபாய்,
அபூஜெஹ்லாய்
அதிகாரம் பண்ணாதே!
அந்திமம் உன்னை
அழித்துவிடும்
ஜாக்கிரதை!



ஏறாவூர் தாஹிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Media Workshop

## நான்கு தசாப்த ஊடக அனுபவத்தின் புதிய பரிமாணம்

மிகக் குறுகிய காலத்தினுள் வெற்றிகரமாக 03 சமூக ஊடக செயலமர்வுகளை நடத்திய Just Media Foundation ஊடக நிறுவனத்தின் 4ஆவது சமூக ஊடக செயலமர்வு–கல்முனையில்...

**23.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)**
காலை 09.00- மாலை 05.00

முதலீடு 2100/= மாத்திரமே
(மதிய உணவு, சிற்றுண்டி உள்ளடங்கலாக)

JMF ஊடக நிறுவனம் Insight Institute உடன் இணைந்து நடத்தும்

**ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வு**

Facebook, Twitter, Youtube, Linkedin, Flickr, Blogger, Livestream போன்ற நாம் அனைவரும் பயன்படுத்தும் சமூக வலைதளங்களே சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படுகிறது.

குறிப்பிட்டளவு தொகையினரே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

E-Money, E-Marketing என்பன விஷேடமாக கற்றுத் தரப்படும்

சமூக ஊடகங்கள் மூலம் உங்கள் தொழிலை முன்னேற்றலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

1 வது செயலமர்வு கொழும்பு நகரில்
2 ஆவது செயலமர்வு புத்தளத்தில்
3 ஆவது செயலமர்வு மாவனல்லையில்

எமது அடுத்த ஊடக செயலமர்வுகள் நடைபெற உள்ள இடங்கள்
திஹாரி
அக்குரனை
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

உங்கள் ஊரிலும் சமூக ஊடக செயலமர்வு நடைபெற விரும்பினால் தொடர்புகளுக்கு:
0777 871758
071 9392121

Just Media Foundation
77, Dematagoda Rd, Colombo-09
www.facebook.com/JMFSriLanka

## ஏற்றுமதி தரத்திலான அபாயாக்களை விற்பனை செய்வதற்கு



ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட அபாயா உற்பத்திக் கம்பனியின் உயர் தரத்திலான அபாயா உற்பத்திகளை நாடு முழுவதிலும் சந்தைப் படுத்துவதற்கு வியாபாரத்தில் ஆற்றலும் அனுபவமும் மிக்க

- முகவர்கள்
- வியாபாரிகள்

உடனடியாகத் தேவைப்படுகின்றனர்

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை 10 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Director Marketing
Rafa Exports (pvt) Ltd.
241D, Hospital Road,
Nambuluwa,
Pasyala

குறிப்பு: மிக விரைவில் கண்டி வீதி திஹாரியில் ஒரு காட்சியறை திறக்கப்படவுள்ளது

T.P: 033-2284115/077-7060950
Email: rafaexpvt@gmail.com Web : www.rafaexports.com

## அல்ஹஸனாத்தின் அடுத்த இதழ்



**ரமழான் சிறப்பிதழாக மலரும்**

இன்ஷா அல்லாஹ்

அருள் நிறைந்த ரமழானை அலங்கரிக்கும் அல்ஹஸனாத்!

- பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
- விற்பனை முகவர்கள் தயாராகுங்கள்

30 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்படவுள்ள ரமழான் சிறப்பிதழில் விளம்பரம் செய்வதோடு தஃவாப் பணிக்குப் பங்களிப்புச் செய்த நன்மையையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
0112689 324, 0778466280, 0777 396306


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.